உலகப் பெரியார்

# காந்தி சிந்தாமணி

ல:513

ஆசிரியர் :

தமிழ்ப் பெரும்புலவர், கணியர், டாக்டர்,

இ. மு. சுப்பிரமணிய பிள்ளை,

அமைச்சர், சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கம்.

1948.

# முன்னுரை.

கவிமணி திருவாளர்

## சி. தேசிகவிநாயகன் பிள்ளையவர்கள்,

புத்தேரி.

காந்தியடிகள் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த பெரியார். இவர் வாய்மையில் அரிச்சந்திரன்; கருணையில் புத்தபெருமான்; தியாகத்தில் ஏசுநாதர்; மக்கள் அடிமைப் படாமலும் அடிமைப்படுத்தாமலும் சமாதானமாக இன்ப வாழ்வு வாழவேண்டு மென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு தம் வாழ்நாள் முழுதும் உழைத்தார். சண்டை சச்சரவுகள் ஓய்ந்து சமாதான வாழ்க்கை நிலவுவதற்கு இவர்கண்ட அருள்நெறியே சிறந்ததென்று பலநாட்டறிஞர் களும் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். நம் இந்திய நாட்டின் விடுதலைக்காகவும் சமுதாய முன்னேற்றத்துக்காகவும் இவர் உழைத்த உழைப்பு இம்மட்டு அம்மட்டென்று வரையறுக்க இயலாது. தம் உத்தமக் கொள்கை காரணமாகவே உயிரி ழந்த பெரியார் இவர். இப்பெரியாரின் புகழ் விண்ணும் மண்ணும் முட்டி நிற்கின்றது. தம்முழைப்பாலும் தியா கத்தாலும் இக்கலியுகத்தைக் காந்தியுகமாக்கிய இம்மகா னின் பொன் மொழிகளைப் பொன்னேபோல் போற்றி அதன்படி ஒழுகவேண்டுவது நம் கடமையாகும்.

தமிழ்ப்பெரும் புலவர், கணியர், டாக்டர் இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இப்புண்ணிய மூர்த்தி

யின் வரலாற்றை நல்ல முறையில் அழகாக எழுதி வெளி யிட்டிருக்கிறார்கள். பிள்ளையவர்களுடைய தமிழ்ப் பற்றை யும் பயிற்சியையும் புலமையையும் குறித்து நான் எடுத்துச் சொல்லவேண்டுமென்பதில்லை. அது தமிழ்நாடு நன்கறிந்த உண்மையாம். நூல் இனிய எளிய தமிழ் நடையில் யாவ ருக்கும் பொருள் விளங்குமாறு அமைந்திருப்பது குறிப் பிடத் தக்கது. இச்செய்யுள் நூல் மாணவரிடையே உயர் பள்ளி மேல் வகுப்புக்களிலும் கல்லூரி வகுப்புக்களிலும் பாடமாக வைக்கப்பெற்றால் காந்தியடிகளுடைய உலக ஒற்றுமைக்கேற்ற சிறந்த ஒழுக்கமுறை மக்களிடையே எளிதில் பரவிப்படிந்து பெருநலம் பயக்கும் என்பது என் கருத்து. ஆதியோடந்தம் நூலைப்படித்து நான் இன்புற் றேன். ஏனையோர்களும் அவ்வாறே படித்து இன்புறு வார்களென்று நம்புகிறேன்.

தேசிகவிநாயகன்.

25—1—1949.

# அணிந்துரை.

நீதிபதி திருவாளர்

**மாதவையர் அனந்தநாராயணன், I. C. S.,**

*அவர்கள்,*

திருநெல்வேலி. 2-2-1949.

தமிழ்ப்பெரும் புலவர் திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை அவர்கள் இயற்றிய "உலகப் பெரியார் காந்தி சிந்தாமணி" என்னும் இச் சிறு நூல், காந்தியடிகளின் வாழ்க்கை வரலாற்றை, உலகெலாம் துயருற அவர் மறைவெய்திய காலம்வரை அகவற்பாவில் அமைந்து, இனிது கூறுவது. காந்தியடிகள் "என் மெய்நெறி ஆராய்ச்சிகளின் சரித்திரம்" என்று இயற்றிய அவரது ஒப்பற்ற சுயசரிதையையும், பிற்காலத்து நிகழ்ச்சிகள் கூறுமிடத்து, ஐயமின்றி ஒப்புக் கொள்ளக்கூடிய பத்திரிகை ஆதாரங்களையும் தழுவியது. நாட்டின் தந்தையெனவும், உலக மகானெனவும், உலக சாந்திக்கே ஒளி வழங்கிய பெரியாரெனவும் பலரும் போற்றும் காந்தியடிகளின் சரிதையை ஆண், பெண் பாலரும் யாவரும் படித்து இன்புறல் கடமையாகும். இது நிற்க.

தமது "பாஞ்சாலி சபத"த்தின் முன்னுரையில் தமிழ் நாட்டுக் கவிஞர் திரு. சி. சுப்பிரமணிய பாரதியார், "எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்துகொள்ளக்கூடிய சந்தம் இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்

தருவோனாகின்றான்" என்று அறிவுறுத்துகின்றனர். இக்கொள்கையைத் தழுவியது இச் சிறந்த நூல். நமது ஆசிரியர், தமிழ்ப் புலவராயினும், அரும்பதங்களை விடுத்து, யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய சுவைமலிந்த எளிய செய்யுள் நடையைக் கையாண்டிருக்கிறார். குறைவாகவே தமிழ் பயின்றவரும், செய்யுள் நூலென அஞ்சாது, அழகில் அமைந்த இச்சிறு நூலைப் படித்து இன்புறல் கூடும். உண்மையில், தாம் எடுத்துக்கூறும் பொருளின் பெருமையினாலும், அதை நினைந்துருகிய மனப்பண்பினாலும், நமது ஆசிரியர் நடை எளிமை, இனிமை, சுவை பெற்றுத்திகழ்கின்றது. "யாரார் சொன்னாலும் இனிக்குமே" என்று அவர் கூறியது, கேவலம் தம் அனுபவமேயன்றி, மிகையன்று.

"புன் கவியெனத் தெளிவின்றி" என்பது கம்பன் வாக்கு. இனியாகிலும், தமிழ்ச் செய்யுள் நடை, புலவரிடத்தும் பாமரரும் அறிந்து மகிழும் வண்ணம் புத்துயிர் பெறுவதாக.

**மா. அனந்தநாராயணன்.**

வெ. இராமலிங்கம்பிள்ளை, நாமக்கல்,

அரசவைக் கவிஞர். 23—10—1949.

மகாத்மா காந்தி உலகம் இதுவரையிலும் கண்டிராத அற்புதம். அவரை ஏகபத்தினி விரதத்திற்கு இராமபிரான் என்றும், பற்றற்ற கருமம் செய்வதில் கண்ணபிரான் என்றும், சத்தியத்தில் அரிச்சந்திரன் என்றும், அகிம்சைக்குப் புத்தர்பிரான் என்றும், இல்லற ஒழுக்கத்திற்குத் திருவள்ளுவர் என்றும், ஆன்மஞானத்திற்குச் சங்கரர் என்றும், சீவகாருண்யத்திற்கு இராமானுசர் என்றும், சாத்வீக எதிர்ப்பு, சத்யாக்கிருகத்துக்குப் பிரகலாதன் என்றும், சமரச சன்மார்க்கத்துக்கு வள்ளலார் இராமலிங்க சுவாமிகள் என்றும் பல அறிஞர்கள் பலவிதமாகப் புகழ்ந்துரைக்கிறார்கள். இத்தனையும் பொருந்தும்; இதற்கு மேலே சொன்னாலும் போதாது. காந்தியடிகள் வாழ்ந்து காட்டிய நன்னெறி ஒன்றுதான் இப்போது உலகிலுள்ள பல தீமைகளுக்கும் உகந்த மருந்து. அந்த நன்னெறியை யார் யார் எப்படி எப்படிப் பரப்பினாலும் அது மனித வர்க்கத்துக்குச் செய்கின்ற அரும்பெரும் தொண்டாகும்.

அப்படிப்பட்ட திருப்பணியைத் தமிழ்ப் பெரும் புலவர் உயர்திரு இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் தம்முடைய "காந்தி சிந்தாமணி" என்ற வசனகவிகள் அடங்கிய எளிய நடையிலுள்ள புத்தகத்தின் மூலமாகச் செய்திருக்கிறார்கள். அதை என் மனமார வாழ்த்துகின்றேன். இந்த நூல் பண்டிதர், பாமரர், முதியவர், இளைஞர் ஆகிய எல்லோருக்கும் பலன் தரக்கூடியது. இதனை எல்லோரும் படித்து நலமுற வேண்டும் என்பதும், இந்நூல் பள்ளிக்கூட உயர்வகுப்புக்களில் பாடமாக வைக்கப்பெற வேண்டும் என்பதும் என் விருப்பம்.

வெ. இராமலிங்கன்

**S. G. MANAVALA RAMANUJAM,**
M.A., Ph. D. (Lond.) D. I. C.,
F. R. M. S., F. Z. S. Etc.,
*Vice-Chancellor,*

Annamalai University
Annamalainagar,
(Via) Chidambaram,
*13th Oct. 1949.*

It was with interest I read Pandit E. M. Subramania Pillai's Book **"Gandhi Chinthamani"**. It is a praise-worthy attempt to depict Mahatma Gandhi's life in a poetical form, for verse has an attraction all its own for the Indian mind. The verses are written in a poetico-prose style; the language is simple and easily understood. The Mahatma's life is full of lessons for the youth of to-day and the book may well be placed in the hands of pupils of secondary schools. I hope the book will serve a useful purpose apart from its literary merit.

S. G. MANAVALA RAMANUJAM.

# நன்றியுரை.

உயர்திருவாளர் காந்தியடிகள் உலகுக்கு ஒரு பெரியார். அவர் நடந்துகாட்டிய சிறந்த ஒழுக்க முறைகள் உலகத்தார் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் பெருமையின; அவை யாவையும் தமிழ் மக்கள் ஒழுக்கமுறைகளே; ஆதலின் அடிகள் வரலாறு உலகப் பொதுமறையாம் திருக்குறளுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. இதனை நன்றாக ஊன்றிப்படித்து அனைவரும் நலம்பெற வேண்டும் என்பதே இந்நூலின் நோக்கம்,

இந்நூலுக்கு முன்னுரை வழங்கிய கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்களுக்கும், அணிந்துரை யருளிய நீதிபதி அனந்தநாராயணன் அவர்களுக்கும், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மணவாள ராமானுசம் அவர்களுக்கும், அரசவைக்கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளையவர்களுக்கும் எமது நன்றி என்றும் உரியது, உலக நலம் ஒன்றே கருதி இந்நூலை வெளியிட்டுதவிய கணேசன் அச்சக உரிமையாளர் சு. சுடலைமுத்துப்பிள்ளை யவர்கள் நன்றி என்றும் மறக்கமுடியாத பெருமையது.

குறைகளைப் பொறுத்து இந்நூலை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழ்ப் பெருமக்களை அன்புடன் வேண்டிக்கொள்கின்றேன்.

தி. மு. சுப்பிரமணியபிள்ளை

25—5—1950.

# பொருள் அடக்கம்


| பொருள் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை, அணிந்துரை, நன்றியுரை | முகப்பு |
| க. | தோற்றுவாய் | 1 |
| உ. | பிறப்பு | 4 |
| ௩. | இளமையும் கல்வியும் | 6 |
| ௪. | திருமணம் | 13 |
| ௫. | உயர்பள்ளிக்கூடத்தில் | 16 |
| ௬. | இங்கிலாந்துப் படிப்பு | 32 |
| எ. | பம்பாயிலும் அரசகோட்டையிலும் | 43 |
| அ. | தென்னாப்பிரிக்காவில் வழக்கு வென்றது | 47 |
| ௯. | நேத்தால் இந்தியர் பேரவை | 61 |
| ௰. | இரண்டாம்முறை தென்னாப்பிரிக்காவில் | 69 |
| கக. | மூன்றாம்முறை தென்னாப்பிரிக்காவில் | 83 |
| கஉ. | இந்தியாவில் வாய்மைப்போர் | 121 |
| க௩. | மாமுனிவர் மறைவு | 139—144 |

# காந்தி சிந்தாமணி

(காப்பு.)

சீராரும் காந்திசிந் தாமணிச் செம்மையினை
யாரார்சொன் னாலும் இனிக்குமே — ஆராத
அன்புடனே யாம்கூற ஆதி பகவனார்
பொன்புகழே இன்று புகல்.

## க. தோற்றுவாய்

*சீரார் திருவுடைச் செல்வர் சிறந்த
பேரார் காந்திப் பெருந்தவர் பிரிவிலா
அன்புசேர் நெஞ்சர் அறநெறி தவறார்
துன்பம் மிகுந்து தோன்றும் உலகினை
இன்பம் பொருந்த எழுப்புசிந் தாமணி*

*அன்புஉருக் கொண்டார் அரும்பெருந் தொண்டர்
இவர்புகழ் பேச எமக்குவாய்ப்பு அமைந்தது
தவமே! என்னை? தவம்எங் ஙனம்ஆம்?
" கடவுள் புகழினைக் காதலித்து உரைத்தலே
இடந்தரு தவம் " எனச் சில்லோர் கூறுவர்.*

*" உலகில் உயிர்க்குஎலாம் உற்ற துணையாய்
இலகும் எம்மான் இன்னருள் காட்டும்
வழியே தவவழி, வாழ்ந்திட அதுவழி;
பழிபோம், பதிஅருள் பதிந்திடும் எனவே
நம்பி வாழ்க்கை நடத்தும் தொண்டர் தம்*

செம்மைப் புகழ்சொலும் சீரெலாம் தவமே”
எனவும் சிலபேர் இயம்புவர். யாமோ,
“மனமும் வாக்கும் செயலும் ஒன்றி
உண்மை உலகுக்கு ஒருகாந்தி ஆகி
அண்மையில் உலகுஎண் சிந்தா மணிஆய்

விளங்கிடு பெரியார் விரும்பி வாழ்ந்த
உளம்கவர் வழிஎலாம் உரைத்தால் இன்று
சாதிச் சண்டையும் சமயப் பிணக்கும்
பேதித் திடவே பிரிந்து துன்புறும்
இளைஞரும் முதியரும் யாவரும் இனிதே

கிளைஞராய் நல்வழி கேட்டு நடந்து
நலம்பெறும் வழிஆம், நன்மையே பெருகும்,
உலகவர் ஒன்றுபட்டு ஒன்றே குலமும்
ஒருவனே தேவனும் என்பதை உணர்ந்து
பெருவாழ்வு அடைவரே! பேசுவோம்” எனவே

துணிந்து கூறத் தொடங்கினோம் இந்நூல்,
பணிந்து புலவர் பதமலர் தொழுதே.
இதனினும் பெருந்தவம் யாங்குஉளது எமக்கே!
அதனால், ஐயர் பிறந்து வளர்ந்ததும்,
தவறுகள் செய்து தாமே திருந்தி

அவம்தொலைத்து அருள்வழிச் சேர்ந்ததும், சீமை
சென்று கற்றதும் திரும்பி வந்ததும்,
தென்னாப் பிரிக்கா தேடிச் சென்று
தொல்லையில் ஆழ்ந்து துணைஇலாது ஏங்கிய
எல்லையில் இந்தியர் யாவரும் நலம்பெற

அல்லல் எத்தனை அத்தனை அடைந்தே
வெல்லல் வழிஎன வீறுகொண்டு எழுந்ததும்,
வெற்றி மாலை பெற்றதும், விருப்புடன்
பெற்றதாய் நாடு பேணித் திரும்பி
அடிமை வாழ்வை அகற்றும் ஆசையால்

படியில் எங்கும் உணர்ச்சி படிந்திடப்
படாத பாடெலாம் பட்டுநாடு ஆளுவோர்
அடாததும் செயலெலாம் அறிந்தே "இனிநாம்
சென்று விடுதலை சீரிய வழி" என
நன்று உணர்ந்து நடந்திடச் செய்ததும்,

"விடுதலை பெற்றோம், விரிந்த அறிவினீர்!
விடுதலை உண்மையா வேண்டினீர் ஆயின்
இன்னா செய்தார்க்கும் இனியவே செய்திடும்"
என்ன இடைவிடாது எடுத்து எடுத்து உரைத்ததே
இன்னலா வந்ததும், ஏற்றுஅவர் மகிழ்ந்ததும்,

மன்னரும் தலைவரும் மந்திரி மார்களும்
வந்தனை செய்து வாழ்த்திப் புகழ்ந்ததும்
இந்தநூல் இயம்பும் இனிது அருள் குறித்தே.

## ௨. பிறப்பு.

இந்தியத் தாய்க்குஉயர் இருதயம் போன்ற
வந்தனைக்கு உரிய வளநாடு கதேவார்
மன்னர் பலபேர் மாண்புடன் ஆளச்
சின்னஞ் சிறுசிறு பகுதியாய் விளங்கும்.
ஒவ்வோர் அரசரும் ஓங்குமதி மந்திரி
எவ்வழி காட்டினர் அவ்வழி ஆண்டனர்.
ஆங்கண் போர்பந்தர் ஆட்சியை அழகாத்
தாங்கிய குடும்பம் தகுபுகழ்க் காந்தி
குடும்பம் எனவே கூறுவர்; அதுதான்
வடுஇல் லாமல் வாழ்ந்தது மூன்று
தலைமுறை தொடர்ந்து தலைமை மந்திரி
நிலைமை நீடிக்க நின்மலன் அருளினால்;
பனியா வணிகர் பண்பார் குலத்தில்
முனிவர் மோகன தாசு கரம்சந்து
காந்தி பிறந்தார், களித்தனர் பெற்றோர்.
காந்தி தந்தையார் கரம்சந் திரரும்
மந்திரி; அவர்தம் தந்தை உத்தம
சந்திர ரும்அவர் தந்தையும் சார்புகழ்
மந்திரி என்றால் மதிக்கவும் படுமோ
நம்பெருந் தோன்றல் நலம்சேர் திருவினை!
கரம்சந் திரராம் காபா காந்தி
நிரம்பு புகழார் நீதிமன் றத்திலும்
அரச குடும்ப வழக்குகள் ஆயும்
திரம்சேர் உறுப்பினர் ஆகித் திகழ்ந்தார்;
அரசகோட் டையிலும் வங்கநே ரியிலும்

அரசுசெய் திருந்தார் அமைச்சர் ஆகியே.
நான்கு முறைஅவர் நன்மணம் புரிந்தார்;
பாங்குடன் இரண்டு பாவையர் அவர்க்கு
முதல்இரு மனைவியர் வயிற்றில் முளைத்தனர்.
புதலி பாய்தான் போற்றும் கடைசி
மனைவி; அவரிடம் மகவுபெண் ஒன்றும்
மனவலி மிகும்ஆண் மக்கள் மூவரும்
தோன்றினர்; அவர்தமுள் கடைசித் தோன்றலாம்
ஊன்று புகழ்நம் ஓங்கு காந்தியார்
வள்ளுவர் ஆண்டா வாய்த்தஆ யிரத்துத்
தொள்ளா யிரம்புரட் டாசிபத் தெட்டில்
சனியின் கிழமை சார்மக நாளில்
தனிப்புகழ் பெறவே தாரணியில் தோன்றினர்.
காபா காந்தியும் புதலி பாயும்
"காவாய் கடவுளே" எனவாழ்த் தினரே.

## ௩. இளமையும் கல்வியும்.

"தோன்றில் புகழொடு தோன்றுக" என்னும்
மறைமொழி தனக்கு மாண்இலக் கியமாய்த்
தோன்றிய மோகன தாசர் தொல்குலத்
தந்தை காபா காந்தி தக்கவர்.
ஐந்தாம் வகுப்பே அவர்படித் திருந்தது.
ஆயினும் அமைச்சர் அருங்குடிப் பிறப்பால்
அறிவும் அவர்க்கு விரிந்துஅகன்று இருந்தது.
கடுமை யான சிக்கல் களையும்
கடிதில் நீக்கும் கனம்அவர் உடையவர்.
பெற்ற தாயினும் பெரிதும் பேணினர்
தாம்பிறந் தருளிய தனிப்புகழ் நாட்டினை.
அரச கோட்டையின் அரசர்க்கு அமைச்சராய்
விளங்கிய போது ஒரு வெள்ளை அதிகாரி
அரசனை இகழ்ந்தனன் அவர்முன் னிலையில்.
இங்கிலாந் திலிருந்து இந்தியா விற்குப்
பிழைக்க வந்தவர் பெருமை உடையர்போல்,
தீனி பெறத்தாம் தெருஅளந்து அலைந்த
தம்தாய் நாட்டில் தம்நிலை மறந்தே
ஆட்சி செய்யும் கூட்டம் ஆதலின்
மயங்கி நாட்டு மன்னவர் களையும்
இகழ்ந்திடும் திமிரை என்னெனச் சொல்வது?
அடிமை வாழ்வினில் ஆழ்ந்தனர் இந்தியர்.
நாட்டைக் காக்க நமனையும் எதிர்க்கும்
சிறந்த தொண்டர்மேல் சீறி விழுந்து
தண்டினால் அடித்தும் குண்டினால் சுட்டும்

வம்புகள் புரியும் தம்நலர் ஓங்கினர்;
நாட்டு நலத்தை மறந்தனர். மேலும்
மேல்நிலை பெற்றிட ஆசை மேவிடத்
தாம்பெறு மகனையும் தடியால் மோதிய
தந்தையர் தாமும், தம்மைப் பெற்ற

தந்தையை அடித்த தனயர் தாமும்
பல்லோர் இருந்தனர். பாவிகள் கண்முன்
பதவி உயர்வும் பாழ்வயிறு நிரம்பலும்
தோன்றின; தாங்கள் தோன்றிய நாட்டைத்
தாயெனப் பேணும் தன்மை மறந்தனர்.

“இந்த இழிந்த நிலைமை மாறித்
தம்உயிர் கொடுத்தும் தாய்நாடு காக்கும்
பெருமை சிறந்த பிள்ளைகள் பிறப்பரோ?
என்றுநம் நாடு விடுதலை எய்துமோ?”
எனவே நெஞ்சம் ஏங்கி இருந்த

காபா காந்தியும் கண்டார் தம்முடை
அரசரை இகழ்ந்த ஆங்கிலன் தன்னைத்
தடுத்து நின்று “தகாது பேசினீர்”
என்று கடிந்தார்; எழுந்தான் ஆங்கிலன்
சினம்மிகக் கொண்டு செழும்தீப் போலக்

கண்கள் சிவந்திடக் கத்தினன், “உடனே
மன்னிப்புக் கேளும், மதியிலீர்” என்றான்.
மானமே உயிரினும் மாட்சி உடையது
ஒருமயிர் நீப்பினும் உயிர்விடும் கவரிமா.
உண்மை இதனை உணர்ந்த காபா

பணிவரோ? உடனே பண்பிலான் அவரை
அதிகார வெறியால் காவலில் அமைத்தனன்.
அதனால் சிறிதும் அஞ்சினர் அல்லர்;
"நேர்மை ஆன நிலைமையும், அஞ்சா
உள்ளமும்" கண்டே உடைந்தான் ஆங்கிலன்.

கொடிய நெஞ்சில் குற்றம் உணர்ந்துஉடன்
விடுதலை செய்தான் வீரர்க்கு வீரரை.
'தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்
தன்நெஞ்சு தானே தன்னைச் சுட்டிடும்"
என்பது தேவர் இன்மொழி அன்றோ?

பெருமைசேர் காபா காந்தியைப் பேணும்
புதலிபாய் அம்மையார் புகழ்மிகும் கற்பினர்;
தெய்வத் திருஅருள் தேர்ந்து நாளும்
கோவில் போய்த்தொழும் கொள்கையர்; அடிக்கடி
பட்டினி பலநாள் பண்புடன் இருந்து

நோன்புகள் நோற்பார்; நோகாது உடலமும்.
பசியே துன்பம் பலவும் ஆக்கிடும்;
கோளே களவே கொடுங்கொலை அதுவே
செய்யத் தூண்டிடும் சீர்இலாப் பசியே.
அதனை அடக்கும் ஆற்றலைப் பெற்றவர்

தீமை எல்லாம் தீர்ந்துஉயர்ந் திடுவர்;
தன்நலம் கருதும் தன்மை குன்றும்;
பிறர்நலம் பேணும் பெருமை ஓங்கிடும்.
பட்டினி நோன்பினைப் பரிந்து போற்றிய
தெய்வத் திருமகள் திருமகன் ஆக்ப்

பிறந்தநம் பெரியார் மோகன தாசர்
எல்லா நலமும் எய்திய இக்குலக்
குணநலன் யாவும் கொண்டார் இயற்கையில்.
தந்தையும் தாயும் தம்கடைக் குட்டி
மகனார் மதிநலம் கண்டு மகிழ்ந்தனர்.

தம்மில் தங்கள் மக்கள் அறிவுதான்
மாநிலம் மன்னும் உயிர்க்கெலாம் இனிது" எனப்
பொய்யில் புலவர் புகன்றுளார் மறைமொழி.
"அவையத்து முந்தி அமரச் செய்தலே
தந்தை தனயற்குத் தான்செயும் நன்றியாம்"

மோகனர் ஆறாண்டு முடியபோர் பந்தரில்
கல்வி கருத்துடன் கற்றார்; அதன்மேல்
இராச கோட்டை என்னும் ஊரினை
அடைந்து விருப்புடன் ஆரம்பக் கல்விக்
கூடத் தினிலே கூடி மாணவருடன்

கல்வி பயின்றார் காந்தி; பின்னர்,
வயதுபன் னிரண்டு வந்ததும் உயர்நிலைப்
பள்ளியிற் சேர்ந்து படித்தார் பண்புடன்.
"தம்ஆ சிரியரே தந்தையும் தாயும்"
எனமதித்து அன்புடன் வழிபடும் இயல்பினர்

நமது காந்தி நற்பெருந் தலைவரும்;
குற்றம் பலவே கொண்டவர் ஆயினும்
தெய்வம்ஆ சிரியர் எனவே தெளிந்தவர்.
'பதவியில் ஆசான் பதவியே உயர்ந்தது;
காரணம் குற்றம் சாரா நிலைதான்"

எனவே உலகோர் இயம்புவர். இதற்கு
மாறு ஒருகால் மதிப்புஇலா நிகழ்ச்சி
நடந்தது கேண்மின்; நலம்இல் ஆசிரியர்
கல்விக் கண்காணிப் பாளர் இடத்தில்
தமது மாணவர் தகுதியைக் காட்டி

நற்பெயர் வாங்க நமது காந்தியையும்
பக்கமா ணவரைப் பார்த்துஎழு தும்படி
தூண்டினர்; அவர்க்குஅது தோன்ற வில்லை,
கால்நுனி யாலே மிதித்துக் காட்டியும்.
கள்ளம் அறியாக் களங்கம்இல் காந்தி

உள்ளம் தீமை உணருமோ? ஆயினும்
அவ்வா சிரியரை அகலாது அவர்அடி
வணங்கிப் பணிந்து வாழ்த்தினர் காந்தியும்.
பாட நூல்கள் படிப்பதைத் தவிர
வேறு நூல்கள் விரித்தே அறியார்.

ஏமாற்று தற்கும் இகழப் படற்கும்
விரும்பா உள்ளமே வேண்டா வெறுப்பாய்ப்
பாடங்க ளாவது படிக்கச் செய்தது.
சிரவணன் நாடகம் சீர்அரிச் சந்திரன்
நாடகம் இவைகளை நடிக்கக் கண்டார்.

படித்தும் பார்த்தார்; பதிந்தன மனத்தில்
பெற்றோர்க்கு அன்பும் பெருமைசேர் வாய்மையும்.
சிரவணன் என்பான் சிறுவன், துணையிலான்,
காவடி தன்னில் கண்இலாப் பெற்றோர்
தங்களைத் தானே தாங்கிச் சென்று

பாதுகாத் தமையைப் பார்த்தார் காந்தியார்;
உள்ளம் உடைந்து உடைந்து உருகினார்; உடனே
தமதுதாய் தந்தையர் தமக்குத் தாமும்
பணிவிடை செய்யும் படிஅறிந்து உயர்ந்தார்.
"இயற்கையா வாய்சொலும் சொல்லே வாய்மை.

உள்ளம் உள்ளுவது உண்மை; அதனை
மெய்தான் செய்வது மெய்மை" எனவே
பண்டைத் தமிழர் பதங்களை அமைத்தனர்.
"வாய்மை ஆவது தீமைசே ராதது"
என்பதும் தேவர் இயம்பிய உண்மை.

ஒப்பிலா உண்மை இதனை உணர்ந்த
அரிச்சந் திரன்எனும் அரசர்க்கு அரசன்
சொன்ன சொல்லைச் சோர்வுஇல் லாமல்
பாதுகாப் பதற்காப் பதியை இழந்ததும்
பாலனை இழந்ததும் பாரினில் யாரும்

பட்டுஅறி யாத்துயர் பட்டதும் பார்த்தார்.
நெஞ்சம் நெக்குநெக்கு உடைந்தார். நேர்மையைக்
காக்கப் பின்னும் காவலன் கையில்
வாளை ஏந்தியே, தன்அடி வணங்கிக்
"கற்புஉடை யவர்க்குக் கணவனே கடவுள்"

என்ற உண்மையை இவ்உல கத்தார்
உணரக் காட்டி ஓங்கிய பெண்மணி
சந்திர மதியாள் தலைதனைச் சாய்த்திட
நின்றதும், முனிவன் நேரில்வந்து அவனை
"ஒரு பொய் சொன்னால் உலகுதான் தருவேன்

துயர்எலாம் தொலையும் தோன்றும் இன்பம்.
மன்னர் மன்னனாய் மாண்புடன் வாழலாம்"
என்று தூண்டியும், "இனி எமக்கு உளதாம்
கதிஇ ழுக்கினும் கட்டுரை இழக்கிலோம்"
எனவே மன்னன் இயம்பி மனைவியை

வெட்டிய மெய்ம்மையும், விரும்பும் மாலையா
வடிவாள் கழுத்தில் விழுந்த வாய்மையும்,
உலகு உயிர்க்கு எல்லாம் ஒரு முதல் ஆகிய
பசுபதி தோன்றிய பான்மையாம் உண்மையும்
கண்ஆரக் கண்டார்; கண்ணீர் வடித்தார்

மெய்ம்மையின் மேன்மையை மேவினர் உடனே;
"உயிர்போ னாலும் உண்மையைக் காப்பேன்.
உண்மை என்பது உயிர்களை எல்லாம்
அன்பால் ஆதரித்து அணைப்பது. இனியான்
மறந்தும் பொய்ம்மையாம் தீமையை மதியேன்"

என்ற தவத்தை ஏற்றார்
இணையிலார் காந்தியார். இவர்புகழ் வாழியே!

அரிச்சந் திரன்அரும் சிரவணன் ஆம்இவர்
வரலாறு உண்மையா? வல்லவர் காந்தியார்,
"நடந்தவை அல்ல எனினும் நமக்குஇவை
ஒப்புஉயர்வு அற்ற வாய்மை ஒழுக்கமும்
பெற்றோர் தம்மைப் பேணிடும் அன்பும்
எடுத்துக் காட்டும் இணைஇலாத் தெய்வ
வரலாறு ஆக வாய்த்துள; இன்றும்
அவைகளை நினைப்பின் அகம்நெகிழ்ந்து உருகிடும்"
எனச்சொலி உண்மை எடுத்துஉரைத் துள்ளார்.
வயது பதின்மூன்று வந்ததும் இவர்க்குத்
திருமணம் நடத்தத் தீர்மா னித்தனர்;
கத்தூரி பாய்மெய்க் காதலி ஆயினர்
காந்தியார் பிறந்த போர்பந் தரில்அவர்
பிறந்தஅவ் ஆண்டிலே பிறக்கும் பெருமை
உடையர் ஆயினார் உயர்கத் தூரிபாய்.
இவர்நமக்கு இளையவர் மாதவ தாசர்
கூற்றின் வண்ணம் கொண்டால் அம்மையார்
மணவா ளரினும் மூன்று மாதங்கள்
இளையவர்; இலக்குமி தாசர் என்பவர்,
காந்தியின் மூத்த அண்ணனார், கருதிக்
கூறிய பேச்சைக் கொள்ளின் அம்மையார்
ஆறுமா தங்கள் ஐயரின் மூத்தவர்.
முவ்ஈர் ஆண்டின் முன் முடிவான படியே
ஒத்த வயதினர் ஆம்நம் உண்மைக்
காந்தியும் கத்தூரி பாயும் திருஅருள்

கூட்டக் கணவன் மனைவியாக் கூடினர்.
இளமை மணத்தை எதிர்த்துக் கெடுத்துக்
காதல் மணத்தை நாட்டக் கங்கணம்
கட்டிய பெரியார் காந்தி ஆயினும்
அறியாப் பருவத்து அவர்மணம் ஆயது.

' கணவன் மனைவியைக் கைவிடல் தவறு.
மனைவியும் கணவனைக் கடவுளா மதித்துஅவன்
ஆணை வழியே அகலாது நிற்றல்
கடமை; ஆதலின் கத்தூரி பாயைஎன்
சொல்வழி நிற்கச் சொல்லி அவளைப்

பெண்கள் திலகமாப் பேணிச் செய்வேன் ''
எனவே எண்ணி இளைஞராம் காந்தியார்
" அங்குநீ செல்லேல், இங்குநீ வந்திடு,
எங்குபோ னாலும் என்னிடம் ஆணைகேள் ''
என்பார்; அம்மையார் அடிக்கடி இவரிடம்

கேட்டுத் தடுத்த இடத்தும் கேளார்
விரும்பிய இடம்போய் வீடு திரும்புவார்.
இதனால் அடிக்கடி இவர்தமுள் சண்டை
வளர்ந்தது; வாய்ப்பேச்சு இராது சிலநாள்.
இதனைப் பிற்காலம் எண்ணிய பெரியார்

" கள்ளம் கரவடம் கடுகுஅள வும்இலாப்
பெண்ணைக் கணவன் பெரிதும் அடக்கி
வைக்க முயலுதல் வகைதெரி யாமையே.
கடவுளைக் காணக் கோவில் போவதும்
தோழிமா ரிடத்தில் தோன்றும் அன்பால்

பார்க்கப் போவதும் பழிஆ யிடுமோ?
அவளைத் தடுக்க ஆசைப் படும்நான்
அவள்எனைத் தடுக்க ஆசைகொள் ளுங்கால்
அவள்மொழிப் படியே அகலாது நிற்றல்
முடியுமா? இதனை முன்நான் எண்ணிலேன்.

அதனால் வீணே அன்புஉரு ஆம்என்
மனைவியைத் தடுத்துவீண் மனக்கொதிப்பு அடைந்தேன்''
எனும்மெய்த் தன்மையை எழுதிவைத் துள்ளார்.
கத்தூரி பாயைக் கனவிலும் மறவாப்
பேரன்பு உடையார் பெரியார் காந்தியார்.

“தீர எண்ணாமல் திருமண வினையில்
வீண்பெரும் செலவுகள் செய்து வீழ்ந்துஅழியும்
குடும்பம் பலகாண்; கொள்கைஈது அன்றால்.
தம்தம் நிலைமை தனையே எண்ணிக்
கடன்வாங் காமலும் கைப்பொருள் தனையும்

வீண்ஆக் காமலும் வேண்டிய அளவில்
இன்றி அமையா இனிய உணவொடு
செலவு செய்தலே சீரிய முறையாம்''
எனமொழிந் துள்ளார் ஏந்தல்
உண்மைக்கு ஒருவரா உயர்காந்தி யாரே.

## ௫. உயர்பள்ளிக்கூடத்தில்

வகுப்பு மூன்றாவது வாசிக்கும் போதுதான்
திருமணம் நடந்தது; தேர்வில் தோற்றனர். ஆயினும்
அவர்திறம் அறிந்த ஆசிரியன் மார்கள்
ஆறுமா தத்தில் அவரைமேல் வகுப்பில்
மாற்றிட, மானம் தள்ளக் காந்தியார்

உழைத்துப் படித்துமே ஓர்ஆண் டினிலே
இரண்டு வகுப்புகள் தேறி ஏறினார்.
ஆசான் மார்கள் அனைவரும் அன்பு
காட்டினர், அவர்தம் கல்வித் திறமையும்
பணிவும் சீரிய பண்பும்பா ராட்டினர்.

அடிக்கடி பரிசுகள் அடைந்தன அவரை.
கல்வியால் கைவரும் கருந்தனம் ஒழுக்கமே.
"ஒழுக்கம் உடைமையே குடிமை இழுக்கம்
இழிந்த பிறப்பாம்" என்பது மறைமொழி.
மிகச்சிறு குற்றம் செய்யினும் மிகமிக

நெஞ்சுபுண் ஆகும் நேர்மையர் காந்தி;
கண்ணீர் வடிப்பார் கதறுவார் திருந்துவார்.
குற்றமே எனப்பிறர் ஐயம் கொள்ள
நடத்தலும் கூடாது எனும்உயர் நடையினர்.
இரண்டாம் வகுப்பில் இவர்ஓர் அடிதான்

பெற்றுக் கோஎனப் பெரிதும் அழுதனர்.
அழுதது அடிவலித்து அல்ல; "அடைந்ததே
பிழை" எனும் கருத்தே. பின்ஒரு நாளில்
ஏழாம் வகுப்பில் இவர்உடற் பயிற்சி
பெறவே போதொடு போகாது பிந்தினர்

நேரம் தெரியாமை நேர்ந்த காரணம்.
அதனை நம்பர் ஆசான் ஓர்அணுத்
தண்டம் விதித்ததைத் தாம்பொறுக் காமல்
கண்ணீர் வடித்துக் கதறிடக் கண்டுபின்
தலைவர் நம்பித் தண்டனை அகற்றினர்.

"பொய்மை பொருந்தாச் செயலினர் ஆயினும்
காலங் கடவாது கடமையைச் செய்தலும்
இன்றி அமையாது" என்பது உணர்ந்தார்.
இவைஎலாம் இளமையில் இவர்தம் ஈடுஇலாப்
பெருங்குணம் காட்டும் திருப்பெறும் செயல்கள்.

இயல்பிலே கூச்சம் இயைந்தவர்; ஆதலால்
யாருட னும்இவர் இருந்து பேசார்;
பள்ளிநே ரத்தில் பாய்ந்துஓடிச் சென்று
விட்ட உடனே விரைந்து வீட்டில்
சேர்ந்து தந்தைக்குச் செய்பணி புரிவார்.

உடல்திடம் உறஉள பயிற்சி வகுப்பை
எட்டியும் பாரார், இன்றி அமையா
வகுப்புஎன உணர்ந்தும் வாய்மைக் காந்தியார், "அதனினும்
தந்தையார் தமக்குத் தரும்பணி விடைகள்
செய்வதே சிறந்தது" என்றசிந் தையினால்.

ஆயினும் இவர்உடல் அடைந்தது திடத்தை.
திறந்த வெளியில் தீக்கும் வெயிலினும்
நல்ல காற்றிலும் நடந்துஅலைந் திடுவார்,
இங்ஙனம் திரிதலே ஏழை எளியவர்
உடற்குஉறு பயிற்சிஆம் உண்மை உணர்ந்தவர்.

கையெழுத்து அதனைக் கருதாது இருந்ததால்
நல்லகை எழுத்தின் நலம்பெறார் ஆயினார்;
பின்னர் வருந்திப் பேசினார்; பயன்என்?
பொருள்மிகப் பொருந்தாக் கட்டுரை ஆயினும்
திட்டம்ஆம் வெற்றி திருத்திய எழுத்துஎனில்.

காந்தியார் வாழ்க்கையில் கசப்பினைத் தந்தது
நலம்இலான் ஒருவனை நண்பனாக் கொண்டதே.
அவனைத் திருத்திட ஆக்கிய முயற்சிகள்
விழலுக்கு இட்ட நீரே போலப்
பயன்தாரா ஆயின; பதிந்தன தீமையும்.

"புலால்உண் ணுதலால் புலால்உடல் வளரும்.
ஆங்கிலர் அனைவரும் அதனை உண்டிட
திடமாம் உடலுடன் திரிவர் உலகெலாம்.
அதனாலேயே அவர்நமை வென்று
பணியச் செய்து பார்முழுது ஆளுவர்.

அடிமை வாழ்க்கை அகற்றிட வேண்டின்
நாமும் புலாலை நன்றாக உண்டு
திடம்பெறல் வேண்டும். திடம்தனைக் கண்டால்
ஆங்கிலர் அனைவரும் அஞ்சிஓ டிடுவர்.
அடிமை வாழ்வுதான் அகலும் நமக்கே.

விடுதலை பெற்று விளங்கும்நம் இந்தியா
காந்தி! பார்என் கட்டான உடலை!
இக்கட்டு எதனால் எனக்கு வந்தது?
புலாலை உண்ட புதுமையால் அன்றோ?
உண்ணு புலாலை; உடலை வளர்த்திடு;

வெற்றி வீரனாய் விளங்குவாய், காந்தி!"
என்றே இயம்பினான் இழிந்த மதியினன்.
நம்பினார் காந்தியும் நம்நாடு விடுதலை
பெறவேண் டும்எனும் பேராசை அதனால்.
" இந்தியர் அனைவரும் இன்புலால் உண்ணலால்

விடுதலை வரும்எனின் விரும்பிநாம் புலாலை
உண்ணுவோம்; உண்மையை உரைப்போம்; உலகெலாம்
நலம்பெறும் வழி" என நம்பிய காந்தியார்
புலால்உண இசைந்தார் புல்லியன் நட்பினால்.
"மறந்தும் புலால்உண மதியாக் குடும்பமே!

தந்தையும் தாயும் தாம்அறிந் திட்டால்
என்கதி என்ஆம்? எங்ஙனம் அவர்முன்
சென்று நிற்பேன் சீர்கெட்ட பின்னர்?"
என்னும் எண்ணம் எழுந்து தடுத்தது; எனினும்,
' இந்தியர் படுதுயர் இதனால் நீங்கிடின்

இதைப்போல் நலம்பெற எளிய வழிதான்
காணுவது அரிது; காண்போம் ஆய்ந்தே
இந்தியர் விடுதலை! எம்தாய் விடுதலை!"
என்றசீர் எண்ணம் இயைந்து திடம்தரப்
புலாலும் உண்டார் புண்ணியர் காந்தியார்.

ஓர்ஆண்டு முழுதும் உண்டார் புலாலை.
ஓர்ஆண்டு ஆயினும் புலால்அவர் உண்டது
ஆறே முறைதான். ஆறு முறையிலும்
மதிநலத் தாயார் மகனை அழைத்துச்
சாப்பிடச் சொன்ன சமயங் களிலே,

‘பசி இலை, வயிறு சரி இலை, பசி இலை’’
எனவே புகன்றுஅவர் ஏய்த்தனர் தாயை,
தாயைஏ மாற்றும் தன்மை தம்மைச்
சேர்ந்தது கண்டு சிந்தை குலைந்தார்.
ஒவ்வொரு சமயமும் உள்ளம் நடுங்கினார்.

“நான்புலால் உண்ணலும் பொய்யினை நவில்தலும்
அம்மை அறிந்தால் அவர்நிலை என்ஆம்?
சிரவணா, சிரவணா! உன்சீர் மறவேன்!
அரிச்சந் திரனார் அடைந்த துன்புஎலாம்
மாறி மாறிஎன் மதிமுன் வருவன!

வந்தும் கெட்டேன் வகைதெரி யாமல்.
புலால்உணவு அதனால் போந்திடும் விடுதலை;
எனினும் யான்இப் பொய்நிலை கொள்ளுதல்,
அதிலும் பெற்றஎன் அன்னையா ரிடத்தில்,
பொய்ம்மை புகலுதல்! பொறுக்குமோ தெய்வம்?

ஓர்ஆண்டு அகன்றும் புலால்உணும் உண்மை
அம்மை அறியார்; ஆயினும் எங்கும்
எள்ளினுள் எண்ணெய் போல இருந்திடும்
கடவுள்என் பொய்ம்மையைக் காணார் ஆவரோ?
நாம்செயும் தீமையும் நவிலும் பொய்ம்மையும்

எங்கும் உளன்ஆம் எம்பிரான் காண்பான்.
எங்கும் அவன்கண்! எல்லாம் கண்டிடும்.
எங்கும் அவன்செவி! எல்லாம் கேட்டிடும்.
எங்கும் அவன்கை! எல்லாம் ஆக்கிடும்.
துன்பப் படுபவர் தோன்றாத் துணைஆம்.

துன்பம் செய்பவர்க்கு அறிவு தோன்றித்
துன்பம் செய்யும் தோன்றாத் துணை ஆம்
என்னும் உண்மை இதனை அறிந்தே
அஞ்சி அங்கம் குலைவதே அறிவு ஆம்.
ஆதலால் என்தன் அன்னையும் தந்தையும்
உயிருடன் வாழும் நாள்வரை உண்ணேன்;
உண்ணேன் புலாலை; உண்மைகைக் கொண்டேன்"
எனவே எண்ணி இம்முடிவு அடைந்தனர்
பண்ணிய புண்ணியம் பாய்ந்துகாத் ததனால்.
தீயவர் சேர்க்கையால் தீமையே சேரும்;
தீய செயலினர் பெறும் மெய்ச் செல்வமாம்
மக்களும் தீய மதியினர் ஆவர்.
" இவன்அத் தீயவற்கு இனிய நண்பனா!
சரிசரி, இவனும் தீமையே சார்ந்தவன்
என்பதில் தடையே இராது " எனும் இழிபெயர்
வரும்தீ யவருடன் வாழ்ந்திடு பவர்க்கே.
பெரியார் துணையினால் பெருமை வந்திடும்;
பெரியார் மக்களும் பெரியரே ஆவர்;
தீமைசெய் தாலும் திரும்பச் செய்யார்,
நன்மையே நமக்கு நாடிப் புரிவர்,
தடுத்துப் பேசித் தகும்வழி காட்டுவர்
தீய வழியில்நாம் திரும்பிடும் போது.
நல்இன மேதான் நன்மைக்கு வித்து;
பொல்லார் சேர்க்கையால் பொல்லாங் கேவரும்.
இவைஎலாம் உணர்ந்தும் ஏந்தல் காந்தியர்

தீயவன் சேர்க்கையில் தீர்ந்தார் அல்லர்.
பீடி சுருட்டுப் பிடித்தார்; பெருமை
அழிக்கும் களவும் அகந்தனில் கொண்டார்.
கற்புக்கு அரசியாம் கத்தூரி பாயின்
ஒழுக்க நிலையிலும் ஐயம் உறும்படி

பாவி செய்தனன்; பதைபதைத் தார்அவர்.
திடீரென ஒருநாள் தீயோன் தீச்செயல்,
மக்கள் இனத்தின் மனத்திலும் உறுத்தது,
கண்டு திகைத்தார் கண்விழிப்பு அடைந்தார்.
கெட்டவன் நட்பால் கேடாம் எனமுனம்

தாயும் தமையனும் தம்மனை யாட்டியும்
எடுத்து மொழிந்தும் இம்மியும் இணங்காக்
காந்தி உடனே களைந்தார் தீயனை.
கத்தூரி பாய்நம் கற்பினுக்கு அரசியை
ஐயம் கொண்டதும் அன்புஇலா நிலையை

உணர்ந்த காந்தியார் உளம்கசிந்து இங்ஙனம்
கூறி வருந்தினார்; "கூறுவன் கேளீர்!
என்மனை யாட்டியை ஐயுற இந்த
நலம்இலான் உடன்நான் கொண்ட நட்பும்
காரணம் ஆனது கண்டேன் நைந்தேன்.

அவளைநான் படுத்திய அல்லலை நினைந்தால்
நெஞ்சம் திடுக்கிடும்; நீதி அற்றன
கொடுமைகள் செய்தேன்; கொதிக்கத் திட்டினேன்.
கணவன் குற்றம் கண்டால் மனைவியைத்
துன்பப் படுத்தலாம்; தூயவள் ஆம்அவள்

கணவன் மீது குற்றம் கண்டால்
மனம்மிக வாடி மயங்கி வருந்துவாள்;
அதற்கும் கூட அடிப்பான் கணவன்.
பெண்கள் நிலைமை, பெரிதே துன்பம்!
பிறர்க்குஊறு செய்யாப் பெருந்தரு மத்தை

உள்ள படிநான் உணர்ந்த போதுதான்
நான்செய் பிழைகளை நன்கு தெரிந்தேன்.
இல்லுக்கு உண்மையில் உடையவள் இல்லாள்,
மனையின் மாட்சிக்கு உரியவள் மனைவி
எனும்பெயர் உண்மையால் இசைத்தனர் முன்னோர்.

ஆணுக்கு உரிய அத்தனை உரிமையும்
பெண்அர சிக்கும் பெரிதும் உண்டுகாண்.
அடிமை ஆக அவளை இக் காலம்
எண்ணி நடத்துவது எத்தனை கொடுமை!
தோழியும் வாழ்க்கைத் துணைவியும் மனைவியே.

இல்வாழ்க் கையில் ஆம் இன்பதுன் பங்கள்
அத்தனைக் கும்சரி பங்கினள் அவளே
மனச்சான் றின்படி மதித்து நடக்கும்
உரிமை பெண்ணுக்கும் உண்மையில் உண்டு."
மெய்இது கூறினர் மேன்மைக் காந்தியும்.

"கற்புஎனப் படுவது சொல்திறம் பாமை"
என்பது ஔவையார் எதிர்இலா மொழிஆம்.
சொல்திறம் பாமைதான் சொற்படி நடத்தல்.
யார்சொல் லின்படி யார்நடந் திடுவது?
கணவன் சொற்படி கற்புக்கு அரசிஆம்

மனைவியும், மனைவி சொல்லை மதித்துக்
கற்புக்கு அரசன் ஆம் கணவனும் நடத்தலே
முன்னோர் கண்ட முடிந்த முடிவு ஆகும்.
ஒத்த குணமும் ஒத்த வயதும்
ஒத்த கொள்கையும் உடைய ஆண் பெண் இவர்

கண்ணொடு கண் இணை நோக்கு ஒத்த காதலால்
பண்டைத் தமிழர் பண்பாட் டின்படி
கணவனும் மனைவியும் ஆனால் கலங்கா
இல்லற வாழ்க்கை ஏற்படும் இவர்க்கே.
கணவனை மறைத்து ஒரு காரியம் மனைவி

செய்யாள்; செய்யான் செயல் எலாம் மறைவான்.
வள்ளுவர் ஆண்டினில் வாய்த்த ஏழாம்
நூற்றாண் டினிலே காத்து ஆண் டிருந்த
மதுரைப் பாண்டியர் நெடுமாற மன்னர்;
மனைவி மங்கையர்க்கு அரசி என்பார்.

பாண்டியர் சமணர் பண்பாடு அறிந்து
சமண சமயம் சார்ந்தனர்; மனைவியார்
சைவ சமயமே சார்பு என இருந்தார்.
பாண்டியர் தம்மனப் படியே சமண்மதம்
வந்திட மனைவியை வற்புறுத் தினாரா?

அல்லர்; அது தமிழ்ப் பண்பும் அன்றுகாண்!
"ஒழுக்கமே உயிரினும் உயர்ந்தது; ஆதலால்
உயிரினும் ஒழுக்கம் ஓம்புதல் வேண்டும்"
என்பதே மறைமொழி. இதன்படி நமது
மங்கையர்க்கு அரசியும் மதிமன் னவரும்

நெஞ்சுகோ ணாமல் நேர்மையைக் கொண்டனர்.
புறச்சம யத்தார் போற்றி அணிந்திடும்
புறஅடை யாளம் பார்த்தலும் புறம்பாம்
என்பது சமணர் இயற்கை; ஆதலால்
தம்முடைத் தெய்வமாம் தகுதிசேர் கணவனார்
காண வருந்துவர் எனும்கா ரணத்தால்
திருநீறு அணிதலும் தீர்ந்தனர் அம்மையார்;
கண்மணி பூணலும் கைவிட் டனரே; ஆயின்,
"சிவனார் பொன்அடி சிந்தையில் பூண்டு
மறவாது கருதி மாலைவே ளைகளில்
காண்பவர் சிந்தையும் கண்களும் உடலும்
சொக்கிடச் செய்யும் சொக்க நாதனார்
அழகிய மேனியை அணுகி வணங்கிடக்
கோபுரம் திக்கெலாம் கொண்டகோ விலுக்கே
நாளும் செல்லுவேன் நலம்பெற்று உய்வேன்"
என அவர் எண்ணி ஏகினார் நாள்தொறும்.
போகும் போதுஎலாம் கணவர் பொன்அடி
பணிவார்; பாண்டியர் விடைதந்து அனுப்புவார்.
கணவன் ஓர்சமயம் சார்ந்தும், காதலி
வேறுஒரு சமயம் விரும்பி இருந்தும்
ஓர்உடல் ஈர்உயிர் போல ஒத்து
வாழ்ந்த இந்த வரலாறு காண்போர்
சின்னம் சிறுசிறு கருத்து வேற்றுமை
காரணம் ஆகக் கடிந்து வெறுப்பரோ
மனைவியைக் கணவனும் கணவனை மனைவியும்!

இல்வாழ் வார்கடன் இதுஎனக் காந்தியும்
உணர்ந்துஉரைத் துள்ளார்; உலகீர் தெளிமின்!
தெளிந்தால் இல்லறத் துன்புஎலாம் தீரும்.
புகையிலை என்பது புகைதரும் இலையே; இதனைச்
சுருட்டிச் சுருட்டுஎன வும்தூள் ஆக்கிப்

பீடிசி ரெட்டுஎன வும்பேர் தந்து
புகைகுடித் திடுவர் புகும்கேடு அறியார்
உதடுஎலாம் கரியாய் உடலும் வெந்து
நெஞ்சுபுண் ஆகி நெடும்புகைச்சல் ஆகும்
புகைச்சலைத் தரும்இலை புகையிலை என்றுநம்

முன்னோர் மூதறி வாளர் ஆய்ந்து
தந்த பெயரோ! தம்உட லுடன்உயிர்
தன்னைச் சுருட்டும் தன்மையால் சுருட்டு,
புகைச்சல் முதலிய பொல்லா நோய்கள்
பிடிக்கச் செய்வ தாலே பீடி,

சீரினை எட்டச் சிதைத்திடும் குணத்தால்
சிரெட்டு எனும்பெயர் சீரிய ஆமே!
காந்தியார் சுருட்டுக் குடிக்கக் கற்றார்;
அதனில் நன்மை உளதுஎன அறிந்தோ,
அல்லது அப்புகை நாற்றம் விரும்பியோ

அன்று; விளையாட்டா அதனைக் கொண்டார்;
சுருண்டு வாயினின்று எழுந்து சுருண்டு
பறந்திடும் புகையைப் பார்த்து மயங்கி
அங்ஙனம் தாமும் அதுசெய விரும்பினர்.
வேடிக்கை ஆகத் தொடங்குதீ வினைகள்

வேர்ஊன் றிப்பின் விலக்க முடியாப்
பழக்கம் ஆகப் பதிந்துநின் றிடுவன.
தாயார் முன்னும் தந்தையார் முன்னும்
தம்குலப் பெரியார் தக்கவர் முன்னும்
புகைகுடித் திடஅவர் அஞ்சிப் புறம்போய்க்

கள்ளத் தனமாக் குடித்தார்; காசு
தேவைஆ யிற்று; திருடத் துணிந்தார்.
வேலையாள் தனக்கு விருப்புடன் பெற்றோர்
தந்திடும் காசினைத் தாம்கை யாடினார்.
பெரியோர் ஆணை பெறாதுதம் மனம்போல்

நடந்திட முடியா நிலைக்கா நடுங்கினார்.
மனம்போல் வாழ மாட்டா நிலையினும்
உயிரை மாய்த்தல் உயர்வுஎனத் துணிந்தார்;
தற்கொலை முயற்சியில் தாம்இறங் கினரே.
உயிர்உடன் போகாது ஊசல்ஆ டிற்றுஎனில்

வந்திடும் வசையோ தாங்கத் தகாததுஆம்;
ஆதலின் தற்கொலை முயற்சி அகன்றது.
அதனொடும் சுருட்டும் திருட்டும் அகன்றன;
தப்பிப் பிழைத்தார் தலைவர் காந்தியும்!
இந்தத் தீய பழக்கம் இவர்கொள

அடிப்படை ஆன காரணம் ஆவது
சீர்இல்இப் பழக்கம் சிறிய தந்தையார்
கொண்டிருந் ததுவே; கொடுமை பெரியீர்!
புகைக்குடி பொடியைப் போடுதல், புகையிலை
போடுதல், கட்குடி, பொய்உரை யாடுதல்

முதலிய பொருந்தா மூட நடைஎலாம்
பெற்றோர் பெரியோர் பேர்ஆ சிரியர்
தலைவர் யாவரும் தள்ளுதல் வேண்டும்.
"நாகரிகம் அற்றதும் நாசம் விளைப்பதும்
உடல்நலம் கெடுப்பதும் உயர்ந்தவர் வெறுப்பதும்

சுருட்டுக் குடித்தலே; சூழ்ந்தது உலகுஎலாம்.
சுருள்புகை மூச்சை முட்டச் செய்வது.
இந்தத் தீய பழக்கம் என்று
நீங்கி உலகில் நன்மை நிரம்புமோ?"
எனக்குறித் துள்ளார் ஈடுஇலார் காந்தி.

பெரியோர் கையதே பிள்ளைகள் ஒழுக்கம்;
பெற்றோர் எப்படி அப்படிப் பிள்ளைகள்.
அண்ணன் ஒழுக்கமே அவன்தம்பி கொள்வான்.
காந்தி யடிகள் களவும் செய்தனர்.
புலால்உணும் பொருந்தா ஒழுக்கம் பூண்டு

தம்பிகாந் தியையும் தகாதஅப் புலால்உணத்
தூண்டிய அவர்சிறு தமையனார் தூண்டிடத்
தமையனார் காப்பில் தங்கம் சிறிது
திருடி விற்றுத் தீர்த்தார் அவர்கடன்.
வேறுயார் பொருளையும் விரும்பலை, திருடலை.

தமையனார் ஏவலால் தமையனார் காப்பினில்
தங்கம் விற்றார்; "தம்பெற் றோர்கள்
அறியாது விற்றதால் அதுதிருட்டு" என்று
சிந்தை கலங்கினார்; சிந்தினார் கண்ணீர்.
தமையனா ராலே தான்இது வந்தது.

தமையனார் தவற்றால் தம்பியும் கெட்டார்.
தந்தைக்கு உரைத்துத் தம்மனக் களக்கம்
அகற்றத் துணிந்தார் அவர்பெருந் தன்மையால்.
குற்றம் குறித்து மனக்கொதிப்பு எழுதி,
"மலர்அடி பணிந்தேன், மன்னித்து அருளும்;

இனிநான் இத்தகைப் பிழையே செய்யேன்.
மன்னித்து அருளும்; மனத்துயர் பொறுக்கேன்"
எனும்கடி தத்தை ஏந்திச் சென்று
தந்தையைப் பணிந்து தந்துபக் கத்தில்
பணிவுடன் இருந்தார்; பார்த்தார் தந்தையும்;

மகன்தன் குற்றம் கண்டு மடிந்த
மனம்மலர்ந் ததுகுறை மாறுநம் பிக்கையால்;
கண்ணீர் வடிந்தது கண்டு வருந்திக்
கதறினார் காந்தியார்; காணீர் பாரீர்!
குற்றம் உணர்ந்து குணம்பெற முயல்பவர்

திருந்திப் புகழுடன் திகழ்ந்திடு வார்கள்.
பிள்ளைகள் குற்றம் கண்ட பெற்றோர்
தடிஅடி கைஅடி தம்மால் நைத்து
மனம்சினம் கொள்ள மாண்புஅல பேசி
வருத்திடு வார்சிலர் வகைதெரி யார்கள்.

வைதலும் அடித்தலும் வழிஅல திருத்திட.
இதனால் பிள்ளைகள் எதிர்த்தலும் ஏசலும்
பெற்றோர் பெறும்பயன் என்பது வெளிப்படை.
திருவுடை மக்களைத் திருத்திட விரும்புவோர்
மோகன தாசர் தந்தை முறையினைக்

கைக்கொள் வார்எனில் காண்பார் நற்பயன்.
பிள்ளைக ளிடத்தில் பிழைகண்ட போதுஎலாம்
தம்மைத் தாமே தடிந்து வருத்திடும்
காபா காந்தி கண்ணீர் வடித்தார்;
கண்டார் மோகன தாசர் காந்தி
கனல்பட்டு மெழுகுஎனக் கசிந்து திருந்தினர்.
பின்பு ஒருகாலம் பெரும்புகழ்க்கு உரிய
தம்மகன் தேவ தாசிடம் தகாச்செயல்
தோன்றக் கண்ட மோகன தாசர்
ஏழுநாள் தாமே பட்டினி இருந்து
திருத்தினர் என்ற திருச்செயல் நமக்குத்
தெளிவுஆம் வழியாத் திகழ்ந்திடு கின்றதால்.
"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" எனும் திருமொழி,
"யாம்மெய் ஆகக் கண்டவற் றுள்எலாம்
வாய்மையின் நல்ல பிறகண் டிலமே"
என்னும் மறைமொழி இவைகளைத் தமக்குக்
காப்பாக் கொண்ட காந்தி அடிகள்
தந்தையும் தாயுமே தாம்தொழும் தெய்வமாக்
கொண்ட கொள்கையர்; நோயினால் குறைந்து
மெலிந்த தந்தையின் மெல்அடித் தொண்டில்
முனைந்து நின்றார் முன்புஇருந்து அவர்க்குச்
செவிலி போலச் சேவைகள் செய்தார்.
அரசரே ஆயினும், அவர்க்குஉறு துணைவராம்
அமைச்சரே ஆயினும், அவர்தம் படைகளின்

தலைவரே ஆயினும் தம்உயிர் நீங்கிட
அவர்தம் உடலம் சவமாய்க் கழிந்திடும்
என்பது மெய்ம்மை; இதன்படி ஒருநாள்
காபா காந்தியும் கண்டார் காலனை;
விண்டார் உடலம்; விருப்புஉடை மனைவியும்
மக்கள் யாவரும் மனம்கலங் கினரே.
பதினாறு ஆட்டைப் பருவமார் காந்தியும்
தந்தை யில்லாத் தனயர் ஆயினர்;
பின்னர் ஈர் ஆண்டு பேணிப்
படிந்துப் பத்தாம் படிதேர்ந் தனரே.

## ௬. இங்கிலாந்துப் படிப்பு.

உயர்நிலைப் படிப்பு முடிந்ததும் ஓங்கிடக்
கல்லூ ரியிலே காந்தி சேர்ந்தார்;
பேரா சிரியர் பேசும் பொருள்எலாம்
கண்ணைக் கட்டிக் காட்டில்விட் டதுபோல்
பொருள்விளங் காமல் புந்தி திகைத்தார்.

நண்பர் ஒருவர் நாடி வந்து
தாயா ரிடமும் தமையனா ரிடமும், காந்தியை
இங்கிலாந் தினுக்கே அனுப்ப ஏவினார்.
"கல்லூ ரியிலே நாலாண்டு கற்றுப்
பி. ஏ. தேறிய பின்னரும் ஐம்பது

அறுபது தானே சம்பளம் அடையலாம்.
இங்கிலாந் தினுக்கே ஏகி விரைவில்
பாரிஸ்டர் பட்டம் படித்துப் பெற்றால்
சிறப்புறு பதவியும் செல்வமும் பெறலாம்.
நாளைவீண் ஆக்குதல் நன்றுஅல" என்றார்.

கல்லூரி எனும்கடும் காவலை மீறிப்
பறந்திடத் துணிந்தார் காந்திப் பெரியார்
கடலையும் கடந்து பட்டம் பெறவே.
தாயும் தம்மகன் தனைப்பிரி வாரோ?
தந்தை தலைமகன் இடத்தும் தாயார்

கடைசிப் பிள்ளையாம் காளை இடமும்
மட்டற்ற அன்பு மனம்கொண் டிடுவர்
என்பது உலகோர் இயம்பும் மெய்ம்மொழி.
கடைசி மகனும் காந்தியைப் பிரிந்திட
மனம் இசைவாரோ புதலிபாய் மயங்கினார்.

" மதுவும் புலாலும் மறுத்து மற்றோர்
பெண்ணை மணத்தலும் பேணேன் என்றுநீ
வாக்குஅளித் தாய்எனில் வருதி தருவேன் "
எனத்தாய் கூறிட இசைந்தார் காந்தியும்.
மந்திரிக் குடும்பம் எனும்மதிப்பு ஒன்றே

அவர்கள் பெற்ற அரும்பெரும் செல்வம்;
பொருளைக் காந்திகள் பொருளாச் சேர்த்திலர்; ஆதலின்
சீமையில் செல்லும் செலவுக்குஎன் செய்வது?
மனைவி நகைகளை மாற்றி யாவது
சீமை செல்லத் துணிந்தார் காந்தி.

ஆனால் அவர்தம் அன்புத் தமையனார்
எப்படி யாவது பணம்தர இசைந்தார்.
மகிழ்ந்தார் காந்தி, மனம்ஆர வாழ்த்தினார்.
அண்ணனார் அவரை அழைத்துச் சென்றார்
பம்பாய் நகர்க்கே; பரிவுடன் நண்பர்

சிலரிடம் தம்பியைச் சேர்த்துத் திரும்பினார்.
இவர்க்குமுன் எவரும் இவர்குலத் தினிலே
கடலைத் தாண்டினார் காண்பரிது; ஆதலின்
இவர்தம் குலத்தவர் யாவரும் கூடிக்
காந்தியை அழைத்துக் கடிந்து பேசி,

"தாண்டினால் கடலை, சாதியில் தள்ளுவோம்"
என்று கூறினர். என்செய்தார் காந்தி?
"கடலைத் தாண்டுதல் கல்விக்கு ஆகவே
தீய ஒழுக்கம் திரும்பியும் பாரேன்
எனநான் என்தாய்க்கு அளித்தேன் வாக்கு.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு
என்பது முன்னோர் இயம்பிய பழமொழி, ஆதலின்
கடல்தாண்டு வதில்ஓர் குற்றமும் காணேன்,
சாதியை விட்டுநீர் தள்ளினும் செல்வேன்"
எனவே மொழிந்தார்; ஏகிடத் துணிந்தார்.

நாட்டின் நலத்தினை நாடி ஆராயின்
இணைஇல் நம் நாட்டின் இளைஞர் பலரையும்
இங்கிலாந் தினுக்கு மட்டுமா இப்பூ
மண்டலம் எங்கும் மதிபெற அனுப்பிக்
கல்விக் களஞ்சியம் ஆக்கிக் காப்பது

கடமையா உடையோம் கடன் பட்டேனும்
கைப்பொருள் கொண்டு மெய்ப்பொருள் கல்வியைப்
பெற்றுக் குலமும் நாடும் பேணிடச்
செல்வார் தம்மையும் தடுத்தனர் சீர்இலார்.
"கற்கை நன்றே, கற்கை நன்றே

பிச்சை புகினும் கற்கை நன்றே"
எனஓர் அரசன் புலவன் இசைத்தனன்.
அந்த நாளையில் அரும்பொருள் பலவும்
தேர்ந்து உலகுக்குஒரு தீபம் போல
இந்திய நம்தாய் எழிலுடன் விளங்கினள்.

இங்குஇல் லாத அரும்பொருள் எங்கும்
இருந்ததே இல்லை என்பது மெய்ம்மைஆம்
இன்றுஉலகு ஆளும் இங்கிலாந் தினர்நாம்
உடுக்கும் பெருமையும் உணரார் ஆகி
இருந்தஅக் காலம் இந்தியர் உயரிய

நாகரி கத்துடன் நலம்எலாம் ஓங்க
விளங்கி இருந்தனர், வெறும்பேச்சு அன்றுகாண்.
விண்ணில் பறக்கவும் விரிகடல் தாண்டவும்
உலகுக்கு உணர்த்திய உயரியர் இந்தியர்.
இன்கலை நுண்கலை அருங்கலை எவைக்கும்

இந்தியா பிறப்புஇடம் என்பது தெரிந்தால்
காந்தியைத் தடுப்பவோர் காலப் போக்கில்
அடிமைகள் ஆகி அறிவும் குறைந்துளோர்?
சாதி சாதி என்பது யாது?
"மூடப் பழக்கமாம் மூர்க்கத் தனத்தை

விடவே மாட்டோம், விளங்கிடோம் அறிவு" எனச்
சாதிப் பதுதான் சாதி போலும்!
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
என்றே மூல நாயனார் இயம்பினார்
திருமந் திரம்எனும் தெய்வ நூலிலே.

"எல்லா உயிர்க்கும் பிறப்புஒக்கும்." எனவே
வள்ளுவ நாயனார் வகுத்துஎடுத்து உரைத்தார்.
தமிழக ஒழுக்கச் சட்டம் ஆக,
"யாதும் ஊரே யாவரும் கேளிர்"
என்றுஒரு புலவன் இனிதுஉரைத்து உயர்ந்தனன்,

தமிழர் கொள்கையே தாரணிக் கொள்கையும்.
உண்மை இதனை உணர்ந்துஉலகு எல்லாம்
ஒன்றுபட்டு என்றும் ஒருதாய் பெற்ற
பிள்ளைகள் ஆகப் பேணி வாழுநாள்
என்றுவந் திடுமோ? எல்லாரும் ஒருகுலர்,

யாவரும் கும்பிடும் இறைவர் ஒருவரே!
எனவே உலகோர் ஒருகுடை யின்கீழ்ப்
பகைமையும் பசியும் தீர்ந்து பண்புடன்
கூடி வாழும் காலமும் குறுகிடும்.
எதிர்பார்த்து இருப்போம் ஈடுஇலா இந்நிலை!

ஆண்டு பதினெட்டு அகலுமுன் காந்தியார்
கப்பல் ஏறினார், கடலைக் கடந்தார்,
இங்கி லாந்தினில் இறங்கி மகிழ்ந்தார்.
மேன்மைக் குணத்தினர் மேதா அன்றே
வந்து பார்த்து வாழ்த்துக் கூறினார்.

மோகனர் அகமும் முகமும் மலர்ந்தார்.
" பிறர்பொருள் தொடாதே, பெருமை கேடுஉறும்.
ஒருவரை முதன்முதல் தெரிந்த உடனே
நம்நாட் டிற்போல் நணுகிப் பலப்பல
வினாக்கள்கே ளாதே. விரித்து வெடிப்பாய்ப்

பேசாது இருந்திடு, பெருமை வந்திடும்"
எனப்பல அறஉரை இயம்பிய மேதா,
இவரைத் தம்முடன் இட்டுச் சென்று
நண்பர் ஒருவரை நண்ணி அவருடன்
வாழ்ந்திடச் செய்தார்; வாய்த்த அன்பரும்

உடன்பிறந் தவர்என உறவுடன் பழகினார்.
"புலால்உண் ணாதே" புலால்உண் ணாமல்
இங்கி லாந்தினில் எங்ஙனம் வாழ்வது?
ஊன்கல வாத உணவே கிடையா;
என்செய் திடுவது? எதனை உண்பது?

வழியிலும் இங்கும் வழிதெரி யாமல்
தாம்கொடு வந்த பண்டம் தன்னையே
உண்டு வாழ்ந்தார் ஒண்புகழ்க் காந்தி;
வயிறு ஆர உண்ணும் வாய்ப்பே இல்லை.
பாதிப் பட்டினி கிடந்தார். பாவம்!

தோழர் புலால்உணத் தொந்தரை செய்தார்.
"புலால்உண்ட தாகப் புகன்றீர், காந்தி!
வீணாய் உயிரை வீழ்த்திட வேண்டாம்.
குளிர்மிகு நாட்டில் கொள்ளும்ஊண் ஊனே.
இயற்கைக்கு எதிரா இருப்பதில் நலம்இலை.

அன்னை இங்கிலை அறிந்திருந் தாரேல்
ஊனை உண்ணவே உமக்குஉரைத் திருப்பார்.
பிறர்க்குத் தீமை சேராது பேசிடும்
பொய்ம்மையும் மெய்ம்மையே என்பது புலவர்
காட்டிய நெறிஆம்; காணுவீர் நன்மை;

புலாலை உண்ணும் புத்திமான் ஆவீர்."
எனப்பல வாறு இடித்துஇடித்து அடிக்கடி
எடுத்துஉரை செய்ய ஏந்தல் காந்தியார்
சிந்தனை செய்து சீர்தூக்கி முடிவு
கண்டு கூறுவார், "அடியனைக் காக்க

ஆசை கொண்ட அன்பரீர் பெரியீர்!
புலாலினை உண்டதும், புலாலினை உண்டுதம்
உடலைப் பெருக்கி உண்மையில் ஆங்கிலர்
ஓடிடச் செய்துதாம் ஓங்கணும் இந்தியர்
என்னும் கொள்கையான் இன்றும் உடையேன்

என்பதும் உண்மையே. என்உடல் பருத்திடும்.
பகைநோய் பயந்து பறந்து போயிடும்.
நான்நலன் அடைய நல்ல வழிதான்.
அம்மை அறிந்தால் அவர்நிலை என்னாம்?
சிந்தை கலங்குவார், சீர்இலா மகனைப்

பெற்ற தம்மையே பெரிதும் நோவார்.
அம்மை வருந்த அடியேன் நடவேன்;
உயிர்போ னாலும் உண்மையைக் காப்பேன்.''
இங்ஙனம் காந்தி இயம்பிட நண்பர்
பெரிதும் இரங்கினார், பேசார் ஒருமொழி.

புரைதீர்ந்த நன்மை புரிந்தால் அல்லது
பொய்மையும் வாய்மை ஆகப் போகுமோ?
புந்திதாய் நொந்திடும் புரைவந்து சேருமே,
"பொய்ம்மையும் வாய்மை இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும் எனின்" என நாயனார்

அருளிய வாக்குத் தீமையை அகற்றவும்
நன்மையை நாட்டவும் புரைதீர் நன்மையைச்
செய்வதே வாய்மையாம் சீரினை விளக்கவும்
எழுந்தது. "நன்மை கடைப்பிடி." எனநம்
ஔவைப் பாட்டியும் அருளினர் அருப்பொருள்.

அம்மைக்கு அளித்த வாக்கைக் காத்திடக்
கங்கணம் கட்டிய காந்தி யாரும்
சைவ விடுதி சார்ந்துஉணவு அருந்திட
ஊர்எலாம் அலைந்தார், ஒன்றும் கண்டிலர்.
ஒன்றுஇரண்டு இருந்தன எனஅவர் உணர்வார்.

காணக் கிடையாக் கருந்தனம் எனவே
ஒருநாள் ஒன்றினைக் கண்டார், மகிழ்ந்தார்.
"சைவ உணவுசார் புகழ்"எனச் சால்டுரெனும்
அறிஞர் பெருமான் ஆக்கிய நூலைப்
பன்முறை படித்தார், படிந்தார் மகிழ்ச்சியில்.

உண்மை உணர்ந்தார்; "சைவ உணவே
ஒப்புஉயர்வு அற்றதுஆம் உடல்உரம் தருவது;
புலால்உணவு அதனால் போலி வலிமைஆம்."
என்பது தெளிந்தார். "இனியான் ஊன்உணேன்,
தாய்சொல் துறந்துஒரு வாசகம் இல்லை

எனநான் நின்றதால் எய்தினேன் மெய்வழி"
எனத்துணிந்து, அத்தகை நூல்கள் யாவும்
கற்றார் அருளே கருதும் காந்தியார்.
"ஊனைத் தின்றுஊனைப் பெருக்காமை முன்இனிது
தன்ஊன் பெருக்கத் தான்பிறிது ஊன்உண்பான்

எங்ஙனம் அருள்பெறும்? ஈதுஅறி யாதுஉணும்
புன்புலால் என்பது புண்ணே அன்றோ!
ஆயிரம் உயிர்தீர் உடல்களை அவித்துத்
தீயில் சொரிந்து செய்யும் வேள்விகள்
ஆயிரம் அதனினும் ஒன்றன் ஆர்உயிர்

செகுத்துஉண் ணாமை சீர்எலாம் சேர்த்திடும்.
புலால்உண் ணாமை போற்று கின்றவர்
மூன்று வகையினர். முதல்வகை யினரோ
பறவைகள் விலங்குகள் உடல்உணல் பாவம்
என்பவர்; அவர்மீன் முட்டை இவைகளை
உண்ணுவர். இரண்டாம் வகையினர் உயிர்களை
உண்ணுதல் தகாதுஎன மீனும் உண்ணார்.
மூன்றாம் வகையினர் முட்டையும் பாலும்
உயிர்கள் தரும்என அவையும் உண்ணார்.
இவைஎலாம் எண்ணிய காந்தியார் ‘என்தாய்
முட்டையும் புலாலே என்னும் முடிவினர்.
ஆதலின் அடியேன் அதனையும் உண்ணேன்.’’
என்றுமெய்ச் சைவ உணவினை ஏற்றார்,
சமயம் அறிவு சாரும் செட்டு
மருத்துவம் இவைகளில் மதித்திடும் காரணம்
கண்டார் கற்ற நூல்களில் ஆதலால்.
சைவ உணவுச் சங்கம்ஒன்று அமைத்தே
அதனுக்கு அமைச்சராய் அழகுஉற நடத்தினார்;
அறிஞர் பலர்அதன் உறுப்பினர் ஆயினர்.
செலவுஇனங் களில்எலாம் செட்டுச் செய்தார்.
தம்பணி நிலையம் தன்னை அரைமணி
அளவில் அடையும் இடங்களில் தங்கியும்
நடந்தே வழிஎலாம் கடந்தும் செலவினைச்
சுருக்கினார்; கணக்கினைச் சோர்வுஇல் லாமல்
நாள்தொறும் எழுதினார், நன்மை அடைந்தார்

ஒருபொழு தாவது நோயுற் றார்அலர்.
"ஒவ்வொரு நாளும் ஒன்பது பத்து
மைல்கள் நடக்கும் வழக்கம் கொண்டேன்;
அதனா லேயே அடைந்தேன் நல்உடல்.
உடல்உரம் பெறவழி இதுஎன உணர்ந்தேன்."

எனஇவர் நலவழி எடுத்துஉரைத்து உள்ளார்.
தாம்மணம் ஆன தன்மைகூ றாமல்
பழகிய படியால் பண்புஒரு கிழவியார்
காந்தியா ருக்குஒரு காரிகை யாளை
மணம்முடித் திடவே மகிழ்ந்து தூண்டிட,

உண்மை கூறினார் ஒழுக்கம் காத்தனர்.
ஐரோப் பாவில் அனைத்துள நாட்டினும்
பொதுமொழி ஆகப் புகழ்பெறு பிரஞ்சும்
இலத்தீன் மொழியும் இனிதில் பயின்றுஇவர்
இலண்டன் மெற்றிகு லேசன் தேர்வினில்

இருமுறை முயன்று தேர்வும் எய்தினார்.
மூன்றுஆண் டுகளில் முடிந்தது படிப்பும்.
உரோமன் சட்டமும் ஆங்கிலர் உடைய
பண்டை வழக்கச் சட்டமும் படித்தலே
பாரிஃச்டர் தேர்வுப் பாடங்கள் ஆகும்.

தேர்வில் வெற்றி தேடிடத் தக்க
குறிப்புகள் கற்றுக் கொள்ளலே போதும்;
எனினும் காந்தியார் இலத்தீன் மொழியில்
மூல நூல்களைப் படித்து முடித்தே
உரோமன் சட்ட உண்மை தெளிந்தார்.

ஆங்கிலர் சட்டமும் அங்ஙனம் மூலநூல்
படித்தே புலமை பண்புடன் பெற்றார்.
நுனிப்புல் மேயும் தன்மை நுண்மையில்
ஆசை உடைய ஆன்றோர் அடைவரோ?
இங்ஙனம் ஆக இவர்பெற் றிட்ட
அறிவே ஆப்பிரிக் காவில்அன் னியரும்
மதித்து நடக்கும் மாண்பு தந்தது
பட்டம் பெற்றுப் பாரிஸ்டர் ஆகிட
மற்றும்ஓர் தேர்வுதான் பற்றுடன் விருந்துஉணல்.
மூன்றுமா தங்களில் மூவெட்டு விருந்துகள்
ஆக மூன்றுஉள ஆண்டும் நடைபெறும்; அவைகளில்
நாலில்ஒன் றுக்கு நண்ணுதல் வேண்டும்.
குடிப்பொருள் விருந்தில் கொடுப்பதும் வழக்கம்.
இவர்குடி யாதவர் என்பதால் மாணவர்
யாவரும் இவர்அருகு இருந்திட முந்துவர்
இவர்பங் கினையும் குடித்திடும் இச்சையால்
இருபத்து இரண்டாம் ஆண்டு நடக்கையில்
பாரிஸ்டர் ஆனார் பார்புகழ் காந்தி!
பலரும் புகழப் பட்டமும் பெற்றார். உடனே
கப்பல் ஏறிக் கடலைக் கடந்து
பம்பாய் நகரைப் பார்த்து மகிழ்ந்தார்.
தாயார் மறைந்த செய்தி தன்னைத்
தெரிந்து சிந்தை திகைத்துத் தேறினார்
கத்தூரி பாயையும் மகனையும் கண்டு;
கேட்டபோது எல்லாம் நாட்ட முடனே
பணம்தனை அனுப்பிப் பாதுகாத்து அருள்முதல்
அண்ணனார் அடிஇணை அடைந்து
வருத்தம் தீர்ந்து வணங்கிநின் றனரே.

## எ. பம்பாயிலும், அரசகோட்டையிலும்.

இங்கி லாந்தினில் தங்கிய காலையில்
அங்கிலன் போல வட்டுடை அணிந்து
முடியை வெட்டி முன்வகுப்பு எடுத்து
நடனமும் இசையும் திடமுடன் பேச்சும்
பழகிய மோகனர் பயன்தரா தனஇவை
எனவே எல்லாம் எளிதில் தள்ளினார்.
உடைமுறை மட்டும் ஒட்டிக் கொண்டுஅவர்
இந்தியா வந்தும் தங்கி இருந்தது.
அதனால் செலவு மிகமிஞ்சி ஆயது
கண்ட காந்தி கருதிப் பார்த்து
‘‘வெள்ளை யானையை வீட்டிலே கட்டிய
தன்மை போன்றது’’ என்ன உணர்ந்தார்.
அரச கோட்டையை அகன்று மோகனர்
பம்பாய் சென்று பாரிஃச்டர் ஆகப்
பதிவு செய்து பழகத் தொடங்கினார்.
நான்குமா தங்களே ஆங்குஅவர் இருந்தது.
வருவாய் ஒருவரும் தருவார் இல்லை.
வழிதெரி யாமல் விழித்தார் மோகனர்; அதனால்,
சின்ன வழக்குஅறி ஞர்ஆம்இவர் அண்ணனார்
அழைத்துச் சென்றார் அரசகோட் டைக்கு.
விண்ணப் பங்கள் எண்ணி எழுதித்
தந்தார்; அதனால் வந்தது மாதம்
முந்நூறு ரூபாய்; ‘‘என்இவ் வாழ்க்கை?
பம்பாய் நகரில் வப்புஎனத் தரகு
தருவது மறுத்தேன்; தருகிறேன் இன்று

வழக்குஅறி ஞரே இங்கு பழக்கம்ஆம் தாரகர்!
தாராது இருந்தால் வாரா வழக்குகள்.''
என்று அவர் சிந்தை கன்றி இருந்தார்
போர்பந்தர் மன்னர் தேர்மதி கூறும்
துணைவராக இவர்தம் இணைஇலாத் தமையனார்

இருந்த காலம் பெருங்குற் றம்ஒன்று
செய்தார் எனஒரு நொய்துஆம் வழக்கு
மன்னவர் களினால் பின்னம்வா ராமல்
காக்கும் தொழிலே ஆக்கம்ஆக் கொண்ட
அதிகாரி மன்றினில் பதிவுஆ யிருந்தது;

அதிகாரி வெள்ளையர் மதிநல மோகனர்
தமக்குத் தெரிந்தவர்; தமையனார் சொல்லத்
தட்டமாட் டாமல் கிட்டினார் துரையை.
தாம்வந்து சேர்ந்தது ஆம்செய் தியினைச்
சொல்லத் தொடங்கலும், பொல்லா தவர்ஆம்

துரைசினம் கொண்டு விறைத்துப் பார்த்து,
"சூழ்ச்சிக் காரர் வீழ்ச்சி அடைந்தார்!
அவர்க்குப் பரிதல் அவமே, செல்லும்.
எழுதி அவர்தம் பழுதுஇலாத் தன்மையை
நிலைநாட் டச்சொலும்; இலைவழிவேறு தான்'' என்றார்.

தன்நலம் எல்லா நன்நல மும்கொலும்!
மோகனர் பேசும் தாகமாய்த் தன்நலம்
சொல்லத் தொடங்கலும், வல்ல அங்கிலர்
ஏவலால் வந்த காவலன் காந்தியைக்
கழுத்தைப் பிடித்தே இழுத்துத் தள்ளினன்.

சினம்மிகக் கொண்டு மனம்மிக நொந்து
"மான நட்டம் ஆன வழக்கினைத்
தொடங்குவேன்" என்றார்; அடங்கார் ஆங்கிலர்.
"ஆனதைப் பாரும் மானம் சேரும்"
என்றுஅவர் மேலும் கொன்றனர் மானம்.

மேதாவி பிரோசா மேதாஈது அறிந்தனர்:
"சிறுவர் காந்தி! உறுவது அறியார்.
வழக்குத் தொடர்வது சழக்கே. ஆதலால்
நலம்ஏ தேனும் பலம்பெற வேண்டின்
அடங்கி இருத்தலே திடம்எனச் சொல்லுக.

அங்கிலர் தங்களை இங்குஇவர் அறியார்"
எனச்சொலி அனுப்பிச் சினம்ஆற் றினரால்.
நொந்த புண்ணில் வந்து வேல்தான்
நுழைந்தது போல உழைந்தது சிந்தை.
துறைசெல் வாக்கோ வரைகடந்து அகன்றது.

அவர்மன் றத்திலே இவர்பிழைப்பு இருந்தது. கதேவார்
அரசர் யாவரும் பரசி அவர்புகழ்
மீளா அடிமைக்கு ஆளா இருந்தனர்.
துரையின் அடித்தா மரைமலர் வணங்கும்
காவலன் தன்னையும் ஆவலாய்ப் போற்றுவர்

கைக்கூலி தந்து எக்கா லத்திலும்
என்னின் அரசர் சின்னப் பெருமை
என்னெனச் சொல்வது? மன்னும் இழிவே!
மன்னர் தம்மிலே இன்னது ஆயின்.
மற்றவர் தம்மிலே சொற்றலும் வேண்டுமோ?

எங்கும் சூழ்ச்சி! எங்கும் இழிசெயல்!
எங்கும் அடிமை தங்கும் வாழ்வு
கண்டார் காந்தி கொண்டார் துன்பம்.
அங்குஆவது அகன்று தங்க எண்ணினார்;
ஓய்ந்திடாது இவ்வணம் பாய்ந்துஇருந் ததுவால்.

இந்த நிலையில் வந்து சேர்ந்தது
என்றும் இவர்புகழ் நின்று நிலைத்திடச்
செய்த அழைப்பது பெய்த கடிதமே.
தாதா அப்துல்லா தீதுஇலாக் கம்பெனிப்
பங்குஆளி ஒருவர் தந்துபோர் பந்தரில்

சென்று சேர்ந்தனர் நன்றுகாண் சிந்தையர்
அண்ணனும் தம்பியும் எண்ணாது எலாம்எணி
பங்காளிஆன
அப்துல் கரீம்சேத்து செப்புதல் மேவினார்:
"எங்கள் கம்பெனி தங்கு புகழது
தென்ஆப் பிரிக்கா என்னும் நாட்டினில்.

ஆங்கண் அன்புடன் தாங்கள் சென்று
பாங்குடன் வழக்கைத் தாங்கி நடத்திடும்;
செலவுஎலாம் எமது; பலநலம் சேரும்;
ஆண்டுஒன் றேதான், தாண்டாது அதனை.
பரிசுநூற்று ஐம்பவுன் வரிசையாய் வழங்குவோம்.

வழக்கோ பெரிது; பழக்கமும் ஆகும்."
கேட்டார் இன்பம் வேட்ட காந்தியார்;
நனிபுகழ் பெறவே தனிஇடத்து இருந்துதம்
அண்ணனார் உடனே எண்ணினார்,
செல்ல இசைந்தார் செல்வம் சிறக்கவன்.

# அ. தென்னாப்பிரிக்காவில் வழக்கு வென்றது.

இருமக வுடனே இருந்த மனைவியைப்
பிரிந்து போயிடப் பரிந்துபின் வாங்கினார்.
பம்பாய் சென்று தம்சிறு முயற்சியால்
இடம்இலாக் கப்பலில் இடம்முதல் வகுப்பில்
பெற்றுத் தலைவன் உற்ற தோழராய்

இந்தியத் தாய்க்கு வந்தனை செய்து
கிளம்பி லாமூ வளமொம் பாசா
துறைமுகங் களிலே கரைமுகத்து இறங்கி
ஊர்அணி கண்டு பார்புகழ் காந்தி
சான்சி பாரிலே பான்மையாய்ப் பத்துநாள்

தங்கி அங்கே எங்கும் ஓங்கிய
மரங்களும் அவைகளின் சிரங்களில் பழங்களும்
பார்த்து மகிழ்ந்து சீர்த்தமோ சாம்பிக்குத்
தாண்டி அங்கிலர் ஆண்ட நேட்டாலின்
துறைமுகம் எனவே அறைபுகழ்த் தர்பன்

நகரினை அடைந்தார், அகமிக மகிழ்ந்தார். அப்போது,
திருஉடை யவர்வயது இருபத்து நான்காம்.
அப்துல்லா சேத்து தப்பாது வந்து
காந்தியைக் கண்டு மாந்தினார் மகிழ்ச்சி.
மிகவும் பெரிய தகவினர் சேத்து

நண்பர்க ளிடத்துப் பண்பாய் அறிமுகம்
செய்து வைத்திட எய்தினர் இன்பம்
மோகனர் உலக முதல்வர் காந்தி.
குற்ற நீதி மன்றம் காணச்
சேத்துடன் சிரியர் சென்ற காலை

மன்றத் தலைவர் மதியாது அவரைத்
தலைப்பாகை தன்னை நீக்கிடக் கூறினர்.
வெறுத்த காந்தி மறுத்துஉடன் வெளியே
சென்றனர்; செய்தித் தாள்கள் எல்லாம்
செய்தியை எழுதிச் சிலகண் டித்தும்

பலமோ கனர்க்குப் பரிந்து பேசியும்
வெளிவந் தனவால்; வீரர் பெயரும்
எங்கும் பரந்தது; இசைமிகப் பெற்றார்.
அப்துல்லா சேத்து அறிவில் சிறந்தவர்;
அவர்தம் வழக்கை அழகுஉறச் சொல்லி

பிரிடோரி யாவுக்குப் பேணி அனுப்பிட
மோகனர் முதல்வகுப் பாம்புகை வண்டியில்
ஏறிச் சென்றனர்; மேரிட்சு பர்க்கெனும்
தலைநகர் தன்னைச் சேர்ந்ததும் தகாதார்
சிலபேர் வந்து சீறி விழுந்து

"முதல் வகுப்பு ஏற முடியுமோ கறுப்பன்?
இறங்கு கீழே" என்று கடிந்து
காந்தியைக் கையைப் பிடித்து வெளியே
இழுத்துத் தள்ளினர்; என்செய்வார், அந்தோ!
வெள்ளையர் நிறத்திமிர்! விரிவிலா அறிவு!

ஆறாம் வகுப்பினர் என்ற ஆணவம்!
இவைகா ரணமா ஏந்தல் காந்தியார்
துன்பம் பெற்றார். துணைவர்சேத் துக்கும்
அதிகாரி கட்கும் அனுப்பினார் தந்தி;
சேத்துஅப் துல்லா செய்த முயற்சியால்

மேரிட்சு பர்க்குவாழ் மேன்மை இந்தியர்
காந்தியைக் கண்டு தேற்றினர் மாலையில்;
"முதன்மை வகுப்பில் இதமுடன் இந்தியர்
ஏறிப் போதல் அடாதாம்; ஏறினும்
அதிகாரி அகல ஆணை தந்தால்

வேற்றிடம் போதலே விதிஆம்; அதனால்
காந்தியைக் கடிந்தது சரியே" எனவே
அதிகாரி கூறி அனுப்பிய வண்டியில்
அவர்க்கென ஒதுக்கிய இடத்தில் அமர்ந்து
சென்று சேர்ந்தனர் சார்லசு நகரை,

மாநிலம் புகழும் மதிவலர் காந்தி.
நகர்அதி லிருந்து நகர்சோ கானிசு
செல்வது வேண்டின் சீர்ஆம் குதிரை
வண்டிதான் உண்டு; வண்டி ஓட்டியின்
வலப்புறம் ஒருவரும் இடப்புறம் ஒருவரும்

இருக்க இடம்உள; இவற்றுள் ஒன்றிலே
தலைவன் இருப்பான்; தன்னிடம் தன்னில்
காந்தியை இருத்திக் காவலன் வண்டியுள்
அமர்ந்தனன்; அதற்கும் காரணம் கறுப்பர்
வெள்ளையர் உடனே வீற்றுஇருந் திடுவதா

என்னும் திமிரே; என்னே இழிகுணம்!
மாலை மூன்று மணிக்கு வண்டி
பர்தே கோப்புஎனும் பதியை அடைந்தது. அப்போது,
காவலன் காந்தி இடத்தில் கடுகி
“எனக்கு இடம் வேண்டும்; எழுந்து நீ படியில்
இரு” என இயம்ப, இசையாது காந்தி
மறுக்க, அம் மடையன் மதிஇலாது அவரைக்
காது களிமேல கையினால் அடித்துக்
கீழே இழுக்க, உள்ளக் கிளர்ச்சியால்
அவர்பிடி விடாமல் அசையாது இருந்தார்.
அடித்துஅடித்து இழுத்தான்; அதனைக் கண்டவர்
இரங்கி “ஐயோ, இவர்என் செய்தார்?
ஒன்றும் அறியா இவரை உதைக்கிறாய்.
இவர்எம் முடனே இருக்கலாம் அடியேல்”
என்று கூறிட, இழிந்த பிறப்பினன்
ஆகும் காவலன் அவரை விட்டு
வெட்கி வேறுஇடம் இருந்து விரும்பிச்
சுருட்டுக் குடித்தனன் சுருள்புகை ஓடிட.
“பிரிடோரி யாவைப் பிரியா உயிருடன்
சென்று சேர்வேனோ?” எனஅவர் எண்ணினார்.
இவர்க்கே இந்தப் பாடெனில் மற்ற
இந்தியர் பட்ட இடைஞ்சல்எம் மட்டோ? அன்றுஇரவு
தாண்டர் தன்எனும் சிற்றூர் தன்னில்
ஈசா சேத்தின் இல்உணவு உண்டு
சித்தக் கலக்கம் சிறிது தெளிந்தே

அடித்தவன் மேல்சினம் அகற்றி மறுநாள்
ஏறி வண்டியுள் இனிதுபோய் இரவில்
யோகா னிசுபருக்கு எனும்நகர் எய்தி,
இடம்இலை விடுதியில் எனும்விடை கிடைக்க,
அப்துல் கனிசேத்து அன்புஅகம் அடைந்து

தங்கினார் மோகனர், தாம்பெறு பரிசுஎலாம்
செப்பினார்; கேட்டுச் சேத்து மொழிவார்:
"இந்தியர் இங்கே எய்தும் இழிவுகள்
எல்லைஇல் லாதன; இவைநீர் கண்டீர்.
புகைவண் டியினில் போகும் போது

வெள்ளையர் உடனே விரும்பிநாம் முதல்இரு
வகுப்புக் களில்உட் கார வழிஇலை.
கையைப் பிடித்துஉமைக் கரகர என்றே
இழுத்தான் தீயவன்; இன்னொரு வன்உமைக்
குதிரை வண்டியில் கொடுமையாய் அடித்தான்,

இருக்கவும் வண்டியுள் இடம்தர மறுத்தான்;
இரவில் விடுதியில் இடம்இலை என்றான்
மற்றொரு வெள்ளையன்; மாண்பு நண்பரே!
நேத்தால் நிலையிலும் திரான்சுவால் நிலைமை
முழுதும் மோசம்ஆம்; முதல்வகுப்பு ஏற

அங்குநீர் சீட்டுப் பெற்றீர்; இங்கே
சீட்டும் தாரார்; வெள்ளையர் செல்லும்
தெருக்களி லும்நாம் செல்லுதல் தீமைஆம்.
அடையும் அவமதிப் புக்களை நாங்கள்
பாராட் டுவதுஇலை, பணம்தேடுவதே

குறிஎமக்கு ஆதலால் நிறத்தின்கொடுமை!"
இவைகளைக் கேட்டே ஏங்கினார் காந்தி.
"தன்னைக் காட்டித் தான்கொடேன்" எனவே
வாக்குப் பெற்று வண்டி நிலையத்
தலைவர் முதன்மைச் சீட்டுத் தந்தட

முதல்வகுப் பினிலே சென்றார் முதல்வர்.
செருமிசுத் தன்எனும் நிலையம் சேர்ந்ததும்
வண்டித் தலைவன் வந்தான் காந்தியை
முடுக்காய் "மூன்றாம் வகுப்பு, போ" என்றான்.
அவருடன் இருந்தவர் ஆங்கிலர் ஒருவரே;

அவர்தலை வன்இடம், "அகற்றேல் அவரை;
முறைமை அன்று" என முனிந்தார்; மூடன்
"கூலி உடன்நீர் கூடி இருப்பிரேல்
எனக்குக் கவலைஎன்?" எனஅகன் றனனே.
ஆங்கிலர் தம்முளும் தீங்குஇலர் உளரே!

வண்டி பிரிடோரியா வந்துசேர்ந் ததுவால்
இரவினில் எட்டு மணிவே ளையிலே.
அமெரிக்கர் விடுதியில் அறைஒன்று அமர்த்தி
அற்றை இராப்பொழுது அகன்றதும் காலையில்
அப்துல்லா சேத்தின் அட்டார்னி ஆகும்

பேகரைக் கண்டு பேசி மகிழ்ந்தனர்;
அவர்துணை யால்ஓர் ஏழை அம்மையார்
வீட்டில் விரும்பு சைவ உணவுதான்
ஏற்பாடு செய்து இனிதுவாழ்ந்து இருந்தார்.
பேகர் என்பவர் பெரிதும் நல்லவர்;

அவரால் கோடெசு, ஆரிசு அம்மை
முதலிய கிருத்துவ முதல்வர் நட்பைக்
பெற்றுஅச் சமயப் பெரிய நூல்களை
நன்கு கற்றார் நாடிஆ ராய்ந்தார்;
உண்மை காணும் உள்ளம் உடைமையால்.

நேத்தாலில் எப்படிச் சேத்அப் துல்லா
அப்படித் திரான்சு வாலில் ஆவர்
தயாப்பு சேத்து; தமக்குத் தாமே
ஒப்புஆ வார்கள்; உயர்வுஒரு வரும்இலர்.
தாயின் தன்மைஆம் தயாவுடன் அன்னார்

ஏழை எளியவர் புதியவர் யார்க்கும்
ஆதரவு அருளும் அன்பரா அமைந்தனர்.
தயாபுடன் மோகன தாசர் நட்புக்
கொண்டுஅந் நாட்டு வணிகர் கூட்டம்
கூட்டி "வாணிகத்தில் உண்மையைக் கொள்ளல்"

என்னும் பொருளை எடுத்து மொழிந்தார்.
பேசும் பொருள்தனை முன்னரே பெரிதும்
ஆராய்ந்து அமைத்தனர் அறிஞர் காந்தி.
அதுதான் அவருடை முதல்ஆம் பேச்சு;
அதுவே முதன்மைப் பேச்சா ஆயது.

அதுவே அவர்உயர் வுக்குஎலாம் அடிப்படை.
அந்நாட்டு இந்தியர் அனைவரும் வந்தனர்
கருத்துடன் காந்தி பேச்சைக் கேட்கவே.
அப்போது அவர்உரை அன்புடன் கேளீர்:
"தோழரே, உண்மையே மெய்ஆம் தோழன்ஆம்.

உண்மை பேசி உயர்ந்த வணிகர்
இல்லை என்றே இயம்புவர் அறியார்.
உண்மையே உயர்வையும் உள்ளவா அழியாச்
செல்வம் தன்னையும் சீருடன் தந்திடும்.
வணிகரே உண்மையை வளர்க்கும் கடமையர்.

அதிலும் அயல்நாடு அடைந்த வணிகரே
சிறப்பா உண்மை செப்பிடல் வேண்டும். ஏனெனில்,
அவர்களைக் கொண்டே அவர்தாய் நாட்டு
மக்கள் ஒழுக்கமும் மதிக்கப் படுவது ஆம்.
அயல்நாடு அடைந்த இந்தியர் யாவரும்

வடுகர் தமிழர் வங்கர் மராட்டியர்
முதலிய நாட்டினர் எனினும் முற்றிலும்
வேற்றுமை இன்றி விளங்கிடல் வேண்டும்.
அப்போது தான்நாம் அனைவரும் வாழலாம்.”
இங்ஙனம் காந்தி இயம்ப யாவரும்

“உண்மை, உண்மை” எனஉடன் பட்டனர்.
வணிகர் செய்யும் வஞ்சகம் நெஞ்சால்
எண்ணினும் எரியும்! இவர்கள் ஒன்றைப்
பத்தாப் பத்தைப் பதிற்றுப் பத்தாப்
பெருக்கி விற்றுப் பெரும்கொள்ளை கொள்ளுவர்.

‘இவர்களைக் கண்டே இறைவர் பாம்பே
நகைதான் ஆகவும் நல்உடை தோலே
ஆகவும் கொண்டார்’ எனஓர் அறிஞர்
பாவலர் பாட்டும் பாடிக் காட்டினர்.
“கொண்ட படியே விலையைக் கூறுவர்;

ஊதியம் சிறிதா இதுஎன உரைப்பர்.
இதுவே வணிகர் இயல்புகாண்; இவர்தம்
செல்வமே நிலைக்கும் செல்வம்'' எனவே
மற்றொரு புலவர் மதிஉரைத் துள்ளார்.
தெய்வப் புலவர் திருமொழி ஆய்வாம்;

“அன்புநாண் ஒப்புரவு வாய்மைகண் ணோட்டம்
பிறர்தீமை சொல்லாப் பெருமை பணிதல்
தோல்வி துலைஅல் லாதார் இடத்தும்
கொள்ளுதல் இன்னா கொடியசெய் தார்க்கும்
இனியவே செய்தல் எக்கேடு வரினும்

நிலைதிரி யாமை முதலிய நிலைக்குளலாம்
பெரும்புல வோர்கள் பேணிக் கூறும்
சான்று அமைவோர் சான்றோர் ஆவர்.
வேண்டியோர் தெரியார் வேண்டார் எனஇவர்
வேறுபாடு அறியார் விரும்பி ஒருபால்

கோணாது உண்மை கூறுவர், கோல்தான்
நிறுப்பதன் முன்னர்ச் சமன்ஆக நின்று
நிறுப்பது போல; நெஞ்சில் கோட்டம்
இல்லாது ஆயின் இலைசொல் கோட்டமும்.
வாணிகம் செய்வார்க்கு வாணிகம் ஆவது

பிறர்பொருள் களையும் தமபோல் பேணிச்
செய்தலே; செப்பம் தகுதி அதுவே.
செப்பம் உடையவர் ஆக்கமே சிதையாது
உறுதி உடையதாய் ஒன்றும் மக்களை.
நடுஆக நன்மையில் நில்லார் தாழ்வர்;”

காந்தியார் வணிகர் கடமைகள் கூறி,
"அதிகாரி களுக்குநாம் அடையும் தொல்லைகள்
யாவும் கூறி ஈடேற வழிகள்
காணும் சங்கம் ஒன்று காணுவோம்.
என்றால் இயன்றன எல்லாம் செய்வேன்"

என்றார்; யாவரும் ஏற்றுக் கொண்டனர்.
அடிக்கடி ஆங்கே அத்தகைக் கூட்டம்
நடந்தது; அதனால் நலம்பல விளைந்தன;
பேசும் வன்மை பெற்றனர் பலபேர்.
ஆங்கில அரசின் தூதரா அங்கர்த்

தங்கிய தீவெட்டு என்பவர் தம்மைக்
கண்டு காந்தி கலந்துஉரை யாடியும்
புகைவண் டித்துறை போன்ற துறைகளில்
இந்தியர்க்கு உளஆம் இடைஞ்சலை நீக்க
அதிகா ரிகளை அணுகிப் பேசியும்

முயன்றார் மோகனர்; விளைந்தன பயன்சில.
திரான்சு வாலின் திருந்திய சட்டம்
ஒவ்வோர் இந்தியரும் ஒவ்வோர் ஆண்டுக்குக்
தலைவரி மூன்று பவுனைத் தரவும்
ஒதுக்கிய இடங்களில் ஒதுங்கிவாழ்ந் திடவும்

விதித்தது; மேலும், விரிபொதுப் பாதைகள்
தம்மில் நடத்தல் தடுக்கப் பட்டது.
இரவில் இந்தியர் ஒன்பது மணிக்குமேல்
வெளியே செல்ல விரும்பினால் அனுமதிச்
சீட்டுப் பெற்றே செல்லுதல் வேண்டும்.

தீண்டா தார்ஆத் திரிந்தனர் இந்தியர்,
அதனால் காந்தி அட்டர்னி கிராசே
இடத்தில் ஒருசீட்டு ஏற்றுப் பெற்றார்.
நாட்டுத் தலைவர் குருகர் நல்லவர்,
எளிய வாழ்க்கையே என்றும் கொண்டவர்.

அவர்வாழ்ந் திருந்த அகன்ற தெருவினைக்
காந்தி அடிக்கடி கடந்துசென் றிடுவது
வழக்கம், ஒருநாள் வகைஅறி யானொரு
காவற் சேவகன் காந்தியை உதைத்துத்
தெருவில் தள்ளினான்; தெரிந்தார் கோடெஸ

விரைந்து வந்து விரிவிலா அறிவினன்
ஆகும் அவனை அகற்றிக் கடிந்து
காந்தி பெருமை கூறிடக் காவலன்
குற்றம் உணர்ந்து கொண்டு பணிந்தான்.
குணமலை ஆகும் கோமான் காந்தியும்

அவன்செய் குற்றம் அகற்றினார் மறந்தார்.
"நன்றுஅல்லது அன்றே மறப்பது நன்றுஆம்"
என்பது தேவர் இயம்பிய மறைமொழி.
எனினும் இந்தியர் எத்தனை காலம்
இங்ஙனம் துன்பமால் ஏங்கித் தவிப்பது?

விடுதலை வழிதம் விரிந்த அறிவினால்
நாடி நாடி நின்றார் நிகர்இலார்;
'வந்த காரியம் வழக்கினை வெல்வதே'
என்பதை எண்ணி எப்பொழு தும்இவர்
அதற்குஆம் வழிகளை ஆராய்ந்து இருந்தார்.

ஆயிரம் நாற்பது ஆகும் பவுனைப்
பற்றிய வழக்குஇது; படித்தார் நுணுகி.
இருதிறத் தாரும் எதிர்இலா அறிவினர்,
நெருங்கிய உறவினர், நெடுநாள் நட்பினர்;
மயிர்இழை யும்செலா மாண்புஉள நட்புப்

பொருள்இடை வந்ததால் போயது பகையா.
வழக்கில் வெல்ல வாய்ப்புத் தருவது
விவரமே ஆதல், விதிஎன் பதையும்
உண்மை வழியில் ஊன்றி நிற்பவர்
பக்கமே சட்டம் பதியும்என் பதையும்

தெரிந்த காந்தியார் திறம்பட உண்மை
வழியில் நின்று வகைதொகை யாவும்
தெளிந்த போதுதம் தீர்அப் துல்லா
பக்கமே வெற்றி என்பது பார்த்தார். ஆனால்,
"வழக்கு முடிந்திட வாய்க்கும் காலம்

எதுவோ? எவர்தான் அறிவார்? எத்தனை
ஆண்டுகள் இன்னும் ஆமோ? அதுவரை
மேலும் மேலும் பகைமைமீ தூரும்.
உரிய பணிகளை உரிய காலத்தே
செய்தல் இயலாது. அதனால் சீர்கெடும்.

செல்லும் செலவோ செல்வக் கடலைத்
தூக்கிக் குடித்துத் தூர்த்து நிரப்பிட
இருபெரும் செல்வரும் ஏழைகள் ஆவர்.
வெற்றியை ஒருவர் பெறுவர் வென்றவர்
தோற்றவர் இடத்தில் தொல்லைசெய் தாவது

பணந்தனைப் பெற்றுப் பார்த்தல் முடியுமா?
பக்கத்து இருந்து பகைமையை மூட்டி
வேடிக்கை பார்க்கும் வீணர் இவரிடம்
பணத்தைப் பறித்துப் பணக்காரர் ஆகிறார்;
வழக்குஎடுத்து உரைக்கும் பாரித் தரோபணம்

பணம்அதற்கு இதற்குஎனப் பறித்துக் குவிக்கிறார்;
தம்மை அடுத்தவர் தன்மை உணர்ந்து
நல்ல மதிபல நயம்படச் சொல்லிப்
பகைமையைத் தீர்த்துப் பழைய படிஅவர்
நண்பராக் கூடி நல்வாழ்வு அடைந்திடச்

செய்தலே தாங்கள் செய்கடன் என்பதை
அறிந்தால் அத்தனை அல்லலும் அகலுமே.
உலகம் இன்பம் உற்று மகிழுமே.
என்கடன் இனிஇவர் இருவர் வழக்கையும்
நடுவர் ஒருவரால் தீர்த்து நலம்பெறச்

செய்வதே ஆகும்; செய்வேன் உடனே.”
எனவே எண்ணித் துணிந்தார் கருமம்
எண்ணிய எண்ணிஆங்கு எய்தும் திண்ணியர்
மோகன தாசர் முனிவர் காந்தியார்.
தயாப்பு சேத்து தம்நிகர் இல்லார்

காந்தி கூறிய காரணம் யாவையும்
சிந்தையில் கொண்டார்; சேத்துஅப் துல்லா
தாமும் இணங்கினார்; தகுதிசேர் நடுவர்
ஒருவரை மன்றம் ஒப்பி அமைத்தது.
இருவர் வழக்கையும் எண்ணிய நடுவர்

"முப்பத்து ஏழா யிரம்பவுன் செலவுடன்
அப்துல் லாவுக்கு அளிக்க தயாப்பு சேத்து"
என்ற முடிவை இயம்பினர்; இதனால்
காந்தி வந்த காரியம் இனிதே
வெற்றி ஆயது; வென்றவர் பணத்தைப்

பெற்றால் தானே வெற்றி வெற்றியாம்?
இத்தனை பணமும் மொத்தமாய்க் கட்டத்
தயாப்பு தயங்கினர் தளர்ந்தார் தவித்தார்.
கண்டார் காந்தியார் அப்துல் லாவை:
'அன்பரே, தயாபு அத்தனை பணமும்

தந்திட மொத்தமாய் நொந்திடு கின்றார்,
சித்தம் கலங்கிச் சீவனை விடுவார்.
மிகப்பெருந் தன்மை மேதாவி ஆகும்
தாங்கள் இரங்கிப் பாங்குடன் பணத்தைப்
பல்பல் தவணையில் பகிர்ந்து பெற்றிட

இசைந்துஅரு ளுதலே இதம்பெறும் வழியாம்"
என்றுவேண் டுதலும் இணங்கினர் அவரும்.
பகைவர் ஆயினர் பகைமையை மறந்தனர்
நகைபெறு நண்பரா நாடிக் கலந்தனர்.
ஈதுஅன் றோமெய் வெற்றி! இதனைத்

தந்த காந்தியார் தகைமையே தகைமை!
வழக்குஎன வருபவர் தமக்கு வாய்ப்பா
உண்மையை ஓதி உறுபகை தீர்த்து
நண்பராக் குவதே நல்தரும் கடமை
பாரிஸ் டருக்குஎனப் பாரோர்
அறிந்திடச் செய்தார்; அவர்புகழ் வாழிய!

## ௬. நேத்தால் இந்தியர் பேரவை

வந்தகா ரியம்ஆம் வழக்கினை இரண்டு
கட்சிக் காரரும் களிப்புடன் நன்மை
பெறும்படி பேணி வென்ற பெரியார்
காந்தி அடிகள் கனமகிழ் வுடனே
தர்பன் வந்தார்; தாய்நாடு செல்லச்
சீட்டும் பெற்றார்; சேத்துஅப் துல்லா
நண்பர்எல் லாரையும் நாடி அழைத்துப்
பெரியதுஓர் விருந்து பெருகிய நட்பின்
அறிகுறி ஆக அன்புடன் நடத்தினார்.
நற்செயல் ஆகநாள் தாள்ஒன் றினிலே
இந்தியர்க்கு இருந்த வாக்குஉரி மையினைப்
பறித்திட நேத்தால் பார்லி மென்றிலே
சட்டம் ஒன்று சார்ந்த செய்தியைக்
கண்டு காந்தி கலங்கி உரைத்திட
அனைவரும் வருந்தி "அதனைத் தடுத்திட
வேண்டும் வழிஎலாம் காண்டும் ஈண்டுநீர்
தங்கி எங்களைத் தாங்கி அருளிடும்"
என்ன வேண்டினர்; இணங்கினர் காந்தி.
பெரியவர் செல்வர் சிறியவர் ஊழியர்
இந்து முசிலிம் சிந்தி கிருத்தவர்
தமிழர் தெலுங்கர் தமில்பிணக்கு ஒழிந்தனர்,
ஒன்று கூடினர், வென்றி தேடினர்.
பாநாடு கூட்டினர் மாவிண் ணப்பம்
எழுதிஎல் லாரும் பழுது தீரவே
அனுப்பி முயன்றும் அரசுஆள் வெள்ளையர்

சட்டம் ஆக்கினர் சற்றும் இரங்கிலர்.
இந்தியர் நலத்தை எந்த விதத்திலும்
காத்திடத் துணிந்த காந்தி பணிந்து
வேண்டிய நண்பர் தூண்டிட விரும்பி
ஆங்கே தங்கிடப் பாங்குடன் இசைந்தார்.

இந்தியர் நலனை என்றும் போற்ற
நிலையான சங்கம் அமைக்க நினைந்து
வள்ளுவர் ஆண்டுஆ யிரத்துத் தொளாயிரத்து
இருபத் தைந்தில் வைகாசி ஒன்பதில்
நேத்தால் இந்தியப் பேரவை நிறுவி

இடைவிடாது உழைத்தார்; என்றும் தொண்டர்
பொதுப்பணம் கொண்டு புசித்து வாழ்வது
தக்கதே அன்று; ஆதலின் தாமே
பணத்தைத் தேடிடப் பாரித்தர் ஆனார்.
வழக்குஉரை வெள்ளையர் சங்கம் வம்புசேர்

நெஞ்சுடன் எதிர்த்தும் நேர்மை பொருந்திய
உயர்நீதி மன்ற ஒண்புகழ்த் தலைவர்
காந்தியை என்று கொண்டனர், "காந்தி!
உயர்நீதி மன்ற ஒழுங்கின் படிநீர்
உடைஅணிந் திடும்இனி உம்தலைப் பாகையை

அகற்றிடும்" எனலும், அறிஞர் மோகனர்
உலகத் துடனே ஒட்ட ஒழுகும்
விதிஅறிந்து இசைந்தார் விரிபுகழ் பெற்றார்.
இந்திய வணிகர் ஏற்படும் வழக்குஎலாம்
வந்துஇவ ரிடமே தந்தனர் ஆக

உண்மையைப் பலமுறை ஊன்றி ஆய்ந்துதம்
கட்சிக் காரர் உடனே எதிரியை
அழைத்து மெய்ம்மையின் அழியா நிலைமையை
எடுத்துக் கூறி இருவரும் நண்பரா
மலர்ந்த முகத்துடன் மதியும் நலமும்

ஒருங்கே பெற்றுஅவர் ஓங்கிடச் செய்தார்;
யாவரும் இவரை ஏத்தினர் வாழ்த்தினர்.
வழக்குஉரை தொழிலினும் வாய்த்த பேரவை
தன்னை வளர்த்தலே தலைசேர் பணியாக்
கொண்ட பெரியார் அடிக்கடி கூட்டம்

கூட்டிக் கடமையும் நலமும் கூறினர்.
மெய்ம்மை நெறியில் மேவினர் பல்லோர்;
பேச்சுத் திறமை பெற்றனர் பலபேர்;
உறுப்பினர் சேர்த்தனர் ஊர்எலாம் சுற்றினர்,
பெரும்பொருள் சேர்ந்தது பேரவை யினுக்கே.

பணம்பெற்ற உடனே பற்றுச் சீட்டினைத்
தருவதும், தந்த சிறுசிறு தொகைக்கும்
கணக்கு வைப்பதும் கடமையாக் கொண்டார்.
தேவைக்கு ஆன திரவியம் திரட்டலே
முறைமை, மீறினால் மோசம்ஆம் பகைமை

கலகம் வந்து கலைத்திடும் நிலையமை. ஆதலின்
வேண்டுவ தற்குமேல் விரும்பார் என்றும்.
இந்தியர் துன்பம் இந்தியா இங்கிலந்து
எங்கும் தெரிந்திட எல்லா வழியிலும்
முயன்று முடித்தார் மோகன தாசர்.

இந்தியா எங்கணும் எல்லாக் கட்சியும்
உண்மை தெரிந்துதம் உள்ளம் கொதித்திட
இங்கி லாந்திலும் இரங்கிய மனத்தினர்
நெஞ்சம் பதைத்தனர்; நேத்தால் முதலிய
தென்னாப் பிரிக்க நாட்டிலும் தெளிந்த

நேர்மை வெள்ளையர் நெகிழ்ந்தனர் சிந்தை.
இந்தியர் முதன்முதல் நேத்தால் எய்திய
செய்தியும் அவர்கள் சீர்கேடு அடைந்ததும்
விளங்கக் கூறுதும் உளம்கொளக் கேண்மோ.
உண்ண உணவும் உடுக்க உடையும்

தங்க இடமும் இலாது தவித்த
வெள்ளையர் பல்லோர் விருப்ப முடனே
குடியேறி னார்கள் குடும்பத் தோடு,
பண்டைக் குடிகளாம் சூலூ வகுப்பரைப்
பதறிட அடித்துத் துரத்திப் பலத்துடன்

அரசுஆட் சியையும் அமைத்து நிலத்தைத்
திருத்திப் பயிரிடத் துணிந்து திகைத்தனர்
தம்மிடம் உடல்உரம் தக்க ஆறுதான்
இல்லாமை கண்டு; என்செய் வதுஎன
எண்ணி இந்தியரை எப்படி ஆவது

கூலிகள் ஆகக் கொண்டுவந் திட்டால்
கரும்பு வளர்த்துக் காய்கறி எல்லாம்
பயிர்செய்து உண்டு பணக்குவை திரட்டலாம்
எனவே துணிந்தனர் இந்திய அரசின்
ஆதரவு அதனையும் அணுகி அடைந்தனர்.

தலைவர் வெள்ளையர் தமக்குக் கறுப்பர் ஆம்
இந்தியர் கூலிகள் ஆக இணங்கி
ஆண்டுகள் ஐந்துக்கு அடங்கி நடந்திட
ஒப்பந் தம்செய்து உடம்பைக் கரும்புபோல்
பிழிந்து நடந்தால் பெரும்பொருள் தருவோம்;

பின்னர் ஆங்கே பெருநிலம் வீடுகள்
வாங்கி வாழலாம் வாரீர் எனவே
ஆசையும் காட்டினர்; அதனால் இந்தியர்
எண்அற் றவர்கள் ஏகினர் நேத்தால்;
எண்ணிய படியே கண்ணியம் ஆக

அடித்த அடிஎல்லாம் ஆணும் பெண்ணும்
பச்சைப் பாலரும் பட்டுத் தெளிந்து
செட்டாய் வாழ்ந்த சீரினால் திரட்டிய
சிறுதொகை கொண்டு சிறுசிறு நிலங்களை
வாங்கியும் வீடுகள் கட்டியும் வாழ்ந்தனர்;

இந்தியக் காய்கறி எல்லாம் இங்கே
கொண்டு வந்து குறைந்த செலவில்
பயிர்விளை வித்துப் பயன்பெற் றார்கள்;
பலவகை ஆனமாம் பழங்களை இன்று
தென்ஆப் பிரிக்கர் தின்று செழித்திடப்

புத்தம் புதிதா மாமரப் பூங்கா
ஆக்கிய பெருமையும் அவர்க்கே உரியதுஆம்.
அவர்களைத் தொடர்ந்துவந்து அடைந்த வணிகர்
செட்டினால் செல்வம் சேர்த்துமேல் ஓங்கினர்.
வெள்ளையர் வயிறு வீங்கினர் பொறாமையால்.

கிணறு வெட்டக் கிளம்பிய பூதம்
போல இந்தியர் போட்டி வாணிகம்
தன்னிலும் கண்ட தருகணர் வெள்ளையர்
ஆட்சி தம்மை அகத்துஇருந் ததனால்
இந்தியர் வாழ்வை எப்படி ஆவது

குலைத்துஅழித்து ஓட்டிடக் கொடுமைகள் சூழ்ந்தனர்.
காந்தி பட்ட கடுந்துன் பங்களே
வெள்ளையர் கொடுமையை வெட்ட வெளிச்சமாய்ப்
புலப்படுத் திடுவன; புகன்றோம் விவரமாய்.
இந்தியர்க்கு இருந்த வாக்குஉரி மையினைக்

கொன்ற சட்டமே கொடுமையுள் முதலதுஆம்.
ஓயாத் துயரம் ஒப்பந்தக் கூலிகள்
அடைந்தனர்; அடிமை வாழ்வே; அந்தோ
அவர்அடை துன்பம் அளக்கவும் படுமோ?
பாலச் சந்திரன் பண்புஆர் தமிழன்

உடைந்த பல்லுடன் இருத்தம் ஒழுகிடத்
தாங்க முடியாத் தடிஅடி பட்டுக்
கதறி வந்து காந்தி அடிகளை
அடைக்கலம் ஆக அடைந்தனன் நின்றிட,
அன்புடன் மோகனர் அரவணைத்து அருளி

மருத்துவர் சான்று மதிக்கப் பெற்றுக்
குற்றம்ஆய் நீதி பதியிடம் கொண்டுபோய்
உற்றது கூறிட, உதைத்த வெள்ளையன்
குற்ற வாளியே எனஅவர் முனிந்தார்.
கொடுமுதல் ஆளியைத் தண்டனை கொடுத்துத்

துன்பப் படுத்தத் துணிந்திலர் காந்தி;
குற்றம் உணர்ந்துஅவன் திருந்தவும், கொடுமையால்
பல்லுடை பட்ட பாலச் சந்திரன்
விடுதலை பெற்று வேறு தலைவனை
அடையவும் செய்வதே அவர்திரு உள்ளம்.

அடிகள் நினைந்தன அனைத்தும் முடிந்தன.
கூலிகள் தமக்குஒரு குலதெய்வம் ஆக
விளங்கினார் காந்தி; விரிந்தது அவர்புகழ்.
இந்தியா இங்கி லாந்துஉலகு எல்லாம்
வெள்ளையர் கொடுமையும் விளங்கிற்று அதனுடன்.

இந்தியர் எளிய வாழ்க்கையும் செட்டும்
செல்வம் சேர்த்திடச் சீர்த்துணை ஆவது
கண்டு பொருமை கொண்டு வயிறுஎரி
வெள்ளையர் சமய வேற்றுமை தூண்டிய
பகைமையும் பூண்டனர் பண்புஒழிந் தனராய்

அவர்தம் வாழ்வுக்கு அடிப்படை ஆகிப்
பாழாய்க் கிடந்த நாட்டினைப் பண்உறச்
சீர்செய்து ஆங்கே செல்வம் பொழிந்திடத்
திருத்திய நன்றியைச் சிறிதும் தேராது
இந்தியர் தம்மை எப்படி ஆவது

நாட்டை விட்டுத் துரத்திட நாடினர்;
"ஒப்பந்தம் தீர்ந்த உடனே இந்தியா
சென்றிடும்; இல்லையேல் செலுத்தும் தலைவரி
ஆண்டுக்கு இருபத் தைந்து பவுனே"
எனஒரு சட்டம் இயற்றிட முனைந்தனர்.

இதனைக் கண்ட இந்தியர் பேரவை
எதிர்த்துப் போரிட எழுந்தது கொதித்தே.
இந்தி யாவினில் எல்சின் என்பவர்
அரசப் பிரதி நிதியார் ஆக
இருந்தனர். அவர்தாம் இசைந்தனர் இந்தியர்

தலைவரி மூன்று பவுன்தரு வதற்கே.
தலைவிரித்து ஆடிய தகாக்கொடும் தீமைகள்!
இங்கும் ஆங்கிலர், அங்கும் ஆங்கிலர்,
எங்கும் வெள்ளையர்! ஏழை இந்தியர்
என்செய வல்லர்? "எங்கள் தலைவிதி!

கடவுளே, நீரே காத்தல் வேண்டும்.
உழைத்துஉயிர் வாழ்கிறோம்; உறுதுயர் தருகிறார்.
என்றுஎம் இந்தியா விடுதலை எய்துமோ
அன்றுதான் எம்துயர் அகலும். அதுவரை
மோகனர் சொல்லும் முறைப்படி கிளர்ச்சிகள்

செய்துபே ரவையினைச் சீருடன் வளர்ப்போம்"
எனஅவர் எண்ணி ஏங்கி இருந்தனர்.
கழிந்தன காந்தியார் வந்துமூன்று ஆண்டுகள்;
இந்தியா திரும்ப எண்ணிப்
பேரவை இடம்அவர் பெற்றனர் விடையே.

## ௰. இரண்டாம் முறை ★ ★ தென்னாப்பிரிக்காவில்.

மியாகான் என்னும் மிகுபுகழ்த் தொண்டரைப்
பேரவை அமைச்சராப் பேணி அமைத்துக்
கப்பல் ஏறிக் காந்தி அடிகள்
வழிஎலாம் தமிழ்மொழி பயின்றுகல் கத்தா
சேர்ந்துஉடன் புகைவண்டி ஏறிச் சீருடன்

அலகபாத்து நகரை அடைந்தனர்; வண்டி
விட்டுப் போய்விட, அந்நகர் விளங்கும்
பயணியர்த் தாள்ஆ சிரியரைப் பார்த்து
நட்புப் பெற்றனர்; நாடிஆ பிரிக்க
இந்தியர் பட்ட இடையூறு எழுதி

இராச கோட்டை எய்திய உடனே
அச்சிட்டு அனுப்பினர் தலைவரும் தாள்களும்
படித்துத் தெரிந்திட; பயணியர்த் தாளே
தலைமை அங்கம் தான்எழு தியதால்
இதனை இங்கி லாந்திற் கும்பின்

நேத்தா லுக்கும் அனுப்பிய நிருபர்
மிகைபடக் குறித்தனர்; மிகுந்த பகைமை
நேத்தால் வெள்ளையர் நெஞ்சில் மூண்டது,
தம்மைப் பற்றித் தகாதன காந்தி
எழுதினார் பேசினார் எனும்எண் ணத்தினால்.

“பம்பாய்ச் சிங்கம், பரதஅந் நாட்டின்
முடிதான் சூடா முதன்மை மன்னர்”
எனும்புகழ் எய்ந்த பிரோசா மேதா
தலைமை தாங்கிடப் பம்பாய் நகரினும்,
உலக மானிய திலகரும் ஒண்புகழ்க்

கோகலேயும் கூடிஆ தரிக்கப்
பந்தர்க் கர்எனும் பண்ணவர் தலைமையில்
பூனா நகரினும், பொங்கு திருமிகு
பச்சை யப்பனார் மண்ட பத்தினில்
சென்னைமா நகரினும் சென்று சேர்ந்த

மாபெருங் கூட்டங் களிலே மதிவலார்
காந்தி பேசினார்; கல்லும் கரைந்தது
தென்ஆப் பிரிக்க இந்தியர் செய்தியால்.
வங்கா ளத்தின் தெய்வமா வாய்த்த
சுரேந்திர நாத பனர்சி சூழலால்

கல்கத் தாவில் காந்தி கூட்டம்
காண்பது ஆகாதுஎனக் கண்டுபின் அமுத
பசார்வங்க வாசி என்னும் தாள்களின்
ஆசிரி யர்களை அணுக அவர்களும்
மதியார் ஆக, மனம்தளர்வு அடைந்துபின்

ஆங்கிலத் தாள்களின் ஆசிரி யர்களைக்
கண்டார்; அவர்கள் கண்டனர் அவர்சொலும்
பேச்சின் உண்மையும் பெருமையும் முதன்மையும்;
தங்கள் தாள்களில் தலைஅங் கத்தால்
ஆதரித்து எழுதினர்; ஆங்கிலர் அங்ஙனம்

உதவி புரியக் காரணம் உள்ளதை
உள்ள ஆறுஅவர் உரைத்ததும் உண்மைப்
பற்றுடன் நின்றதும் பார்த்ததே ஆகும்.
அதனால் அவர்கள் துணையால் ஆங்கே
கூட்டம் கூட்ட எண்ணினர் காந்தி;

அந்த வேளையில் அவர்க்குஒரு தந்தி
வந்தது தருபன் உடனே வந்திட;
தாள்களுக்கு எல்லாம் தந்திச் செய்தியை
எழுதி அனுப்பினர், ஏகினர் பம்பாய்.
தாதாஅப் துல்லா தான்புதிது ஆக

வாங்குகோர் லாண்டு வங்கத் தினிலே
குடும்பத் துடனே ஏறினர் கோதிலார்.
மனைவியும் இரண்டு மக்களும் மருகனும்
அப்போது அவருடன் ஆர்ந்த குடும்பம்ஆம்.
நாடேறி என்னும் நலம்பெறு கப்பலும்

அப்துல் லாவுக்கு உரிமை ஆனது,
கோர்லாண்டு உடனே கூடப் புறப்பட
எண்ணூறு பேருடன் இரண்டு கப்பலும்
புயலும் அலையும் போக்கி அடைந்தன
பதினெட் டாம்நாள் தருபன் பாங்கர்.

தம்மைப் பற்றித் தகாதன காந்தி
இந்தி யாவிலே இயம்பினர் எனவும்
இந்தியர் தம்மை இரண்டு கப்பலில்
எண்அற்ற பேரை ஏற்றி வந்து
நேத்தால் நாட்டில் நிரப்பிவெள் ளையரை

நெருக்கித் தொலைக்க நேர்ந்தனர் எனவும்
கருதிய வெள்ளையர் கடும்சினம் கொண்டு
வந்த கப்பலை வழியில் மடக்கித்
திருப்பி அனுப்பிடத் தீர்மா னித்தனர்;
அரசுஆள் பவரும் அவரைஆ தரித்தனர்.

அவரும் வெள்ளையர் ஆனகா ரணத்தினால்.
உண்மையில் காந்தி ஒன்றும் அறியார்.
வந்த பேர்களில் பாதிக்கு மேலே
திரான்சுவா லுக்குச் செல்பவர் ஆவர்;
கப்பலில் கண்டதே அன்றி அதன்முனால்

காந்தி அவர்களைக் கண்டதே இல்லை.
இந்தி யாவிலே எடுத்துப் பேசிய
உண்மைச் செய்தியை ஒன்று பத்தா
நிருபர் உரைத்ததால் நேர்ந்தது பகைமை
என்பது முன்னரே இயம்பினோம் அன்றோ.

பம்பாய் நகரில் பரவிய பிளேக்கினைக்
காரணம் ஆகக் காட்டி ஐந்துநாள்
காக்க வைத்தனர் கரைசே ராமலே;
கடல்நடு நின்று கண்கலங் கினரால்
செய்வது இதுஎனச் சிந்தைஓ ராமல்.

காந்திமீது இருந்த கங்கு கரைஇலாச்
சினம்கா ரணமாச் சேர்ந்து வந்தபேர்
அனைவரும் துன்பக் கடலில் ஆழ்ந்தனர்.
நாள்தவ றாமல் நடந்தகூட் டங்களில்
வெள்ளையர் காந்தியை வெட்டி வீழ்த்திடத்

துணிவு கொண்டு தூற்றி இகழ்ந்தனர்.
மோகனர் உரைத்த முகமனும் துணிவும்
இந்தியர் தம்மைத் தேற்றிட யாவரும்
கலக்கம் தீர்ந்துதாம் கரையில் இறங்கிடும்
உரிமை யினைவலி உறுத்தி நின்றனர்.

அரசினர் கடைசியில் அவர்களைக் கரையில்
இறங்கிடச் சொல்லினர்; இறங்கினர் அனைவரும்.
காந்தியை மட்டும் கடைசியில் இரவிலே
பாதுகாப் புடனே இறங்கிடப் பணித்தனர்
எசுக்கோம்பு என்னும் மந்திரி மதிவலர்.

ஆனால், இலாப்தன், வழக்குரை அறிஞர்,
தூண்டுத லாலே தோன்றுவீ ரத்தால்
மாலை வேளையில் மனத்துணி வுடனே
கரையில் இறங்கிய காந்தியைக் கண்டனர்;
துள்ளிக் குதித்தனர் வெள்ளையர் சினத்தால்;

மிதித்தனர் காலால், கொதித்தனர் குத்தினர்,
தள்ளினர், தடியால் எள்ளி அடித்தனர்.
அப்போது ஆங்கே அணைந்த பெண்மணி,
காவலர் தலைவரின் கற்பு மனைவியார்
காந்தியைக் காத்துச் செல்இடம் சேர்த்தனர்.

கத்தூரி பாய்இது கண்டு கலங்கினார்.
கடைசிநாள் கப்பலில் காந்தியைக் கண்ட
நிருபர் உண்மை நிலையினை விளக்கித்
தாள்களில் எழுதிய தன்மையைப் படித்து
வெட்கி வெள்ளையர் சினமும் விலக்கினர்.

குடியேற்ற நாட்டு மந்திரி சேம்பர்லின்
நேத்தால் அரசுக்கு நேர்ந்தமை குறித்துத்
தந்தி அடித்துத் தகாச்செயல் செய்த
பேர்களைப் பிடித்துத் தண்டித் திடவே
ஆணை அனுப்பினர் ஆக, அமைச்சர்

எசுக்கோம்பு எதிர்இலா மோகனர் தம்மை
அழைத்துஅடை யாளம் காட்டினால் அடிக்க
கொடியவர் தமக்குக் கொடுந்தண் டனைகள்
தருவதா உரைத்தார்; தக்கார் காந்தியார்
'என்னைத் தவறா எண்ணிய படியால்

அன்னார் அடித்தனர், அவர்மேல் பிழைஇலை.
தலைவர்ஆம் நீங்களே தவறுகள் உடையீர்.
உண்மையை ஆய்ந்துநீர் உரைத்திருந் தால்அவர்
குற்றம் செய்திரார். எனது கொள்கைதான்
இன்னாசெய் தார்க்கும் இனியன செய்தலே.

மறந்தேன் அவர்செய் மதிஇலாச் செயல்களை"
எனச்சொலி எழுதியும் தந்தனர் இனிதே. இதனால்
மோகனர் மதிப்பு முன்னைக் காட்டினும்
ஆயிரம் மடங்குதான் அதிகம் ஆயிட
மலைமேல் ஏற்றிய மங்கா விளக்கெனத்

திகழ்ந்தனர் தேசுடன்; புகழ்ந்தனர் யாவரும்.
நேத்தால் சட்ட சபையினில் நேர்மை
தவறி இந்திய வணிகர் தமக்கும்
குடியே றுவார்க்கும் கொடுமை தருவதுஆம்
சட்டம் இரண்டு சார்ந்தன; அவைகளை

இந்தியர் பேரவை எதிர்த்தும் பயன்இலை.
காந்தி இந்தியா சென்ற காலம்
பேரவை அமைச்சர் மியாகான் பெரும்பணம்
சேர்த்து வைத்தனர். செல்வம் அதனைக்
கண்ட டோகனர் "கட்டிடம் முதலிய
சொத்து வாங்கினால் சோர்வுஇல் லாமல்
வருவாய் கொண்டே வரும்கா லத்தில்
பேரவைச் செலவுஎலாம் பெரிதும் நடத்தலாம்"
எனவே எண்ணினர்; யாவரும் இணங்கிட
வாங்கிய பொருள்களின் வருவாய் மட்டுமே
எண்ணிய படியே இசைந்தது எனினும்
உட்கல கங்கள் ஓங்கின பொருளினால்.
"பொதுநிலை யங்களில் நிலைஆம் பொருள்கள்
நலம்போல் தோன்றினும் நசுங்கி அழியவும்
அவையே காரணம் ஆவன; ஆதலால்
வேண்டும் பொருள்களை வேண்டிய போதுஎலாம்
சேர்ப்பதே நிலையம் சிறப்புடன் ஓங்கிடக்
காரணம் ஆகும்" என அவர் கண்டனர்.
"நல்லெண் ணத்துடன் நமது முன்னோர்
பொதுநலம் கருதிய பொதுநிலை யங்கள்ஆம்
திருமடங் களுக்கும் திருக்கோ யிலுக்கும்
பெரும்பொருள் தந்து பேணி அவைகளை
ஆளத் தக்க பேரை அமைத்தனர்.
அங்ஙனம் தரும கருத்தர் ஆனவர்
தம்கடன் மறந்து தமக்கே உரிமைஆம்

பொருள்என எண்ணிப் பொதுநலம் மறந்து
தம்நலத் தினிலும் தகாதன செய்துஅவர்
இறுமாந் திருப்பதை இன்றுகாண் கின்றோம்.
பொதுநிலை யங்களின் பொருள்களும் நிலங்களும்
ஆங்குஆங் கேமேற் பார்த்தவர் ஆட்சியில்

போய்அவர் விற்றிடப் புதுப்புதுக் கைகளில்
சென்றுஅவர் செல்வமாய் இன்றுஇருப் பனவால்.
ஆதலின் பொதுநிலை யங்கள்ஆன் றூடம்
சேர்பொரு ளால்தான் சீர்பெறல் வேண்டும்."
எனக்குறித் துள்ளார் இனியார் காந்தியார்.

இருபத் தெட்டாம் வயதில் இரண்டாம்
முறையா வந்தார் மோகனர் நேத்தால்.
பிள்ளைகள் படிப்பைப் பெருக்க வழிஇலை.
படிப்புத் திட்டமும் பள்ளிகள் நிலையும்
நன்மை தரும்என நம்ப இடம்இலை.

ஆதலின் அவரே அவர்கள்ஆ சிரியராய்க்
கல்விகற் பித்தார்; காணார் நேரமும்.
அம்முறை பிள்ளைகள் வெறுத்தனர்; அவர்தம்
நண்பரும் அவர்முறை நலம்இலை என்றனர்.
ஆயினும் மோகனர் அசைந்தார் அல்லர்.

பிடிவா தம்அவர் பிடியாய் இருந்தது.
மற்றவர் மதிக்கும் படிப்புஅவர் மக்கள்
பெறாது போயினர்; பெருங்குறை அதுஎனக்
கருதார் காந்தியார், "எனது காளையர்
தம்மை வயதால் ஒத்த தனயரை

ஒப்பிட் டேயான் உணர்ந்த போதுஅவர்
எவ்வகை யினினும் யான்பெறு மக்களை
விஞ்சுவார் அல்லர் விரிந்த அறிவினால்;
அவரிடம் இவர்கள் கற்றற்கு ஆம்பொருள்
இருப்ப தாக யான்கண் டிலனால்.

அடிமைக் கோட்டையாய் அமைந்துஉள பள்ளிகள்;
பள்ளிப் படிப்புஇன்று அடிமைப் படிப்பே:
அடிமை எண்ணமே அமையுமா ணவர்பால்.
அடிமைப் படிப்பை அடையாது இன்றுஎன்
மக்கள்தன் மானமும் உரிமையில் மனமும்

நாகரி கத்தில் நகரா உறுதியும்
கண்டு மகிழ்வனால். கட்டில் அடங்கான்
ஹரிலால் எனது மூத்த மகன்தான்
ஒழுங்கு இலாது இருந்த காலம் உற்றவன்"
எனவே எழுதி இயம்பினர் உண்மை.

உடலின் வலிமையை உலைத்துக்கெடுத்து
நொய்மை செய்திடும் நோய்உடை யவர்களை
அணுகி அவர்தம் புண்களைக் கழுவிக்
கட்டிஆ தரிக்கவும் காந்தி துணிந்து
வைத்திய சாலை ஒன்றில் வலியப்

புகுந்து தொண்டு புரிந்து மகிழ்ந்தார்;
வைத்தியர் சொற்படி வகைவகை ஆன
மருந்துகள் தெரிந்து கலந்து மதியினால்
நலம்புரி பணியும் நாடிப் பழகினர்.
உயர்குடும் பத்தில் உற்ற ஆங்கிலச்

செல்வரும் மதிக்கச் சீர்மிகும் ஆடைகள்
அணிந்து திகழ்ந்ததம் ஆடம் பரம்ஆம்
வாழ்வை வெறுத்தார்; விரும்பி வண்ணான்
தொழிலும் செய்யத் தொடங்கினார், வெளுத்தார்.
ஆங்கிலக் குடிமகன் அவர்முடி வெட்ட

மாட்டேன் என்றான்; மானம் போனது,
மோகனர் தாம்தம் முடியை வெட்டினார்.
"தீண்டா தான்போல் முடியைத் திருத்திடும்
வெள்ளையன் என்னை வெறுத்துத் தள்ளினான்.
அவனைச் சொல்ல ஆம்குறை யாது?

இந்தியா வில்நாம் எத்தனை பேரைத்
தீண்டா தார்ஆத் தீமை செய்கிறோம்.
அந்தப் பாவமே அடைந்தது இங்ஙனம்!
நம்தாய் நாட்டில் நாம்அவர் யாவரும்
நம்உடன் பிறப்பே என்று நம்பி

அவருடன் அளவளா விடும்நாள் என்று
வருமோ அன்றே வாய்நமக்கு உண்டுஆம்
இங்குஇவர் தம்முடன் எதிர்வழக்கு ஆட."
எனஉணர்ந்து உருகி இருந்தக் கண்ணீர்
வடித்து வாடினார் வல்லவர் காந்தி.

வெளுப்பில் குறைகளை விளக்கி நகைத்தனர்
நீதிமன் றத்தில நெருங்கிய தோழர்;
நாளடை வினிலே நல்திறம் பெற்றுக்
கோகலே தமக்குக் கோவிந்த ரானடே
அன்புப் பரிசா அளித்தமேல் ஆடையைக்

காண்பவர் கண்கவர் கவின்பெற வெளுத்துக்
கோகலே புகழ்ச்சியும் கொண்டனர் காந்தி.
வண்ணான் நாவிதன் இவர்க்கு வழிவழி
அடிமை வாழ்வினை அகற்றித் தாமே
எவர்கை யிணையும் எதிர்பா ராமலே

வாழும் சீர்மிகு வாழ்வின் பெருமையை
உலகவர் அறியவும் உயர்ந்து வாழவும்
வழிகாட் டினரால்! வாழிய அவர்புகழ்!
செய்தொழில் எல்லாம் சீர்மிகச் சேர்ந்தன;
பொய்யும் புலையுமே போக்குவ மானம்.

போயரின் போர்தான் போந்தது கூறுவாம்:
தச்சுக் காரர்ஆ லந்து நாட்டினர்;
அவரே ஆப்பிரிக் காவில் போயர்
என்றுபேர் பெறுவர். இணையிலார் தாய்மொழிப்
பற்றினில்; தாய்மொழிப் பற்றிலார் பதர்களே;

தாய்நாட்டு அன்பும் தாய்மொழிக்கு அன்பும்
உயிரே ஆயினும் உறுதி உடையவர்;
எத்தனை எத்தனை இடையூறு அங்கிலர்
இயற்றிஅம் மொழியைச் சிதைக்க எதிர்த்தும்
புறச்சொல் புகாது போற்றினர் போயர்.

தச்சு மொழிதான் தால்எனும் பெயரால்
சிறிது மாறிச் சீருடன் வழங்கும்.
ஆப்பிரிக் காவில் ஆங்கிலர் வருமுன்
வந்து வாழ்ந்தவர் போயரே. அவர்பின்
ஆங்கிலர் வந்தனர்; ஆட்சி பற்றியே

இருவ ருள்ளும் எழுந்தது போர்தான்.
ஆயிரத்து ஒருநூறு ஆண்மைஇந் தியரைத்
தொண்டர் படையாத் தோற்று வித்து
மோகனர் துணைசெய முன்வந் தனரால்;
ஆங்கிலர் அடைந்த உதவிக்கு அளவுஇலை.

அதனால் அவர்கள் காந்தி யாரையும்
அவர்தம் படையின் அருந்துணை வரையும்
பரிசும் பதக்கமும் தந்துபா ராட்டினர்
வெற்றி வீரராய் விளங்கினர் ஆங்கிலர்.
போயர் தலைவர் போதா என்பவர்

உடன்பாடு பேசும் உள்ளத் தினராய்
இங்கி லாந்துக்கு ஏகிய போதுஅவர்
அரசர் பிரானையும் அமைச்சர் பலரையும்
கண்டு கலந்து பேசிய காலையில்
ஆங்கில மொழியில் அரும்படிப்பு இருந்தும்

தமதுதாய் மொழிஆம் தாலில்தான் பேசினர்
"யார்இதைப் பிழைஎன இயம்பிட முடியும்?
புறமொழி தன்னில் பொருந்தும் சொற்களை
ஆராய் வதில்ஆம் அல்லலை என்அவர்
கொண்டிடல் வேண்டும். குற்றம்இல் லாமல்

தமது கொள்கையைத் தாய்மொழி யினில்தான்
செப்பிடல் எளிது" எனக் குறித்தனர் சீரியர்.
தென்ஆப் பிரிக்கக் கூட்டுஆ ளுகைதான்
தோன்றிய காலம் தொட்டுப் போயர்
சட்ட சபையிலே தமதுதாய் மொழியில்தான்

பேசு கின்றனர்; பெரிதுஇவர் பற்று!
நாடு முழுவதும் நாடின்அங் கிலமும்
தானும் அரசு மொழிஆம்; தனித்தனி
அரசின் ஆணையும் சட்ட சபையின்
நிகழ்ச்சியும் இவ்இரு மொழிகளில் நிகழ்வன;

சமநிலை சார்வன இருமொழி களுமே
காரணம், தோற்றும் போயரின் கலங்காத்
தாய்மொழிப் பற்றே தலைமை தந்தது.
இந்தியர் சிறப்பாத் தமிழர், இந்நிலை
எண்ணி உயர்நிலை எய்துவர் ஆக.

இருமுறை இந்தியா பஞ்சம் எய்திடக்
காந்தி வேண்டுதல் ஏந்திஆப் பிரிக்க
இந்தியர் இரங்கி இரும்பொருள் ஈந்தனர்.
முனிவர் காந்தியார் முப்பத் திரண்டாம்
வயதினை அடைந்தார்; வந்துஆறு ஆண்டுகள்

கழிந்தன, இந்தியத் தாயைக் காண
ஆசை மூண்டது; அதனால் பெரியார்
பேரவை இடத்தில் பேசினார் ஆசையை.
வழிஅனுப் புதற்கு வாய்த்ததுஓர் கூட்டம்
கூடி அவர்க்குக் கொடுத்தது பரிசுகள்.

முன்முறை போலவே முதன்மை இந்தியர்
கண்ட சரமும் காசு மாலையும்
எண்அற் றனபிற ஈடுஇலா நகைகளும்
பொன்னும் பொருளும் பொழிந்தனர் பரிசாக்
காந்தியா ருக்கும் கத்தூரி பாய்க்கும்.

கண்டார் முனிவர் கொண்டார் சிந்தை ;
"இப்பொருள் முழுதும் எனக்கா? என்தன்
தொண்டினுக்கு அன்றோ தந்தனர் தொண்டர்!
ஆதலின் அடியேன் அளிப்பேன் இவையெலாம்
பொதுநலத் தினுக்கே" எனவே புண்ணியர்

மோகனர் தந்தனர், முன்னின் இவர்போல்
பற்றிலாப் பெரியரைப் பார்த்தல் எளிதோ?
மனைவியார் சிறிது மனம்கலங் கிடினும்
கணவர் ஆணைக் கட்டில் அடங்கித்
தமக்குஎனக் கிடைத்த பரிசுஎலாம் தந்தனர்.

அந்நிதி இன்றும் அறநிதி ஆகிப்
பொதுநலம் போற்றி வளர்ந்துஓங் கிடுமால்.
அழைத்த போதுஅவர் அன்புடன் திரும்ப
வாக்கினை அருளி வாழ்த்தி
இந்தியா எய்தக் கப்பல்ஏ றினரால்.

# மூன்றாம் முறை தென்னாப்பிரிக்காவில்

இந்தியா காந்தி எய்திய போது
கல்கத் தாவில் காங்கிரசு வாச்சா
தலைமையில் கூடிடத் தம்நேர் இல்லார்
சென்றுபல் தொண்டுகள் செய்தும்ஆப் பிரிக்க
இந்தியர் தொல்லையை எடுத்துக் கூறிக்

கண்டித் திடுதீர் மானம் கொண்டு
வந்துஅனை வரும்அதை ஏற்கச் செய்தும்
கல்கத் தாவில் ஒருமாத காலம்
தங்கிகோ கலேயுடன் தக்கார் பலரைக்
கண்டு பேசியும் காலம் கழித்தார்.

காளி கோவிலைக் காண ஒருநாள்
சென்றார்; ஆங்கே சீர்இலார் எண்இலா
ஆடுகள் தம்மை அம்மை முன்பு
வெட்டி வீழ்த்தலை வெறுப்புடன் கண்டார்.
சிந்தை கலங்கினார் செய்வதுஒன்று அறியார்.

புத்தரை நினைந்தார். “இத்தரை மீதினில்
ஆண்டவன் அருள்பெறும் ஆண்தகை தோன்றி
மக்கள் மனத்தை மயக்கும்இத் தீமையை
ஒழிக்கும் காலம் ஒழியுமே அல்லது
நம்போல் பவரால் நலம்இலா இதனை

அகற்றுவது என்பது ஆகாச் செயல்ஆம்
கடவுளே காப்பீர்” என்று காந்தியார்
கண்ணீர் வடித்துக் கசிந்தனர் உள்ளம்.
மூன்றாம் வகுப்பு வண்டியில் மோகனர்
சென்றுஅதில் செல்லும் ஏழைகள் நிலைமை

அறிந்துஅவை களைந்திட ஆம்வழி தேட
எண்ணினார்; கோகலே இவருடன் கூடி
வண்டி நிலையம் வந்துஅனுப் பினரால்.
ஏழைகள் பலரும் ஏறிஆ டுகள்போல்
ஒருவரை ஒருவர் நெருக்கி இருப்பதும்,

கண்ட படிஎலாம் கடும்பேச் சுக்களைப்
பேசிச் சண்டை பிடிப்பதும், பீடி
சுருட்டுப் பிடிப்பதும், சுணைஇல் லாமல்
அருகில் இருப்பவர் அனைவர் முகத்திலும்
புகையை விடுவதும், புந்தி கெட்டுப்

புகையிலை போட்டுப் புளிச்சென வண்டியில்
துப்பித் துப்பி அருவருப்பு ஆக்கும்
சிறுமையும் கண்டு "இச் சீர்இலா நிலைதான்
என்று திருந்துமோ? என்றுகற் றோரும்
செல்வரும் இவருடன் சிறக்க ஏறி

நல்அறி வினையே நாடி நவின்று
திருத்து வார்களோ? திருந்திய வாழ்க்கையர்
வாழ்மேல் நாட்டினில் வாய்க்கும் வசதிகள்
முதல்வகுப் பினிலும் மூன்றாம் வகுப்பிலும்
கிட்டத் தட்டச் சமம்எனக் கிளத்தலாம்.

ஆப்பிரிக் காவில் நீக்ரோ ஆட்களே
செல்லும் மூன்றாம் வகுப்பின் சீரினும்
இந்திய நாட்டில் இருக்கும் வசதிகள்
மிகக்குறைந் தனவாம். மிருகமா இந்தியர்!"
என்று குறித்தனர் இனியார் மோகனர்.

காசிமா நகரைக் கண்டார், கங்கையில்
முங்கிநீர் ஆடி முன்னைப் பழம்பொருள்
விசுவ நாதர் விரிமலர் அடியை
வணங்கச் சென்றார்; வழியோ குறுகி
வழுக்கல் ஆக வாய்ந்தசந்து ஒன்றின்
மூலம் ஈக்கள் கொசுக்கள் மொய்க்கச்
சென்றது பார்த்தார்; சீர்இலா தவர்கள்
கோவில் முன்பு கூடிக் கொண்டுதின்
பண்டமும் பூக்களும் பச்சைப் பாலர்
விளையாட் டுக்கு விரும்பும் பொருள்களும்
விற்றலும் கூச்சலும் வீணர் திரிதலும்
நோக்கி நெஞ்சம் நொந்தார் காந்தி;
"எங்கும் தூய்மை, எங்கும் அமைதி,
எங்கும் இறைவர் திருவருள் எண்ணி
எண்ணிக் கண்ணீர் இடைவிடாது ஒழுகிட
மெய்மறந்து இருக்கும் மேன்மை அன்பர்,
எங்கும் கண்ணுக்கு இனிய காட்சிகள்,
பகைவரும் வாழப் பரமனைக் கும்பிடும்
நல்லவர் எங்கும், எங்கும் நல்உரை,
இங்ஙனம் கோவில்கள் இருக்கநான் காணும்
நாளும் வருமோ? நம்பனே" என்றார்.
ஞான வாவி எங்கும் நாற்றம்!
இப்படி இருக்கும் இடத்தில் எப்படிக்
கடவுள் இருப்பார்? கடவுளே சொல்லும்!
"எல்லாம் கடந்தவர், எங்கும் இருப்பவர்"

எனப்பெரி யார்கள் இயம்பும் மெய்ம்மொழி
பொய்யாது ஆக்கநீர் பொருந்துவீர் போலும்
நாற்றமே மலிந்தஅந் நலம்இலா இடத்திலும்!
பூசா ரிக்குப் பொருள்கொடுத் திடற்கு
மனம்இலா தவராய் மதிப்பைக் குறைத்திடக்
கால்அணாக் கையில் காந்தி தந்தனர்.
சினம்கொண்டு அவன்அதைச் சீறி எறிந்து
'நரகக் குழிநீ நண்ணுவாய்'' என்றான்.
''மிக்க பொறுமைநீர் மேவிடல் தக்கது.
கால்அணா உமக்குக் காணாது என்றால்
அதுவும் கொடேன்நான்'' என்றிட, அறிவிலி
திரும்பவும் திட்டினன் விரும்புஇலா தவன்போல்
கால்அணாக் கொண்டு காந்தி நடந்தனர்.
உடனே அசடன் ஓடி வந்து 'நான்
வாங்காது இருந்தால் தீங்குநீ பெறுவாய்
தா''எனக் கேட்டான்; தந்தார் கால்அணா;
பெருமூச் சுடனே திரும்பினார் பெரியார்.
அறிவுக்கு ஒருபெரும் களஞ்சியம் ஆகவும்
அன்பே ஓர்உரு ஆகவும் அமைந்து
விளங்க வேண்டிய அந்தணர் விரிந்துசெல்
ஆசை அறவே பூசை ஆற்றி
அறிவுஇலா மக்கள் அறிவுபெற் றிடவும்
இரக்கம் இல்லார் இரங்குசிந் தையராய்ப்
பகைமை தீர்ந்து பாத்துஊண் உடையராய்
எவர்க்கும் துணைசெயும் எளியவாழ்க் கையராய்

வாழ்ந்திட வும்உயர் வாய்மை பேசி
உலகைநல் வழியில் உய்த்துவந் தவர்கள்
இன்றுதம் கடமை இதுஎன அறியும்
அறிவுஅத் தனையும் அகன்று போயிட
எண்ணும் எழுத்தும்ஆம் கண்இலா தவராய்க்

கடவுள் உருவைக் கல்எனக் கண்டு
பொம்மை காட்டிப் பொருள்பறிப் பவர்போல்
பணம்பணம் எனவே பிணம்போல் நின்று
கோவிலில் வந்து கும்பிட வருபவர்
தம்மிடம் கேட்பர்; தகாநிலை இதுதான்

என்று நீங்கி இடர்எலாம் தீர்ந்து
பண்டை உண்மைப் பண்பு சிறந்து
வையகம் எல்லாம் வாழ்வு பெற்றிட
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
என்ற மந்திரம் எம்மருங் கினிலும்

நின்று நிலவுமோ? அன்றுநாள் வருக!
அன்பே சிவமே அருள்க அந்நாளே!
"கடவுள் கருணைக் கடல்என் பதில்ஓர்
ஐயமும் இல்லை. ஐயம்உள் ளவர்கள்
காசி கன்னிக் குமரி போன்ற

பதிகளில் சென்று பார்ப்பார் ஆக.
ஆங்குஅவன் பெயரால் ஆகும் தீமைகள்
வெளிவே டங்கள் யாவையும் விருப்புடன்
பொறுத்துஅவன் இருக்கிறான்! பொய்இலை! காண்மின்!
அவர்அவர் செய்செயல் அவர்அவர்க்கு ஆயிடும்.

நன்மை செய்பவர் நன்மையே பெறுவர்.
தீமை புரிபவர் தீமையே அடைவது
திண்ணம் திண்ணம்; தப்பவே மாட்டார்.
ஈதுஅவன் வகுத்த இயற்கைச் சட்டம்.
இதனில் தப்புதல் எவர்க்கும்ஆகாது.

'ஆதலின் நாம்இதில் தலையிட வேண்டுவது
இல்லை' என்று அவன்வெளி ஏகினான் போலும்!"
எனவே காந்தியார் எழுதினார் மெய்ம்மையை.
"அன்பே கடவுள், அவர்தாம் ஒருவரே.
எம்மதத் தவரும் சம்மதித்து இங்கு

வாரும் வாரும் உண்மை தேரும்."
எனஓர் உலகச் சங்கம் இனிதில்
ஆக்கிய அன்னி பெசண்டுஎனும் அம்மை
தம்மைக் காணத் தனித்துச் சென்று
கண்டு மகிழ்ந்து காசியின் நீங்கி

அரச கோட்டை அடைந்துபா ரிஸ்ட்டர்
தொழில்செயத் தொடங்கினார் தோன்றல் மோகனர்.
சிலநாள் சென்றபின் பம்பாய் சென்று
வழக்குஉரை தொழிலராய் வாழ்ந்து வந்தார்.
இரண்டாம் மகன்அவன் மணிலால் என்பவன்

கொடிய காய்ச்சலால் கொதிக்க உடலம்
துடித்தான் மெலிந்தான். தோன்றாது ஒன்றும்
கலங்கினார் உள்ளம்; "கடவுளே துணை, உமைத்
தவிர யான்காண் துணைதான் இல்லையால்"
என்றுதாம் நம்பும் இயற்கை மருத்துவம்

புரியத் தொடங்கினார்; மருத்துவர் கூறினார்
"அன்பரே! உம்மகன் அடைந்தான் தளர்நிலை.
மருந்தைக் காட்டினும் மதியே சிறந்தது.
இந்த நிலைமையில் இவன்பிழைத் திடற்குக்
கோழி முட்டையும் குஞ்சுச் சாறும்

தந்தால் மட்டும் பிழைப்பான்; தயைசெயும்."
இம்மொழி கேட்ட இனியார் மொழிவார்
"என்மகன் சிறுவன்; இவனைப் பெரியவன்எனில்
அவன்கருத்து அறிந்து நான் அங்ஙனம் செய்வேன்.
எங்கள் சமயம் எந்த நிலையினும்

முட்டையும் குஞ்சும் முனிந்திடச் சொல்லும்.
ஆதலின் ஐயனே ஆகா அவைதாம்.
தண்ணீர் மருத்துவம் தான்நான் செய்வேன்.
எனக்குநீர் துணைசெய இசைந்துஅருள் செய்திடும்"
என்ன வேண்டினும் இணங்கினார் மருத்துவர்

ஒப்புஉயர்வு அற்ற உண்மை உணர்வினால்.
தப்பிப் பிழைத்தான் தனயன் மணிலால்.
"கடவுளை நம்பினோர் கைவிடப் படுவரோ?
காத்தான் ஐயன், கண்டேன் அவன்அருள்"
என்றார் என்றும் உண்மையில் நின்றார்.

வழக்குஉரை தொழிலின் வயப்படல் ஆனார்;
கட்சிக் காரரைக் கண்டுஅவர் முகத்தின்முன்
இச்சகம் பேசுதல் இத்தொழில் புரிபவர்
கைக்கொள வேண்டும் கடமை இதனை
வெறுத்தார் எனினும் வேறு வழிஇலை

இந்த நிலையில் வந்து சேர்ந்தது
தந்தி ஒன்று சிந்தைக்கு இசைந்தது.
"சேம்பர்லின் இங்குச் சேர்கிறார் விரைவில்;
ஆதலின் அவரைக் காண உடனே
வந்துசேர்ந் திடும்" என வந்தது தந்தியும்;

ஆப்பிரிக் காவில் அன்பர் தமக்குத்
தாம்தரு வாக்கினால் ஆம்கடன் உணர்ந்தார்;
பம்பாய் தன்னில் தம்மனை யாரையும்
பச்சைப் பசலையர் தம்மையும் வைத்துத்
தன்னந் தனியே தாம்புறப் பட்டார்

முனிவர் முன்னவன் அருள்நினை மோகனர்.
"நிலைஆம் வாழ்வை நினைந்துயான் நின்றேன்.
நான்பெறு நாடும் பொருள்கள் யாவும்
அழிந்திடு கின்றதும் அவைகள் தந்திடும்
துன்பமோ இன்பமோ தோன்றி மறைவதும்

கண்டும் யான்மெய் காணேன் ஆனேன்.
தரித்திரம் 'தரித்துஇரேன்' என்று தேற்றிடும்;
செல்வமோ 'செல்வன், திமிர்விடு' என்றிடும்.
நிலைத்த பொருளா நிற்பவன் இறைவனே.
அவன்அருள் காண அலைந்துஆங்கு ஆங்கே

கண்டு தெளியும் காதலர் தாமே
அழியா இன்பம் அடையும் அறிஞர்.
அவரே வாழ்வின் உண்மை அறிந்தவர்"
என்றுஎண்ணி எண்ணி இன்பம் ஆர்ந்து
சென்று சேர்ந்தார் தருபன் துறைமுகம்.

அதற்கு முன்னரே ஆங்குவந் திருந்தார்
சேம்பர் லின்எனும் சீர்மான் ஆங்கே
மூன்றரைக் கோடிபொன் முயன்றுநன் கொடையாத்
திரட்டிச் சென்றிட; அதனால் அவர்தாம்
அங்கிலர் போயர் அனைவர் உள்ளமும்

கவர்மொழி பேசுதல் கட்டாயம் ஆயது.
காந்தியும் தோழரும் கண்டுதம குறையைச்
சேம்பர் லின்இடம் செப்பலும் கேட்டு
"முழுஉரி மையும்பெறும் முதல்குடி ஏற்ற
நாடுகள் தம்நலம் நாடிச் செய்திடும்

செயல்களைத் தாய்நாடு ஒன்றும் செய்திட
உரிமை இல்லை; உணர்வீர் நீவிர்.
உமக்குத் தீமை வருவதும் உணர்வோம்;
இயன்றன சொல்வோம்; என்செய வல்லோம்?
வெள்ளையர் நடுவில் வாழ்ந்திட விரும்பினால்

அவர்க்குநல் லவரா ஆகிடல் வேண்டும்"
என்ன இயம்பினர். இதனால் இந்தியர்
உள்ளம் உடைந்தது; உண்மை உணரினும்
இனம்இனத் தோடுதான் என்றும் இணங்கிடும்?
உடல்நிறம் கண்டே ஒருவரை ஒருவர்

வெறுக்கவோ விரும்பவோ செய்யும் வீண்பழி
என்றுதான் உலகின் நீங்குமோ? பிறப்பினால்
ஒக்கும் எல்லா உயிரும் என்னும்
உண்மை உணர்ச்சியில் உலகம் என்றுதான்
நிற்குமோ? அன்றே நிலைத்த இன்பம்ஆம்.

சேம்பர்லின் நேக்தால் தாண்டிச் சென்று
சேர்ந்தார் திரான்சுவால்; செம்மை இழந்ததால்
போயர் போர்வாய் பொசுங்கிக் கிடந்த
அந்த நாட்டைக் காந்தி அடைந்திடல்
எப்படி முடியும்? எங்கும் தடைகள்!

கைக்கூலி நூறு பவுன்வரை கையில்
வந்தால் மட்டுமே வழங்குவர் சீட்டு.
சீட்டு வழங்கிய வெள்ளையர் சீர்இலார்.
கொடுமை! இதனினும் கொள்ளைதான் உண்டோ!
இந்தியர் இங்ஙனம் எய்தினர் துன்பம்.

வாழ்ந்தவர் திரான்சுவால் முன்எனும் வழியால்
அவர்தாம் சீட்டுமே அங்கில நண்பர்
ஒருவரால் பெற்றார், ஓடிச் சென்றார்.
ஆனால் ஆங்கே அவர்சேம்பர் லின்னைக்
காணா ஆறு கடிந்தனர் வெள்ளையர்

அதிகாரி ஒருவர் அவரைத் தயாப்பு
சேத்துடன் அழைத்துச் சீறி விழுந்தார்;
நிற்க வைத்துப் பேசினார் "நீர்இனி
இந்த நாட்டில் இருக்கலா காது
தவறாய்த் தந்தது நீர்பெறு சீட்டு.

போம்" எனஏவினார். புந்தியில் பதிந்தது
இந்தியர் படும்துயர் "எப்படி யாவது
துன்பம் துடைக்கத் தொடர்ந்து முயல்வன்.
இந்நாடு அகலேன்" எனஇவர் துணிந்து
வழக்குஉரை தொழிலின் வாழ்க்கைமேற் கொண்டார்.

வழக்குஉரை ஆளர் ஆவதை வலிந்து
தடுக்கமுன் வெள்ளையர் தாம்முனைந் ததுபோல்
இப்போது இவரை எவரும் எதிர்த்திலர்.
நாட்டுள் வந்திட நாடும்இந் தியர்க்குச்
சீட்டுத் தருவதில் சிறுமைஆம் இலஞ்சம்

வாங்கிய பேய்களைப் பிடிக்க வழிதான்
ஆய்ந்துஆய்ந்து அதனிலும் வெற்றி அடைந்தனர்.
இரண்டுவெள் ளையர்கள் இழைத்தகுற் றங்களை
வெளிப்படுத் திடற்கு வேண்டும் சான்றுகள்
கண்டு காவலர் தலைவரைப் பார்த்துச்

சொல்லினர் ஆக நல்லவர் தலைவர்
வெள்ளையர் ஆயினும் உண்மைகாண் விரும்பினர்
பிடிஆ ணைதனால் பிடித்துக் கொணர்ந்து
நீதி மன்றினில் நிறுத்தினர்; எனினும்
நடுவர் குற்றம் இலைஎன நவின்றனர்;

பட்டப் பகலில் படுகொள்ளை கொண்ட
வெள்ளையர் இருவரும் விடுதலை பெற்றனர்.
"கூரிய அறிவினால் குற்றமும் மறைத்தல்
எளிதுஎனக் கண்டேன்; என்னே அறிவு!
நல்வழி காட்ட நாம்பெறும் அறிவு

குற்றம் மறைத்துக் கொடியவர் தம்மையும்
ஆதரித் திடற்கும் ஆகும் என்னில்
அறிவினால் ஆம்பயன் ஆற்றவும் அழகிதே!
இதனால் தானோ ஈடுஇலாப் பெரியோர்
கல்லா தவரே கருத்தில் நல்லவர்

என்று கூறி ஏங்கினர் போலும்!"
எனவே அறிவையும் எய்துதிப் பயனையும்
வெறுத்துக் கூறினர் வேந்தர் காந்தியார். ஆனால்,
அரசினர் வெள்ளையர் குற்றம் அறிந்து
வேலையில் இருந்து விலக்கி விட்டனர்.

அப்போது இருவரும் அடைந்தனர் காந்தியை
அடைக்கலம் ஆக; அவரும் ஆய்ந்தனர்,
"இனிநீர் குற்றம் இயற்றாது இருந்திடும்.
நீர்பெறு வாழ்வில் நில்லேன் தடையாய்;
பாவம் தன்னையே பகைத்துநான் எதிர்ப்பேன்,

பாவியைக் கண்டு பண்புடன் இரங்குவேன்.
அறிவுஇல் லாமல் அவன்குறை செய்தான்;
பிறருக்கு எல்லாம் பெருங்கேடு செய்பவன்
விரைவில் அழிவான் வெந்துமண் ஆவான்
என்ற உண்மையை அறிவனேல் எவன்தான்

பாவம் செய்வான்?" என்னும், பாவிகள்
வெள்ளையர் இருவரும் விளங்கிய நல்வழி
பற்றிச் சென்று பாவம் தீர்ந்து
வேலையும் பெற்றனர்; விண்டனர் வெள்ளையர்
அனைவரும் காந்திமேல் அடைந்த வெறுப்பினை

பகையையும் நட்பாக் கொள்ளும் பண்பினை
உடைய ஒருவனை உலகுஎலாம் விரும்பும்;
அவனே பெரியவன், அவனே தெய்வம்,
அவனே உலகை ஆதரித்து ஆள்பவன்,
அவன்திரு அடியிலே அனைவரும் தங்குவர்.

வெள்ளைய ரிலும்சிலர் வெறுப்பினில் நீங்கி
உண்மைக் காக உயிரையும் தருகுவர்.
வெள்ளை அம்மையார் திக்குளனும் பெயரார்
சிலநாள் அவரிடம் தொண்டுசெய்து இருந்தார்.
சில்சின் அம்மையார் சிறந்த தொண்டர்

இரவும் பகலும் ஏவிய எல்லாம்
செய்த தோடு சீர்மதி மந்திரி
போல மோகனர் புகழ்பெறு பாவை
தம்நல வெள்ளையர் தகாச்செயல் வெறுத்துத்
துன்புஉறும் இந்தியர் துணையா விளங்கினார்.

இந்தியர் கருத்து"எனப் பெயரினை இட்டுக்
காந்தியார் ஒவ்வொரு கிழமையும் தாள்தான்
வெளியிட் டனர்;அது வெள்ளையர் கொடுமையை
விரித்தது; இந்தியர் விடுதலை பெறவே
ஒவ்வொரு கிழமையும் உணர்ச்சி ததும்பும்

கட்டுரை ஒன்று காந்தி எழுதினார்.
அவர்மா ளிகையில் அணுகி வாழ்ந்தனர்
இந்தியர் அங்கிலர் எல்லா வகுப்பரும்.
அவர்களை எல்லாம் அன்புஉற வினர்போல்
வேண்டுவ தந்தும் விருப்புடன் செய்தும்

ஆதரித் தனர்இவர்; அதில்சம் மனைவியார்
ஏதும் எதிர்த்தால் இவர்சினம் கொள்வார்.
இரண்டாம் முறைஇவர் இந்த நாட்டில்
தருபன் நகரிலே தங்கிய போதுஒரு
நிகழ்ச்சி இவர்தம் நினைவு;அக லாதது.

பலப்பல அறைகளில் படுத்திருந் தவர்கள்
அங்கணம் இலாமையால் அழுக்கு நீரைப்
பாண்டம் ஒன்றில் கழிப்பதும் பகல்வர
அதனைத் தாமே அகற்றி விடுவதும்
வழக்கம். ஆனால் புதிதாய் வந்தவர்

அழுக்கு நீரை அகற்றுதல் இவர்க்கும்
இவர்மனை யார்க்கும் கடமை ஆயது.
காந்தியார் தம்மனை கத்தூரி பாயும்
மனமகிழ் வுடன்இப் பணியைச் செய்திட
விரும்பினர். ஒருநாள் வேண்டா வெறுப்புடன்

பஞ்சமக் கிருந்தவர் படுத்த அறையின்
பாண்டம் தூக்கிப் பலபல எனநீர்
கண்ணில் இருந்து கசிந்து வடிந்திட
வந்த காட்சியைக் கண்டார்; வந்தது
கடுஞ்சினம்; "கத்தூரி, இந்நிலை நன்றா?

என்மா ளிகையில் இதைநான் பொறுக்கேன்"
என்று காந்தி இயம்ப, "உங்கள்
வீடுஉங் களுக்கே; வேண்டாம் எனக்கு"என
அம்மையார் கதற, அவர்கைப் பற்றி
இழுத்து வெளியே இடித்துத் தள்ளிட

மோகனர் முயன்றார் மூடுகிய சினத்தால்.
"வெட்சம், வெட்கம். வெளியார் கண்டால்
சிரியா திருப்பரோ? சீரிய அறிவுபோய்
இங்ஙனம் தாங்கள் இழுப்பது நல்லதா?
எனைவெளித் தள்ளினால் எங்குநான் போவேன்?

ஆண்டவன் மீது ஆணை இனிநான்
தாங்கள் தரும்அடி மிதிஎலாம் தாங்கித்
தகாச்செயல் ஆயினும் செய்வேன்; தடைஇலை"
என்றுகத் தூரிபாய் இயம்பி அழுதனர்.
மற்றவர் தம்மை மதித்துஅவர் மனம்போல்

நடந்திட முயலும் நன்மையார் மோகனர்
மனைவியை மட்டும் அடிமையா மதித்ததை
ஓர்ந்து வெட்கி ஒவ்வாச் செயல்களை
அன்று முதலா அகன்றவர் ஆனார்.
இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு இருக்கும்

கணவனும் மனைவியும் கருதுவ எல்லாம்
ஒன்றுபட்டு இருத்தல் ஒல்லுமோ? ஓதுமின். ஆதலின்
இல்லறம் என்றும் இன்பமா இருத்தல்
வேண்டும் என்னின் விளம்புதும் கேண்மின்:
ஒருவருக்கு ஒருவர் ஒவ்வாச் செய்தியைப்

பேசுவது என்றும் பிழை ஆம்; அவர்கள்
பிடிவா தம்தானும் பேய்க்குஇடம் கொடாமல்
விரிந்த நோக்குடன் விட்டுக் கொடுத்து
நலத்தையே கருத்தினில் நாடி அன்புடன்
பேணி வாழ்தலே பெருமை தருவது ஆம்.

கத்தூரி பாயோ காந்தியார் செயல்கள்
வெறுப்பைத் தருவன ஆக விளங்கினும்
அவர்செல் அடிச்சுவடு அணுகி நடந்து
மேன்மை அடைந்தனர்; மெய்ம்மை இதனால்
இவர்தம் வாழ்க்கை இன்பமே ஆயது.

மோகனர் வாழ்ந்த யோகானிசு பருக்கினில்
இந்தியர் இருந்த இடம் "கூலிச் சேரி"
என்று பெயர்பெறும். இதுபோல் தான்தென்
ஆப்பிரிக் காவில் அனைத்துள ஊரிலும்
கூலிச் சேரிப் பெயரினைக் கொண்டன

இந்தியர் வாழிடம்; என்னே வெள்ளையர்
சிறுமதி! இந்தியர் சீர்இலா மதியினால்
இந்தி யாவினில் எம்மருங் கினிலும்
தம்உடன் பிறந்த பலரைத் தாழ்த்தித்
தீண்டா தார்எனத் தீமைசெய்து அவரை

ஒதுக்கி வைத்துஉள ஒவ்வாச் செயல்தான்
தீமையா வந்து தீண்டியது இங்கே!
யார்இதை இல்லை எனமறுத் திடுவர்?
கூலிக்கு வேலை செய்பவர் கூலி
எனப்பெயர் பெறுவர்; இங்கே இச்சொல்

தீண்டா தார்எனும் தீய பொருளில்
வழங்கி வருவது. வாழ்ந்தனர் இந்தியர்
எல்லா விதத்திலும் இகழ்ச்சிவாய்ப் பட்டே,
தங்கள்தாய் நாட்டில் தாய்பிழைப்பு அறியா
மக்களே மயங்கி வேற்றுநாடு ஏகுவர்;

ஆதலின் அவர்தாம் அனைவரும் கல்லாப்
புல்அறி வாளராய்ப் போக்குஇலாது இங்கே
வந்தவர்; வாழும் நலவழி அறியார்.
எங்கும் குப்பைகள் எங்கும் கொசுக்கள்
எங்கும் தொத்துநோய் இடைஇடை வந்து

துன்பம் தந்திடும். இன்பமேது இவர்க்கு?
கருமா மாரி ஒருகால் கடிந்திட
வந்தது ஆக வாடினர் சேரியர்.
காந்தியார் கண்டு காக்க ஓடினார்;
நகர்ஆள் கழகம் நலம்செயும் கடமை
உடையது எனினும் உணருமோ எதிரிகள்
ஆட்சியில் அகப்பட் டிருந்தகா ரணத்தினால்.
கருமா மாரி கண்டதும் கலங்கி
வெள்ளையர் சேரியில் வேண்டும் பணத்தை
வாரி இறைத்துக் காப்பு வழங்கினர்.
இந்தியர் தம்மை இடம்பெயர்த்து இருத்திக்
கூவிச் சேரியைக் கொளுத்தி விட்டனர்.
இந்தியர் தாம்படும் எண்ணிலா இன்னலை
விலக்க வந்த வீரர் காந்தியைக்
கடவுளின் தூதராக் கருதி வாழ்த்தினர்.
"இந்தியர் கருத்து" எனும் இவர்தம் தாளினைக்
காக்கக் கைப்பொருள் மிகுதியும் அளித்தனர்;
அதனை நடத்திய அறிஞர் வெசுட்டுடன்
"பலன்தரும் தொழில்"எனக் காந்தி பகர்ந்தார்
மதனசித்து என்பவர் மதிக்கும் திறம்இலார்
கொடுத்ததிட் டத்தைக் குறித்துஆய்ந் திடாமல்
நம்பின படியால்; நாடினார் வெசுட்டு;
நட்டம் வருமென உணர்ந்து நவின்றார்.
உண்மையை அறிந்தநம் காந்தி வருந்தி,
"உண்மை உணர்ந்தேன், உள்ஒளி காட்ட

ஆய்ந்து ஆய்ந்து அறிவினால் தெளிந்ததை அல்லது
பொதுநலம் போற்றும் தொண்டர் புகலுதல்
சரிஇலை," எனவே சார்பு கூறினார்
இரசிக்கின் எழுதிய இணைஇலா நூல்தான்
"உலக மக்கள் உறுநலம்" என்பதைப்

படித்தார் காந்தி; பண்புடன் அடைந்தார்;
அந்நூல் தன்னில் அடிப்படைக் கொள்கை
மூன்று கண்டார் மோகனார்; அவைதாம்
உலக மக்கள் உறுநலம் தன்னில்
தனிஒரு வன்நலம் தான்அடங் கிடுமால்

என்பதும், மந்திரி இனிதுசெய் தொழிலும்
நாவிதன் தொழிலும் நலத்தால் ஒன்றே
என்பதும், உடலால் எத்தொழி லேனும்
செய்து வாழ்வதே சிறந்தவாழ்வு என்பதும்
எண்ணி எண்ணி வள்ளுவர் ஆண்டாம்

ஆயிரத் தின்மேல் தொளாயிரம் அதன்மேல்
முப்பத் தைந்தில் முனிவர் மோகனர்
தருபன் நகருக்கு அருகே தடக்குப்
போனிக்சு என்னும் ஊரில் புலம்தான்
ஒருநூறு ஏக்கர் வாங்கி உண்மை

அன்ப ருடனே அதிற்குடி யேறினார்,
தங்கும் இடங்கள் தக்கவா அமைத்தே.
"இந்தியர் கருத்தும்" இசைந்தஅச் சகமும்
இவ்வூர் வந்தன; இன்றும் திகழ்வன,
இந்தியர் நலனை என்றும்ஆ தரித்தே.

ஓராண் டினிலே திரும்பிட உன்னிய
காந்தியார் கருத்து முடியா தாயது;
அதனால் இவர்தம் அன்பு மனைவி
மக்களை இங்கே அழைத்து மகிழ்ந்தார்.
யொகானிசு பருக்கினில் இவர்தம் வாழ்வு
உலகமக் களுக்குஓர் எடுத்துக் காட்டா
உதவுவது ஆயது; உரைத்தும் கேண்மோ:
வீட்டு வேலைக்கு ஒருபணி யாளன்
இருந்தான்; அவன்பணி யாளன் என்ன
நடத்தப் பட்ட நாளே இல்லை அவனைக்
குடும்பத்து ஒருவன் ஆகவே கொண்டனர்.
கடைக்குப் போதல் கைஇயந் திரத்தால்
மாவை அரைத்தல் மனமகிழ் வுடனே
குப்பை கூட்டுதல் எப்பொழுதும் இவை
போன்ற பணிஎலாம் விருப்புடன் புரிதல்
இவரும் மக்களும் மனைவியும் இயற்றினர்.
கக்கூசு அதனைக் கழுவி விடுதலும்
இவர்களே செய்தனர் என்றால் இவர்தம்
பெருமிதம் என்னே! பேசும் தரத்ததோ!
தோட்டி வேலையும் தொண்டைமான் ஆட்சியும்
யாவர்க் கும்பொது என்னும் உண்மை
நிலைபெறல் வேண்டும். நிலைபெற் றால்தான்
பெரியவன் சிறியவன் பெரும்பணக் காரன்
ஏழை தோட்டி தொண்டைமான் என்னும்
மேடும் பள்ளமும் மேவிஒன் றாகும்

அந்நா ளில்தான் அனைத்துஉல கமும்மெய்
இன்பம் எய்தி இணைஇலா வாழ்வுஉறும்.
இந்தமெய் நிலையினை எண்ணி அறிந்த
காந்தி தாமே நடந்து காட்டினார்.
மக்களில் மூத்தவன் மணிலால் மட்டும்

இந்தியா வினிலே இருந்தனன்; போக
மற்ற மூவரும் மதிநலம் பெற்றிடப்
பள்ளிக்கு அனுப்பிப் படிக்கவைத் தார்அலர்;
வீட்டினில் வைத்து வேறுஓர் ஆ சிரியரால்
கல்வி கற்பித் திடவும் செயஇலை;

தம்முடன் மக்களைத் தனியே அழைத்துச்
செல்லும் போதுஎலாம் சிறந்தன சொல்லிக்
கல்விப் பயனைக் காட்டி வந்தனர்.
ஒழுக்க முறையில் ஒருசிறி தும்அவர்
தவறார் ஆகிடத் தாம்வழி காட்டினார்.

அதனால் அவர்கள் ஆன்ற அறிவும்
சீரிய ஒழுக்கமும் சிறந்து விளங்கினர்.
இலக்கியக் கல்வி இல்லைஎன் றால்என்?
தொண்டு தொண்டுஎனத் தோன்றிய நாள்எலாம்
பொதுநலத் தினுக்கே பொழுதுஎலாம் போக்கிய

காரணத் தாலே மக்கள் கல்வியைப்
பள்ளிக்கு அனுப்பிப் பயிற்றிடார் ஆயினார்.
படிப்பின் நலம்நல் பண்பு படிவதே.
பண்பு படியாது படித்த படிப்புஎலாம்
வீணாம்; அதனால் ஒழுக்கம் விளங்கிட

மக்களைக் காத்து மாண்பினர் ஆக்கினர்.
இந்தி யாவிலே எங்கும் ஆங்கிலப
சின்னஞ் சிறுவர் தமக்கும் சொல்லுவர்;
பச்சிளம் பாலர் தம்மிடம் பெற்றவர்
"கண்" என் பதனை "ஐ" எனக் காட்டுவர்,

அடிமை வாழ்வினில் ஆழ்ந்தவர் ஆதலால்.
ஆங்கிலர் ஆட்சியில் ஆங்கிலம் கற்றவர்
தமக்கே வேலை தான்கிடைத் திடுமால்;
பிறர்உயர் வேலை பெறுவது ஆகாது.
"பெற்றோர் இதனால் பிள்ளைகள் தம்மைப்

பால்அறா வாயர்ஆம் பருவத் திருந்தே
அயல்மொழி ஆகிய ஆங்கிலத் தினிலே
எண்ணவும் பேசவும் எழுதவும் சொல்லுவர்.
கொடுமை கொடுமை வயிற்றுக் கொடுமையே
தாய்மொழி யினிலே முந்தையோர் தந்த

கலைச்செல் வங்களைக் கண்டு மகிழவும்
பேறு பெறாதவர் ஆயிடச் செய்தது;
தாய்நாடு என்னும் தன்மை உணர்ந்து
பற்றுக் கொண்டு பண்புடன் உரிய
சேவை செய்யவும் சீர்அறி யார்கள்!

இந்த உண்மை அறிந்த யான்என்
மக்க ளிடத்தில் மறந்தும் பேசேன்
ஆங்கிலம்; பேசுவேன் அருமைக் குசராதி;
தாய்மொழிப் பற்றே தாய்நாட்டு அன்பை
வளர்க்கும் தாயார்; வாய்மைஈது ஆகும்.

பொன்போல் உயர்ந்த நண்பர் போலக்கு
என்னிடம் இனிதா எடுத்து மொழிந்தார்
ஆங்கிலம் கற்றுக் கொடுக்க; அவர்தாம்
செப்பிய காரணம் 'சீர்உடை ஆங்கிலம்
உலக முழுவதும் உரைபெறு மொழிஆம்,

அதனால் அதனைக் கற்றுக் கொண்டவர்
வாழ்க்கையில் உயர்ந்த வகைஎலாம் உயர்வர்''
என்பதே. இதுசொலி இருபது யாண்டுகள்
கழிந்தன வேனும்யான் கருதிய கொள்கையை
மாற்ற ஏது மற்றுஎதும் காணேன்.

தாய்மொழிக் கல்வியே தலைசிறந் ததுவால்.
என்னுடை மக்கள் இதனால் தமக்கும்
தாய்நாட் டினுக்கும் தருவர் பெரும்பயன்''
எனவரைந் தருளினர் ஏந்தல் மோகனர்,
எவரும் நல்அறிவு எய்திட இனிதே

அரசுசெய் அமைச்சரும் அறிஞரும் இதனைச்
சிந்தையில் பதித்துச் சிறுவர் தம்மைத்
தம்தாய் மொழியில் தகுந்த புலமை
பெறும்படி செய்த பின்னரே பிறமொழி
கற்கச் செய்தல் கடன்ஆக் கொள்ளலே

நாடு முன்னேற நல்ல வழியாம்.
ஆங்கில அறிஞர் பலருடன் நாளும்
கூடிப் பழகிடும் வாய்ப்பைக் கொண்டதால்
காந்தி அடிகள் காளையர் யாவரும்
ஆங்கிலம் தன்னிலும் வல்லவர் ஆயினர்.

சூலூ எனும்ஒரு சாதியர் சொந்தர்
அந்நேத் தாலுக்கு; அவர்களை வெள்ளையர்
அடக்கி வரிகளை வாங்கி ஆண்டனர்.
வரிதரா திருப்பின் அடித்து வாட்டுவர்.
புதிய ஒருவரி போட்டதைச் சூலூத்

தலைவன் ஒருவன் தரமறுத் திடலும்
தண்ட வந்த தண்டலை ஒருவன்
ஈட்டியால் குத்தினன்; எழுந்தனர் வெள்ளையர்
" கலகம், சூலூக் கலகம் " என்றே
அதற்குப் பெயரினை அமைத்துச் சூலூ

இனமே இல்லாது ஆக்கி அழித்துச்
சுட்டுக் கொட்டை பாத்திடச் சூழ்ந்து
சமயம் அதுதனைச் சார்பாக் கொண்டனர்.
கண்ட கண்ட இடமெலாம் அவர்களைச்
சுட்டனர் குத்தினர் வெட்டினர் கொன்றனர்.

என்னதான் செய்வர் எளியஅச் சாதியர்?
"கலக மாஇது? அலஇது வேட்டை!
மனித வேட்டை! தீய மதியினர்,
வெள்ளையர் ஆடிய வேட்டை இதுதான்!".
என்ன எழுதினர் இனியார் காந்தி.

சின்னஞ் சிறுபடை சேவைப் படையினை
மோகனர் கூட்டி முந்திச் சென்று
நேத்தா லினிலே தீத்திறம் அதனால்
கலங்கித் தவித்தவர் காலிற் புண்ணையும்
கையிற் புண்ணையும் கழுவிக் கட்டி

அன்புஉரை கூறி ஆதரித் தனரால்.
வெள்ளையர் தம்நல நிறவெறி அதனால்
விளைத்த கொடுமையைத் தடுத்திட வேறு
வழிஅறி யாராய் எளியரூ ஊக்கலை
இயன்றனை இயற்றிக் காத்த காந்தியார்

மணந்த மனைவி யுடனே வாழ்ந்தும்
மணவா வாழ்க்கை மாண்பினைக் கொண்டார்.
உலகுக்கு உழைக்கும் நலம்மிகு தொண்டர்
உடல்நலம் கெடாமல் திடமுடன் ஓங்கிட
மணவா வாழ்க்கையே மதிநலம் அருளிடும்.

ஆயிரத் துத்தொள் ளாயிரத் தின்மேல்
முப்பத் தொன்றில் முயன்றஇப் பண்பு
மெய்ம்மை ஆகக் கைகூ டியது
முப்பத் தேழிலாம்; இப்படி நின்றவர்
முன்புஒரு நீல கண்டனார் என்பவர்;

இதன்பின் பலஆண்டு ஏகிய பின்னர்
மோகனர் குறித்த மொழிபின் வருவது
உண்மைத் தொண்டர் உளம்கொள ஏற்றது:
"எத்தனை சோதனை, எத்தனை தடைகள்!
உடல்அள வினிலே திடமுடன் வெற்றி

கண்டேன் எனினும் விண்டேன் அல்லேன்
மனக்குரங் கதனால் எனக்குஉறு தொல்லையை.
ஒப்புஉயர்வு அற்ற செப்பம் அடைந்திட
வழிபழி நாணி வஞ்ச மனத்தைத்
தன்மொழி கேட்கத் தான்செய் வதுதான்.

இந்நிலை எய்திட இடைவிடாது உழைத்தும்
எப்படி யோசில இழிந்தஎண் ணங்கள்
என்உள் எழுவன தன்அறி யாமல்!
அவைஉளே புகுந்து நவைசெயா வண்ணம்
தடைசெய வல்ல அடைதாழ் உண்டு.

கண்டு கொண்டு மண்டு தீவினை
முனிந்தவர் தாமே முனிவர் ஆவார்.
அவர்தாம் கொண்ட தவநிலை யாவையும்
எளியேம் வாழ்ந்திட அளியுடன் மொழிந்தனர்.
எங்கும் இருப்பவன் பொங்கும் அருளினை

நாடி அவன்அடி பாடி அடைக்கலம்
புகுதலே தவநிலை தருவழி அதுவே"
இன்பத் துறையில் எளியரா யிருந்தும்
ஒருநொடி யினில்மனை தருமொழி கேட்டே
கடவுள் எண்ணமே கடக்கும் புணையாக்

கொண்டு நீல கண்டர் மனையுடன்
உடல்படா ஆறுதாம் அடல்வறு எனவே
வாழ்ந்துஉயர்வு அடைந்தார்; தாழ்ந்தன புன்மைகள்.
எண்ணிலாத் துன்பம் நண்ணிட நண்ணிட
எண்ணிய எய்தினர் திண்ணியர் மோகனர்.

தேவ தாசு பிறந்த திருவினால்
காந்தி அடைந்தார் கருதிய குறிக்கோள். என்னை?
மனைவினை வாழ்க்கை மக்களைப் பெற்று
நல்அறம் நாடிச் செய்யவே ஏற்பது.
உண்மை இதனை உணர்ந்த உயர்ந்தோர்

ஆணும் பெண்ணும் அனைவரும் பேணிக்
கட்டுக்கு அடங்கிக் கட்டுஉடல் விடாது
பிள்ளைப் பேறு பெற்றதும் உடல்நசை
விடுத்து நண்பரா அடுத்து வாழ்தலே
நல்லது; நமது நல்லார் காந்தியும்

கடைசி மகனும் காளையைப் பெற்றதும்
"இனிநான் இனிய மக்களைப் பெறும்நிலை
கைவிடல் வேண்டும். மெய்ம்மை மேவினேன்.
பிள்ளைப் பேறுபோல் தொல்லையைத் தருவது
பெண்கள் தமக்கு எண்ணில் வேறுஇலை.

இனிஎன் மனைவிக்கு இத்துன் பம்வர
இடம்தரேன். ஆணை, இறைவ கா"என
முப்பத் தேழாம் வயதினில் முனிந்தார்
அறிவிலார் அவாவும் உடல்வெறி இன்பம்;
அதனால் உண்மை முனிவராய் உயர்ந்தார்.

ஐம்பது அறுபது வயதினர் கூட
வெறிபிடித் தவராய் விருப்புஇளம் பெண்களைக்
கடிமணம் புரிந்துபின் கணக்குஇலாத் துன்பமும்
பழியும் பாவமும் இழிவும் எய்துவர்;
இவர்நம் காந்தியின் இணைஇலா வாழ்க்கையைப்

படித்துநற் புத்தி படிய நன்னிலை
அடைவார் ஆக. அன்னைகத் தூரிபாய்
இளமை துறந்தமை ஏந்துஇழை யார்க்குஎலாம்
நல்ல படிப்பினை ஆக நலம்தரும்.
கணவர் காந்தியார் இருந்தும் அம்மையார்

உடல்வெறி அகற்றினார், உலகீர் தெளிமின்.
ஆடவர் அனைவரும் அணுகும் பெண்களைப்
பெற்ற தாய்என உற்ற பிறப்புஎன
எண்ணும் நிலையினை எய்துவர் ஆக;
பெண்பா லார்கள் பேணி ஆண்களைப்

பெற்ற தந்தை, உடனே பிறந்தவர்
என்ன எண்ணி வாழ்வார் ஆக.
இத்தகைச் சிறந்த எண்ணமும் ஒழுக்கமும்
எய்தி யவர்தாம் எய்துவர் மேன்மை.
இவரே தொண்டு புரிய ஏற்றவர்.

ஒழுக்கம் இலாரை நம்புமா உலகம்?
போனிக்சு நகரில் புண்ணியர் தொடங்கிய
இடால்சுடாய் பண்ணை இனிதின் வளர்ந்தது.
குழந்தையர் பல்லோர் கூடிய படியால், அவர்க்குக்
கல்வி தருவது கடமை ஆயது.

"குற்றம் நீங்கக் கற்றோர் அதன்படி
ஒழுகிநிற் றலால்தான் விழுப்பம் உறும்" என
ஆன்றோர் கூறும் அறவுரை அறிந்த
முனிவர் மோகனர் முதல்வர் தெளிந்து
ஒழுக்கத் தூண்மேல் உயர்த்தினர் கல்வியை.

உடற்பயிற் சிக்கும் ஓர்இடம் தந்தார்.
பண்ணையில் பணிஆள் இன்மையால் சமையல்
வேலையும் தோட்டி வேலையும் எல்லாம்
குடியிருந் தவர்களே குறித்துச் செய்தனர்.
எண்இலாப் பழமரம் இருந்த படியால்

தோட்ட வேலைத் தொண்டினைப் பிள்ளைகள்
ஏற்றுச் செய்தனர்; இதனால் அவர்க்குப்
போதிய உடற்குஉறு பயிற்சி போந்தது.
சிலசில சமயம் சிறுவர் யாவரும்
வேலைநே ரத்தில் விளையாடச் செல்லுவர்.

அப்போ தெல்லாம் அவர்களை அணுகித்
தப்பினைக் கூறித் தகும்வழி காட்டுவார்.
அதனால் அவர்கள் அறிவு பெற்றுத்
திருந்துவர்; எனினும் திரும்பவும் தவறுவர்;
இதுசிறு பிள்ளைகள் இயற்கையே அன்றோ!

நல்ல தண்ணீர், நல்ல காற்று,
வேளைக்கு வேளை விரும்பும் உணவுதான்;
இவைதமால் பண்ணையில் இருந்தவர் அனைவரும்
நோய்இலா வாழ்வுடன் தூய்மையாம் சிந்தையும்
பெற்றனர்; அவர்களைப் பேணினர் மோகனர்.

செருப்புத் தைத்தலும் சிறிய அளவில்
தச்சுத் தொழிலும் தாம்அவர் கற்றனர்.
மாணவ ருடனே மாண்ஆ சிரியரும்
தொழில்புரி வார்கள்; அதனால் எழில்உறு
பிள்ளைகள் விருப்புடன் பேணிக் கற்றனர்.

நடுப்பகல் யாவரும் நல்உணவு அருந்திய
பின்னரே பள்ளியில் பிள்ளைகள் சேர்வர்.
கணக்குபூ கோளம் சரித்திரம் கற்றனர்,
யாவும் அவர் அவர் தாய்மொழி வழிதான்.
பற்பல நாட்டினர் ஆதலின் பற்பல

அவர்கள் தாய்மொழி ஆக இருந்தன.
தமிழ்மொழி இந்தி உருது குசராதி
ஆகிய மொழிகளை ஆங்கே கற்றனர்.
தமிழும் உருதுவும் தாமே காந்தி
கற்பித் தனரால்; கண்ணியர் மோகனர்

“ தமிழ்மக் களுடன் தனித்துநான் கூடி
வழிப்போக் கினிலும் சிறைஉறு வாழ்விலும்
பழகிய போது படித்த தமிழே
நான்அறி தமிழ்ஆம்; நாடுஅறி போப்புஎனும்
ஐயர் எழுதிய அழகுசேர் பாலர்

பாட மும்நான் படித்தது உண்டு.
என்னுடன் இருந்தவர் என்அள வேனும்
அறியார்; ஆதலின் அடிய னேனே
மொழிகற் பித்து வழிப்ப டுத்தினேன்.
எழுத்துக் களையும் இயன்ற வரையில்

அடிப்படை இலக்கண விதியையும் அவர்க்குச்
சொல்லிக் கொடுத்தேன் சோர்வு படாமல்.
பேச்சில் எனைஅவர் பெரிதும் வென்றனர்.
என்னுடை உண்மை இயல்பை அவர்க்குநான்
மறைத்ததே இல்லை; அதனால் மாணவர்

என்னை என்றும் ஏத்தினர் மதித்தனர்.
எல்லாம் அறிந்தவர் எனஆ சிரியர்
கள்ளத் தனமாக் காட்ட முயல்வதால்
உண்மை அறியும் உயர்வு உடை மாணவர்
அவர்தமை மதியார்; ஆதலின் கேண்மின்,

ஆசுஇலா தவராய் ஆசுகள் இரிந்திடச்
செய்பவர் தாமே சீர்ஆ சிரியர்.
வகைபல செய்து வாய்மொழி ஆகப்
பாடங் களைநாம் பரிந்து கூறினால்
மாணவர் நம்மை மதித்துப் படிப்பர்.

பாடச் சுவடிகள் பாரமே அவர்க்கு.
பாடநூல் அவர்தம்முன் பார்க்கும்ஆ சிரியரே.
இனியன ஆக இயம்பின் பலபொருள்
மாணவர் எளிதில் மனத்தில் அமைப்பர்.
மறவார் என்றும்" எனவே மதித்து

வரைந்து வைத்தனர் வள்ளல் காந்தியார்.
உண்மை உணர்ச்சியும் ஒழுக்கமும் பெறுவதே
கல்வியின் கவின்பயன் என்பது கண்ட
மோகனர் பண்ணை முதல்வர் ஆதலால்
தவறுஎன் பதனைத் தவறியும் செய்யார்.

மாணவர் மாண்பு பெறுவதும் மடிவதும்
ஆசிரி யரையே அனைத்திலும் பொறுத்தது.
ஆதலின் ஆசான் மாணவர் நடுவில்
இருக்கும் போதும் இலாத போதும்
எல்லா வேளையும் எல்லா இடத்திலும்

குணம்நடை குறிக்கோள் இவைதமைக் குறித்து
மறவா நெஞ்சனாய் மதிக்க நடந்திடல்
இன்றி அமையா இயல்பாம் என்பது
முந்தையோர் கண்ட முடிந்த முடிவாம்.
பொய்ம்மையே உடையவன் "மெய்ம்மையைப்
போற்றுக."

எனஎடுத் துரைத்தால் எவரே கேட்பர்?
அவன்முன் பேஅவர் அவனை இகழுவர்.
அஞ்சும் நெஞ்சுடை ஆசான் ஒருவன்
வீரம் பற்றி விளக்குதல் முடியுமோ?
முடிந்தா லும்அவன் மொழிஎவர் கொள்வர்?

ஆதலின் மோகனர் அவர்தம்முன் தவறு
வாழ்க்கை நடத்தினார்; வழுவார் ஆயினார்.
“இங்ஙனம் எனக்குஎன் மாணவர் தக்க
ஆசிரியர் ஆக அமைந்தனர்; அன்புடன்
அவருக்கு ஆக வேணும் நல்லவன்,

நேர்மை ஆளன் எனநேர் நிற்கப்
பழகித் தேர்ந்தேன்” என்றார் பண்பார்
பெரியார் காந்தியார்; பெரியதுஓர் நிகழ்ச்சி
பேசுதும் கேண்மோ: பெருங்கொடும் துட்டன்,
அடங்காப் பிடாரி, அளவிலாப் பொய்யன்,

சண்டை பிடிப்பதே சார்குணம் ஆனவன்,
மாணவன் ஒருவன், மதிஇலான் இருந்தனன்.
அவனால் அடிக்கடி தொல்லைகள் ஆயின.
பொறுத்துப் பொறுத்துப் பார்த்தும் போக்குஇலை
மேலும் மேலும் மேவினான் தீமையே.

ஒருநாள் எத்தனை புத்தி உரைத்தும்
எதிர்த்துப் பேசினான், ஏறிடப் பார்த்தான்;
அதனால் அவருக்கு அடக்க முடியாச்
சினம்வந்து சேரச் சிரியர் எழுந்து
தடால்எனப் பக்கம் கிடந்த தடியால்

ஓங்கித் தோள்மேல் ஓர்அடி கொடுத்தார்;
அப்போது அவர்உடல் நடுநடுங் கியதால்;
பார்த்தான் பதினேழு ஆட்டைப் பையன்,
கூகூ எனவே கூச்சல்இட்டு அழுதான்;
"மன்னியும் மன்னியும்" என்றுமன் றாடினான்.

"குணம்எனும் குன்றுஏறி நின்றார் வெகுளி
கணமே ஏயும்; காத்தல் அரிது."
வள்ளுவர் வாய்மொழி வாய்மை இதன்திறம்
கண்டோம் ஈண்டே. கருதினன் குற்றம்,
வாலிபன் உடனே வந்தான் நல்வழி.

"உள்ளம் துடித்தது, ஓங்கினேன் அடித்தேன்
என்ன பாவம் இயற்றினேன்? ஏழையேன்.
தடியன் என்னைத் தடியால் திருப்பி
அடித்தால் என்னால் ஆவது யாது?
பிறர்க்குஒரு துன்பம் பேசேன் செய்யேன்

என்னும் விரதம் எடுத்த யானே
இங்ஙனம் நடந்தேன்! என்பிறர் செய்யார்?
துலங்கும் அறிவுஇலா விலங்குஎன நடந்த
என்பிழை நினைந்துநான் இன்றும் நடுங்குவேன்.
அன்று தொடங்கி அவன்நலம் அடைந்தான்."

எனநம் பெரியார் எடுத்து வரைந்தார்
சினத்தால் சீர்இலாச் செயல்கள் விளைந்திடும்;
சினத்தால் உடல்நலம் சிதைந்து நடுங்கிடும்;
சினம்என் பதுவே சேர்ந்தவர்க் கொல்லி;
கொலைஎனும் கொடுஞ்செயல் ஆவதும் சினத்தால்;

நகையும் உவகையும் நசித்திடச் செய்யும்
சினம்கொள் பவரே செத்தவர் ஆவர்.
தன்னல வாழ்வு தனைவிரும்பு வாரும்
சினம்கொளல் என்றும் மனம்கொளல் தவறும்.
உளத்தால் வெகுளி உள்ளா தவரே
உள்ளிய எல்லாம் உடனே எய்துவர்.
காந்தியார் தடிகொடு தடியனைத் தடிந்தது
சரியா, தவறா? சற்றுநாம் ஆய்ந்தால்
சரிஎன் பார்சிலர், தவறுஎன் பார்சிலர்.
"அடிபட் டதனால் அச்சிறான் திருந்தினான்.
அடிபடா மாடு பணியுமா? "கரும்புபோல்
கொல்லப் பயன்படும் கீழ்" எனக் கூறினார்
வாய்மையே கூறும் வள்ளுவ நாயனார். மேலும்,
'கொலையிற் கொடியரை வேந்தன் ஒறுத்து
நல்வழி நாடி நடக்கும் பெரியரைக்
காத்தல் களைதனைக் கட்டுப் பைங்கூழ்ப்
பேணுதல் போன்றது எனஅவர் பேசினார்."
சரிஎன் பார்க்குஇவை சாரும் அரண்.
"தவறுஎன வேநம் தவமுனி கருதி
அடிக்கடி வருந்தினார். அதுவே சான்றாம்"
எனஉரைத் திடுவர் தவறுஎன் பவர்தாம்.
அதன்பின் மோகனர் அடித்ததே இல்லை;
தவறின பேர்க்குத் தகும்அறிவு உறுத்தினார்.
அன்புகாட் டுதலே அகலா ஒழுக்கமாக்
கொண்டுமா ணவரைக் குறுகும் இன்பமும்

துன்பமும் தமக்கே தோன்றிய ஆக
உண்மையா உணரும் உள்ளம் பெறுதலே
ஏடும் எடுப்பும் இலாஆ சிரியர்தம்
தன்மையா இருந்தால் தாரணி இதனில்
அவர்தம் அடிபணி யாரும் இருப்பரோ?

மாணவர் தம்முடன் மகிழ்ந்த முகத்துடன்
இன்சொல் இயம்பி என்றும் பொய்யா
வாழ்க்கை யுடன்அவர் வாய்மைபா ராட்டிக்
குற்றம் கண்டால் குணமாய்ப் பேசி
அவர்மனம் அதனை அறிந்து திருந்துமா

நல்வழி காட்டியும் நாடார் ஆகில்
தம்மனம் வருந்தித் தகும்பரி வுடனே
இரக்க மயமாய் யாவரும் போற்றிப்
பணியுமா பண்ணும் பண்பே சிறந்தது.
இந்நிலை தந்தையர், இவர்க்கும் மேலாம்

ஆசான் மார்கள் அடைவரேல் பிள்ளைகள்
பிழைபுரி யார்கள், பெருமையே யார்க்கும்.
பண்ணையில் இருவர் தவறிடப் பார்த்துக்
காந்தி யடிகள் கலங்கி அவர்க்கா
ஏழுநாள் பட்டினி இருந்து நாலரைத்

திங்கள் தினம்ஒரு முறையே உண்டு
நோன்பு கொண்டார் நொந்தனர்; அதனால்
அனைவரும் திகைத்தனர்; அன்று முதலாப்
பிழைபுரி பவர்கள் பெரிதும் குறைந்தனர்.
பண்ணை வளர்ந்து பயன்பல தந்தது.

ஐரோப் பாக்கண்ட ஆங்கிலர் முதலிய
வெள்ளையர் வாழ வீடும் இலராய்ப்
பிழைக்க வந்து புகுந்தவர் பீடுஇலார்
ஆப்பிரிக் காவின் ஆதிக் குடிகளை
அடிமைகள் ஆக்கிக் குடிமை உடையர்போல்

வாழத் தொடங்கினர்; வயிற்றுக்கு இலாமல்
உழைக்கும் உடல்வலி திறமையும் இலாதநம்
இந்திய மக்களை "இந்நலம் உண்டால்,
அந்நலம் தருவோம், அன்புடன் வாரீர்"
எனஅழைத்து ஏகி ஏய்த்து நாட்டைச்

செழிப்புஉறச் செய்து தின்று கொழுத்து
மாட மாளிகை கூடகோ புரங்களை
இந்தியர் உடற்பாடு தந்திட அமைத்து
வாழ்வார் ஆயினர்; வலுஇலார் ஆயினும்
தத்தம தாய்நாட்டு வலுவினைக் கொண்டு

தலைதடு மாறித் தருக்கி மகிழ்ந்தே
எதிர்இலை எனவே துணிந்து இந்தியரை
அடக்கி ஆளவும் அடங்கார் தம்மைப்
பலவகை யானும் துன்பப் படுத்தி
நாட்டை விட்டே ஓட்டவும் துணிந்தனர்.

இன்றுஅவர் வாழ்வது இந்தியர் கட்டிய
மாளிகை களிலே; தின்பது மண்ணில்,
இந்தியர் திருத்திய எழில்பெறு மண்ணில்,
விளைந்த தீனியே; வெறிகொண் டவர்கள்
தன்னலம் அதனால் நன்றல நன்றியை

மறந்து துரத்திட மனங்கொண் டனரால்.
ஆசியாக் காரர் அனைவரும் தம்தம்
பெயரைப் பதிவு செயஒரு சட்டம்
ஆக்கினர்; அதனை அடியோடு அழித்திட
எதிர்த்துநம் காந்தியார் எண்ணி எண்ணிச்

சத்தியாக் கிரகம் எனும்ஒரு சார்பினைத்
துணையாக் கொண்டார்; இணைஇலா வழிதான்.
உண்மை சத்தாம், உறுதிஆக் கிரகம்;
"உண்மையில் உறுதி" என்பது தான்அது.
பிறர்செய் கொடுமை பிழைஎலாம் பொறுத்துத்

தீமை சேரா மனத்தராய்த் திடமாய்
எதிர்த்துஅன் னவர்செய் இடையூறு அதனை
உலகம் அறிய விளக்கி ஒளியுடன்
அடியோ மிதியோ கடியோ பட்டுப்
பட்டினி பசிஎலாம் பண்புடன் ஏற்று

மலைஅசைந் தாலும் மனம்அசை யாமல்
உண்மையில் உறுதியாய் உறைத்து நிற்றலால்
வெற்றியே வந்திடும்; வீரர் காந்தியார்
காட்டிய வழிஇதைக் கைக்கொண் டனரால்
ஆங்குதுன் புற்ற இந்தியர் அனைவரும்.

பதிவு செயமறுத் திட்டகாந் தியையும்
தலைவர் சிலரையும் தடித்தன மாக
வெள்ளையர் சிறையில் தள்ளி மருட்டினர்.
எங்கும் கூட்டம், எங்கும் கண்டனம்.
மேலும் பலபேர் மேவினர் சிறையினை,

சமட்சு எனும் ஆட்சித் தலைவர் காந்தியைக்
கலந்து கலங்கா வீரர் தம்முடன்
விடுதலை செய்தனர்; விரும்பித் தாமே
இந்தியர் பதிவு செய்தால் இந்தச்
சட்டம் விலகிடும் என்பது திட்டம்.

இந்தியர் வாக்கைச் சாத்தனர்; இசைகெடு
வெள்ளையர் வாக்கைத் தள்ளி நடந்திட
வந்தது மறுபடி வாய்மைப் போரும்
இந்தியர் திருமணம் எல்லாம் செல்லாது
எனஓர் அறிவுஇலாத் தீர்ப்பும் எழுந்தது.

ஒப்பந்தக் காலம் ஒழிந்தபின் கூலிகள்
தங்க எண்ணினால் தலைவரி மூன்று
பவுன் ஆண்டு தோறும் பதிவாத் தரஒரு
சட்டமும் செய்தனர் சண்டி வெள்ளையர்.
எங்கும்உண் மைப்போர்; யாவரும் எதிர்த்தனர்;

சட்ட மறுப்பில் சார்ந்தனர் பெண்களும்;
கத்தூரி பாயும் சித்தம் ஆயினர்;
காந்தியார் தலைமையில் கடும்போர் நடந்தது.
கத்தியும் இன்றிக் கருவிவேறு இன்றிக்
கலங்கா நிலைஅருள் கடவுளே துணைஎன

எண்ணித் தீயன யாவையும் எதிர்த்து
நின்றனர் தொண்டர்; நிலைஅழி வெள்ளையர்
ஆண்களும் பெண்களும் ஆகச் சிறையினில்
இடம் இலை எனும்படி அடைத்து நிரப்பினர்.
இந்தியர் செல்லல் ஆகாது என்றே

மறுக்கப் பட்டதுஓர் இடத்தில் மங்கையர்
இளஞ்சிறார் ஆக இரண்டா யிரம்பேர்
மீறி நுழைந்திட மிகும்ஊக் கத்துடன்
ஊர்வலம் வந்தனர் உற்றனர்; கரும்புத்
தோட்டக் கூலிகள் தோன்றினார் போரில்;

வேலை செய்ய மறுத்திட வெள்ளையர்
திமிர்கொடு பலரைச் சுட்டு வீழ்த்தினர்.
முப்பத் தொன்பதாம் வயதில் இருமுறை
நாற்பத்து நான்காம் ஆண்டில் இருமுறை
சிறைசென் றனரால் சீரியர் மோகனர்.

அறிவுஇலா வெள்ளையர் அடக்கு முறையினை
அறிவுசேர் உலகுஎலாம் அறிந்து நகைத்தது.
கண்கலங் கினரே கடுமன வெள்ளையர்.
சுமட்சு மறுபடி சூழ்ந்துகாந் தியுடன்
ஒப்பந்தம் ஒன்று செய்தனர்; அதனால்

அனைவரும் விடுதலை அடைந்தனர்; அவர்தமை
வாட்டுசட் டங்கள் வாடி ஒழிந்தன.
பொறுமைப் போரினால் போந்தது வெற்றி.
உண்மையில் உறுதி உயர்ந்தது
காந்தி கவின்புகழ் கவிந்ததுஎங் கணுமே.

## க௨. இந்தியாவில் வாய்மைப் போர்.

சத்தியாக் கிரகம், சத்திய உறுதி,
உண்மையில் உறைப்பு, என்பன ஒருபொருள்
குறித்திடும் சொல்தொடர்க் கூட்டம் ஆவன.
யார்க்கும் யாதொரு தீமையும் விளையான்
குற்றம் தீர்க்கக் கொள்ளும் போர்இது;

வாய்மைப் போர்என வழங்குவோம் நாம் இதை.
வெற்றிமேல் வெற்றி பெற்ற மோகனர்
நாற்பத் தைந்தாம் வயதில் நலம்பெறும்
ஆப்பிரிக் காவின் நீங்கி அன்புசேர்
கோகலே ஆணை கொடுத்த படியே

இங்கி லாந்தினை எய்தினர்; முதல்நாள்
உலகப் பெரும்போர் உற்றது கடுமையாய். அதனால்,
ஆறு மாதம் ஆங்கிலர் நாட்டினில்
தங்க நேர்ந்தது; அங்குஅவர் இந்தியர்
பலரைப் போர்த்துணைப் படையாக் கூட்டி

ஆங்கிலர் தமக்குநல் ஆக்கம் தேடினர்,
அதனால் அவர்கள் அருமைபா ராட்டி.
இந்தியர் தங்களுக்கு எப்படி யாவது
விடுதலை விருப்புடன் தருவர்என்று எண்ணினார்
எவரையும் எளிதில் நம்பும் இயல்பினால்.

இந்தியா வந்து சேர்ந்ததும் காந்தியார்
சபர்மதி தன்னில் சத்தியாக் கிரக
ஆச்சிர மந்தனை அமைத்து மகிழ்ந்தார்.
தாய்நாட் டுக்குத் தாம்செய் பணியை
இன்னதுஎன்று அறிந்துஉடன் இனிய சேவை

செய்வது வேறுந் நியமம் செய்கடன்.
நிலையத் தார்கள் நிலையாக் கைக்கொளும்
நோன்புகள் இரண்டு பான்மையா நுவலுதும்.
" பொய்யினைப் பேசுதல் பொருந்தா ஒழுக்கமாம்;
நாட்டின் நலமே நல்குவது ஆயினும்
பொய்யைத் தள்ளிப் புதைத்தல் வேண்டும்;
பெற்றோர் ஆயினும் பெரியோர் ஆயினும்
பொய்சொலச் சொன்னால் பொருந்தேன் என்றுஅவர்
சொல்லைத் தட்டிடச் சோர்தல் ஆகாது.
தீமை செய்து திட்டிய கொடியோன்
கொலையிற் கொடியவன் ஆயினும் திரும்பத்
தீமை செய்தலைத் தீர்தல் வேண்டும்.
மற்றும் அவனை மதித்து நலம்பல
செய்தலும் வேண்டும். செத்தா லும்நாம்
சீர் இலாச் செயல்கள்நம் தந்தையே செய்யினும்
அரசே ஆற்றினும் அவைகளைப் பொறுமையாய்
எதிர்த்தே எவர்க்கும் தீமைசே ராமல்
விலக்கிடல் வேண்டும்; விலங்கே ஆயினும்
வீணரே எனினும் விடாதுநாம் அன்பினால்
வெல்லலாம் என்பதே வீரர் துணியாம் "
இங்ஙனம் ஆய இருநோன் புகளும்
சபர்மதி விடுதியில் சார விரும்புவார்
பழகிக் கொள்ளும் பண்புகள் ஆவன
உண்மையில் உறுதியா நின்ற தன்மையால்
பணமும் துணையும் பாய்ந்துஇவர்க்கு உதவின.

"ஆப்பிரிக் காவினை அணுகிப் பிழைத்த
இந்தியர் தலைவரி இந்தியது எனினும்
ஒப்பந்த முறையை ஒழித்திடல் வேண்டும்."
என அவர் துணிந்தனர் இடைவிடாது உழைத்தார்.
மதன மோகன மாளவி யாஅவர்

வேண்டுத லின்படி விளக்க மாப்பேசி
இந்திய சட்ட சபையில் இனிதொரு
தீர்மானம் கொணரத் தேர்ந்த அறிவினர்
ஆர்டிஞ்சு அரசப் பிரதி நிதியார்
ஒப்புக் கொண்டுமே உதவியும் செய்தார்.

அவர்பின் வந்த அரசர் பதிலியார்
செம்சு போர்டு சிறிதுஎதிர் கருத்தாய்
இருந்த படியினால் இந்தியா எங்கும்
கிளர்ச்சி செய்யக் கிளம்பினர் காந்தியும்.
பம்பாய்ப் பதியினில் மாபெருங் கூட்டம்

கூட்டி அதனில் "குறித்தகா லத்துள்
ஒப்பந்தக் கூலி முறையை ஒழித்திடல்
வேண்டும்; இல்லையேல் கிளர்ச்சி விரியும்"
எனத்தீர் மானம் இயற்றினர்; அதுபோல்
நாட்டில் எங்கணும் நல்லதீர் மானம்

கூடிக் கூடிச் செய்திடக் குறித்த
கால முதலாக் கூலிகள் அனுப்புதல்
நிறுத்தப் பட்டதா நிலைத்தஓர் அறிக்கை
அரசினர் வெளியிட்டு ஆதரித் தனரால்;
நெடுநாட் குறைஇது நீங்கித் தொலைந்ததால்.

நாற்பத் தேழாம் வயதினர் காந்தி
விடாமு யற்சியால் வெற்றியைக் கண்டார்.
கங்கைக் கரைக்கு நெடுந்தொலை வடக்கே
நேபா ளத்தின் அருகே நெடுமலை
இமைய அடியில் இருந்தது சம்பாரன்.

ஆங்குப் போவதே அரியதோர் செயலாம்.
அந்த இடத்தில் அவுரித் தோட்டம்
இருந்தன; தோட்டக் காரர் இயற்றிய
கொடுமைக ளாலே குன்றிய மனத்தராய்க்
குடியா னவர்கள் கொதித்து வாடினர்.

அதனை அறிந்த காந்தி அடிகள்
நண்பர் சிலருடன் நணுகினார் அவ்விடம்.
குடியா னவர்தம் குறைகளை நேரில்
பார்த்தும் கேட்டும் உளத்தில் பதித்து
வேண்டும் துணைதனை விரும்பிச் செய்யவே

சென்றனர் சீரியர் சேர்ந்தனர்; கலைக்டர்
முதல்அதி காரிகள் முனிவரைத் தடுத்தனர்.
ஆணையை மீறினார் அன்புசேர் நெஞ்சால்.
வழக்குத் தொடர்ந்தனர் வழிமறித்து அழைத்தனர்.
காந்தியார் அவர்தமைக் கண்டனர்; "ஆங்கே

அரசினர்க்கு எதிராய் ஆணையை மீறும்
கருத்தினன் இல்லை; கண்டுஅப் பகுதியில்
தோட்டக் காரர்செய் தொல்லையை அறிந்து
போகவே வந்தேன்; புகுதல்ஆ காதுஎனத்
தடுத்தீர்; தடையை மீறினேன்" என்றார்.

அரசப் பிரதி நிதிக்கும் அறிஞர்
மாளவி யாவுடன் மதிநல நண்பர்
பாடலி புரத்தார் பலர்க்கும் காந்தி
தந்தி வழியாத் தம்நிலை சொன்னார்.
காந்தி வழக்கை மீட்கெனக் கவர்னர்

ஆணை அனுப்பிட அகமகிழ்வு அடைந்து
கலெக்டரை மோகனர் கண்டு பேசினார்.
தோட்டக் காரர்செய் தொல்லைகள் இவையென
ஆராய் வதிலே அரசாங்க உதவி
வேண்டுவ தருவதா விருப்புடன் கலெக்டர்

கூறினார். குடியா னவர்தம் குறைகளை
வந்து வந்து கூறிட, கவர்னர்
மோகன ருடன்சில முதல்வரைச் சேர்த்துஆய்
கழகமா அமைத்துக் கடிதில் குறைகளைத்
தெரிந்துசட் டத்தால் தீர்த்து வைத்தனர்;

அவுரித் தொழிலார் அச்சம் தீர்ந்தனர். இதற்குள்
ஆமதா பாத்தில் ஆலைத் தொழிலார்
குறைந்தசம் பளமும் கொடுமையும் பெற்று
முதலா ளியரால் முனிவுற் றமையை
அனுசுயா பாயினால் அறிந்து முடுகினார்;

தொழிலா ளர்படும் துன்பம் தெரிந்து
முதலா ளியரை முனிவர் கண்டு
மனம்இரங் கிடவே மன்றாடி வேண்டினார்.
கேளார் ஆகக் கிளர்ச்சி செய்து
வேலை நிறுத்தம் செய்ய வேண்டலும்

தொழிலா ளர்உடன் தொழில்செயப் புகாமல்
நின்றனர் நெடுநாள் தொல்லை தராமலும்
பிறரிடம் சென்று பிச்சைகே ளாமலும்
வாழ்ந்து வந்தனர்; கடைசியில் அவர்தமுள்
சிலர்பணி செய்யச் சென்றனர்; சிலர்சொல்

மறந்து தவறிட மனம்பொறு மையினால்
உண்ணா நோன்பினை உற்றார் முனிவர்.
கண்டவர் அனைவரும் கண்கலங் கினரால்.
மூதலா ளிகளும் முனிவர் சொற்படி
நடக்கமுன் வந்தனர் நல்லபேர் பெற்றனர்.

கைரா வட்டக் காடுகள் யாவும்
மழைஇல் லாமல் மடிந்தன ஆகத்
தீர்வை தரக்குடி திண்டா டியதால்.
அரசினர் கொடுமை ஆற்றி வரிபெற
முயன்றனர்; அதனால் மோகனர் தோன்றி

வரிதரா இயக்கம் வகுத்து நடத்தினார்.
“செல்வர் வரிதனைச் சீருடன் தந்தால்
ஏழைகள் தம்மை இடையூறு இலாமல்
காப்போம்” என்று கலெக்டர் கூறினார்.
இதற்குக் காந்தி இசைந்தனர், வென்றார்;

கைரா ஏழைகள் கண்டனர் இன்பம்.
இரௌலட்டுச் சட்டம் எவரையும் பிடித்து
விசாரணை இன்றி வீட்டலாம் சிறையில்
என்ன அமைய இதனை எதிர்த்துக்
கண்டனம் செய்தார் காந்தி யடிகள்.

எங்கும் எதிர்ப்பும் கிளர்ச்சியும் எழுந்தன.
அதிகா ரிகள்செய் அலங்கோ லங்களும்
அதனால் குடிகள் அதிர்ச்சி அடைந்து
கலகம் செய்தலும் கண்டார் காந்தி.
சாலியன் வாலா பாக்கினில் சார்ந்த

ஒருபா வமும்செயாது உற்ற மக்கள்
ஆணும் பெண்ணும் அனைவரும் படுகொலை
செய்யப் பட்டனர் சீர்ப்பாஞ் சாலக்
கவர்னராய் இருந்த காதகன் ஒருவனால்.
"இமாலயத் தவறுயான் இழைத்தனன், அந்தோ!

கொலைசெய் தாலும் பொறுக்கும் குணத்தினை
அடைந்தவர் தாமே அறப்போர்க்கு உரியவர்!
மக்கள் மனத்தில்இப் பக்குவம் வரஇலை"
எனவாய் மைப்போர் இனிவேண் டாமென
நிறுத்தினர். நிலைகுலைந் திருந்தபாஞ் சாலர்

நெஞ்சம் குமுறி நெடுமூச்சு எறிந்து
"கொலைபா தகர்தமைக் கொன்றுகுவி யாமல்
பொறுக்கவா? காந்தி சொல் புத்தி இதுவா?"
எனச்சினந் தனர்சிலர்; இனியார் மோகனர்
மக்கள் மனநிலை தவறிய படிக்கா

மூன்றுநாள் உண்ணார் முயன்றார் நோன்பு.
முதல்உல கப்போர் முடிந்த உடனே
ஒப்பந் தங்களில் துருக்கிக்கு உரியன
கிடைத்தில என்று கிலாபத்துக் கிளர்ச்சி
தொடங்கிய தாக, நடத்தினர் காந்தி.

அப்போது அவர்வயது ஐம்பத் தொன்று.
இந்துக் களும்முக மதியரும் இணங்கி
வாழ வேண்டும்; வழிஇது மறந்தால்
கொலையும் கொள்ளையும் கொடுஞ்செயல் யாவும்
இவர்தமுள் தோன்ற இருபெருந் தொகுதியும்

அழிந்திடும்; அதனால் அவர்இது செய்தார்.
போயர் போரிலும் சூலுப் போரிலும்
அரசினர் அளித்த பதக்கங் களைஎலாம்
வெறுப்புடன் முனிவர் வேண்டாம் என்றே
துறந்தனர், நாக புரியில் கூடிய

காங்கிர சினில்இவர் கடுமுயற் சியினால்
துன்பந் தராவழி உரிமை அடைய ஓர்
முடிவினைக் கண்டனர் முதல்வர்ஆம் பெரியார்.
ஐம்பத் திரண்டாம் ஆண்டு தொடங்கலும்
அயல்நாட் டுத்துணி அணிவது தவறென

எடுத்துஇவர் மொழிந்ததை ஏற்றனர் இந்தியர்.
இங்கிலாந் துத்துணி எரித்தனர் பல்லோர்.
வேல்சுஇள வரசர் விருப்புடன் வந்து
சென்னையில் இறங்கினர்; சீறினர் இந்தியர்.
காணும் இடம்எலாம் கருங்கொடி பறந்தது.

எங்கும் மறியல், எங்கணும் கலகம்.
முழுஅதி காரமும் மோகனர் தமக்குக்
காங்கிரசு அளித்தது; காந்தி அடிகள்
"வாய்மைப் போர்பர் தோலியில் வருது"என
அரசப் பிரதி நிதிக்குஅறி வித்தார்.

சௌரி சாரா வினில்பெருங் கூட்டம்
கொள்ளி வைத்துச் சூறை கொண்டது
காங்கிரசுப் போரால்; கண்டார் காந்தி;
உண்ணார் ஐந்துநாள் உழந்தார் துன்பம்,
அறியா மக்கள்செய் அடாத செயற்கா

வாய்மைப் போரினை விடுத்தார்; வழக்கு
வந்தது; இவர்தம் வாய்மைப் போரே
கலகங் களுக்குக் காரணம் என்றனர்;
உண்மைஎன்று ஒப்பினார்; அரசினர் அவரை
ஆறுஆண்டு சிறைஎன அனுப்பினர் கூடம்.

இரண்டுஆண் டுகள்தாம் கழிதலும் இவர்க்குக்
குடல்வால் அழற்சிஆம் கொடுநோய் கண்டது;
அதனால் அறுவை மருத்துவம் நடந்தது;
விடுதலை பெற்றார் விரிபுகழ் வீரர்.
அவர்தமக்கு அப்போது ஐம்பத்தைந் தாண்டாம்

இந்து முசிலிம் ஒற்றுமைக்கு ஆக
இருபத் தொருநாள் இருந்தார் உண்ணார்.
பெல்காம் நகரினில் பேரவைக் கத்துடன்
நடந்தகாங் கிரசின் நாயகர் ஆனார்.
ஐம்பத் தாறும் ஆண்டினில் அகில

இந்தியச் சர்க்காச் சங்கம் எழுந்தது.
தமது பண்ணையில் வாழ்கிலர் தவறு
நடந்தமைக்கு ஆகக் கிடந்தார் பட்டினி.
ஆயிரத் துத்தொள் ளாயிரத் தின்மேல்
ஐம்பத் தேழாம் வள்ளுவர் ஆண்டினில்

சென்னையில் சிறப்புற நடந்ததாங் கிரசில்
"ஆங்கிலர் தொடர்பே அறுதல் வேண்டும்;
இந்தியா தனிஅரசு எய்திடல் வேண்டும்"
என்னும் முடிவினை ஏற்றனர் யாவரும்
'ஓர்ஆண் டினில்நீர் உண்மைஆன

குடியேற்ற நாட்டின் உரிமை கொடீர்எனில்
முழுவிடு தலைப்போர் முயல்வோம்" எனவே
முடிவுசெய் தார்கள் மோகனர் சொற்படி.
தொழிற்கட் சியினர் தோளில் வந்தது
ஆங்கில ஆட்சி; அப்போது அடிகள்

அறுபது ஆட்டையர் ஆயினர் திகழ்ந்தார்.
வட்ட மேசை மாநாடு ஒன்றினை
அரசினர் இலண்டனில் கூட்டினர்; அதிலே
கலவோம் என்று காங்கிரசு உரைத்தது;
சட்ட மறுப்புச் சார்ந்தது உடனே.

காந்தியார் முதல்வராய் எழுந்து கையினில்
தண்டினை ஊன்றித் தண்டிக் கடற்கரை
நடந்து சென்று நண்ணி உப்பினைக்
கடல்நீர் கொண்டு காய்ச்சி எடுத்தனர்.
அவரைப் பின்தொடர்ந்து அளவிலர் சென்றுமே

உப்புக் காய்ச்சுதல் முதலா உள்ள
சட்ட மறுப்புத் திட்டம் கொண்டு
வீர முழக்குடன் விளங்கின ராமால்.
அவர்தமை அரசினர் அடைத்தனர் சிறைகளில்;
அடைக்க இடம்இலை என அரசு அலறிட

எண்ணிலர் துணிந்தனர் எய்தினர் சிறையினை.
காந்தி யாரும் கடுஞ்சிறைப் பட்டார்.
உண்மைநாட் டன்பினில் ஒப்பிலாப் பெரியார்
செயகர் சப்புரூ உடனே சேர்ந்துபோய்
இராசப் பதிலியாம் இருவினைக் கண்டனர். அதனால்

இருவினும் காந்தியும் இசைந்துஉடன் படிக்கை
செய்தனர், அனைவரும் விடுதலை சேர்ந்தனர்.
இங்கி லந்தினில் இரண்டாம் வட்ட
மேசைமா நாடு மேவியது; அதற்குத்
தன்னந் தனியே காங்கிரசு ஆளாக்

காந்தி சென்றார்; களித்தனர் இந்தியர்.
முட்டுக்கு மேலே உடுத்த துண்டும்
மூடிய போர்வையும் கொண்டு மோகனர்
இங்கி லந்தினை எய்தினர் ஆக
'அரைஅம் மணப்பக் கிரி'என அவரை

அங்கிலர் இகழ்ந்தனர் அகம்பா வத்தினால்.
ஆப்பிரிக் காவினில் அறப்போர் தொடங்கலும்
வெள்ளையர் உடையை வெறுத்துத் தள்ளிக்
கூலிகள் உடையினைக் கொண்ட மோகனர்
இந்தியா வருதலும் ஏற்றனர் இவ்வுடை.

அழுக்குஉடை உடன்ஓர் அம்மை இருப்பதைக்
கண்ட காந்தியார் கத்தார் பாய்வழி
அழுக்குஇலா உடையினை அணியவேண் டுதலும்
அந்த அம்மை அளித்தார் மறுமொழி:
"எனக்குஉள உடைஇவ் ஒன்றே. இதனை

வெறுப்பதோ துவைப்பதோ எப்படி? விளம்புவீர்."
இம்மொழி கேட்டலும் எரிந்தனர் உள்ளம்;
"உடுத்தலர் உடைக்குமேல் மற்றோர் உடையும்
இன்றி இந்தியர் எண்ணிலர் தவித்திட
ஆடம் பரம்ஆம் வாழ்க்கை நமக்குஏன்?"

என அவர் எண்ணித் துணிந்துஅன்று தொட்டு
எளியர் வாழ்க்கையை ஏற்றனர் விரும்பி.
அரசரை அரைஅம் மணப்பக் கிரிதான்
கண்டுகை குலுக்கிக் களிப்புடன் பேசினர்.
வேறுடை தரித்திட விதித்தனர் அரசினர்

எனினும் காந்தியார் "என்உடை யினில்தான்
அரசரைக் காணுவேன்; அன்றிநான் மாட்டேன்"
என்றுஅறைந் திடலும் இசைந்துஅனு மதித்தனர்.
முன்இது போல்ஒரு நிகழ்ச்சி முளைத்தது.
அன்றுஇரா வரசர் சென்னை அடைந்திட

மாநகர்த் தலைவரா மதிப்புடன் வாழ்ந்த
தியாக ராயச் செட்டியார் அரசினர்
வகுத்த உடையினில் வந்துவர வேற்க
மறுத்திட, அவர்தம் மனம்போல் வருமா
அரசினர் வேண்டலும், அரசிளங் குமரரைத்

தம்வழக் கம்போல் தம்தனி உடையுடன்
சென்றனர் கண்டார் செப்பினர் இன்மொழி. நிற்க,
மாநாட் டினிலே மாண்புடன் பேசியும்
கருத்துஅவர்க்கு ஒன்றும் கைகூ டிலதால்.
வெறுங்கை யுடனே மீண்டனர் வீரர்.

வட்ட மேசை மாநாடு தீர்ந்தது;
காந்திஇந் தியாவில் கால்வைத் திடலும்
காங்கிர சினர்பலர் கடுந்தண் டனைகளை
அடைவதும் அடிகள் படுவதும் அறிந்தார்.
அரசப் பதிலியார் இருவின் அகன்றிட
வில்லிங்டன் ஆண்டனர் விறுவிறுப் புடனே;
காந்தியைக் காணவும் மறுத்தார் கல்மனர்.
வாய்மைப் போரை வகுத்துத் தொடங்கினார்;
அதனால் அரசினர் அனுப்பினர் முனிவரைச்
சிறைச் சாலைக்கே. சீர்இலாது என்று
தனித்தொகு தியினைத் தவிர்க்க உண்ணா
நோன்புமேற் கொண்டார் நொந்து வருந்தினார்;
அதனால் அறிஞர் அனைவரும் கூடி
அவர்மனப் படியே ஆமென்று இணங்கினர்.
வாய்மைப் போரினை வலுப்படுத் திடலும்
மறுபடி சிறையே மாண்புடன் பெற்றார்.
தம்உயிர் புனிதம் தனைப்பெற இருபத்து
ஒருநாள் உண்ணா நோன்பு கொண்டார்.
அப்போது அவர்வயது அறுபத்து நான்கு.
சட்ட மறுப்பும் நின்றது; சபர்மதி
ஆச்சிரம வாழ்வும் அகற்றினார் பெரியார்.
அகன்றார் அரசியல் தன்னிலும்; அதன்பின்
மூன்றுஆண் டுகள்தம் முழுநே ரத்தையும்
நாட்டுக் கைத்தொழில் வளர்ச்சி, நலம்தராத்
தீண்டா மையினைத் தீர்த்துக் கட்டுதல்,

தொல்லைப் படுவார் துணையா நிற்றல்
ஆகிய நலப்பணி அனைத்தையும் ஏற்றார்.
வார்தா அருகில்ஆம் வளமிகு சேவாக்
கிராமம் தலைமை நிலையமாக் கிளர்ந்தது.
வார்தாக் கல்வித் திட்டம் வகுத்தனர்.

அறுபத்து ஏழாம் வயதுஅவர்க்கு ஆயது;
புதிய அரசியல் போந்தது; அதிலே
காங்கிர சினரும் கலந்து கொண்டிட
எட்டுமா காண ஆட்சியை எய்தினர்.
மாகாண ஆட்சி மக்கள் கையினில்

உற்றது கண்ட உள்நாட்டு அரசருள்
இராச கோட்டையின் ஏந்தல் இடத்தில்
குடிகள் சிலசில உரிமை கோரிட
மன்னர் மறுத்திட மோகனர் மடியும்
வரையும் உண்ணா வழிமேற் கொண்டனர்.

அரசப் பிரதி நிதியார் அன்புடன்
தலையிட, மன்னர் தம்குடி மனம்போல்
நடந்திட, அடிகள் நலம்என மகிழ்ந்தார்.
எழுந்தது இரண்டாம் உலகப் பெரும்போர்.
"இந்தியா எங்கணும் எதிர்த்துஅங் கிலர்செய்

போர்க்குத் துணையாக் போகேல், பொருளும்
கொடேல்" எனக் காங்கிரசுக் கொள்கையர் புகன்றார்.
அதனைக் கண்ட அரசினர் "பலப்பல
கட்சித் தலைவர் கூடிக் காணும்
ஆட்சி முறையை அளிப்போம்" என்றனர்.

முசிலீம் கட்சியின் முதல்வர் சின்னு
காங்கிரசுத் திட்டங் களுக்குளலாம் இணங்கார்
"நாட்டைப் பகிர்ந்து நாங்கள் மிகுதியா
வாழும் பகுதியைப் பாகமாத் தாரும்"
என்று கேட்டனர்; இதனால் இந்தியக்

கட்சிகள் ஒன்றுஎனும் காட்சி மறைந்தது.
பார்த்தார் காந்தி பாரோர் யாவரும்
உண்மையை அறிய உரைத்தனர்; அப்போ
கிரிப்சுஎனும் அங்கிலர் விரித்துஒரு திட்டம்
கொணர்ந்தனர்; இந்தியர் 'கொள்ளோம்' என்றனர்.

எல்லாம் அங்கிலர் இயற்றும் சூழ்ச்சிதான்
என்பது தெரிந்த எதிர்இலார் காந்தி
"வெள்ளைய னேநீ வெளியேறு; இங்கே
கொள்ளை கொண்டது போதும். போ, போ"
எனும்பெருங் கிளர்ச்சியை எழுப்பினர் தலைவராய்

எழுபத்து மூன்றும் ஆண்டினர் இனியார்.
அகில இந்தியக் காங்கிரசு அவையினில்
இதனை மொழிந்தனர், ஏற்றனர் தலைவர்.
தலைவர் பலரையும் தம்நல அங்கிலர்
சிறையுள் தள்ளினர், சீறினர் இந்தியர்.

எங்கும் கூட்டம், எங்கணும் எதிர்ப்பு;
தண்டவா ளங்களைத் தகர்த்தனர், தந்திக்
கம்பிகள் யாவும் கத்தரித் தனரால். அதனால்
எங்கும் தடியடி. சிறைகள் யாவும்
தொல்லை விளைத்த தொண்டரால் நிரம்பின.

‘‘எல்லாக் கிளர்ச்சியும் என்னால் விளைந்தன’’
எனப்பொறுப்பு அனைத்தும் ஏற்றனர் மோகனர்.
கத்தூரி பாயும் காந்தியா ருடனே
புனாவினில் அகாகான் பொன்மா ளிகையில்
சிறையில் இருந்து செப்பரும் துன்பம்

அடைந்தனர்; அம்மை யார்தமை ஆண்டவன்
அழைத்துச் சென்றுதன் அடியில் அமர்த்தினன்.
‘‘அறுபது ஆண்டுகள் அன்புடன் மனைவியாய்
யான்படும் பாடெல்லாம் என்னுடன் பட்டுத்
துணையாய் இருந்தாளென் துயரம் போக்கிய

கற்புக்கு அரசி, கத்தூரி, கண்ணே!
பிரிந்தனை யோஎனை?’’ என்றார் பெரியார்.
கண்கள் கலங்கின, கண்ணீர் சிந்தின.
உடல்நலம் சிதைந்ததால் உழந்தனர் துன்பம்;
அதனால் அவரை அரசினர் விடுத்தனர்.

சின்னா வீட்டினில் சென்று கண்டார்;
பலநாள் பார்த்துப் பேசியும் சின்னா
இணங்கார் ஆயினார்; என்செய்வார் காந்தி?
எழுபத் தேழாம் ஆண்டாய்ப் பழுக்க
பழம்ஆம் பண்பினர் பார்புகழ் மோகனர்

சென்னையின் தெற்கே சென்று தமிழகம்
சுற்றி மதுரைச் சொக்க நாதரைப்
பழனிஆண் டவரைப் பார்த்துஅகக் கண்ணினால்
வணங்கிச் சிலநாள் வாழ்ந்தனர் சென்னையில்.

அங்கிலர் பார்லிமென்று அங்கத் தினர்ஒரு
திட்டத் துடனே சென்னையில் வந்து
கண்டு பேசினர்; காந்தி களித்தனர்.
மந்திரி மார்கள் மதிநலக் கழகமும்
இந்தியா வந்திட எதிர்ந்து மோகனர்

முதல்மந் திரியாம் மூதறி வாளர்
அட்டலே உடனும் அறிவிற் சிறந்தவர்
ஃஊவர் உடனும் உளம்கலந் தவராய்ப்
பேசி மகிழ்ந்து பெரிதுபா ராட்டினர்;
சின்னா உளம்போல் சீர்இந் தியாவும்

பாகித் தானும் எனவே பங்கிட
இசைந்தனர்; எல்லாம் எளிதின் முடிந்தது
மந்திரி மார்கள் மகிழ்ச்சியில் மூழ்கி
இங்கிலாந்து எய்தி இனிதுபார்லி மென்றில்
இந்திய விடுதலைச் சட்டம் இயற்றினர்.

வங்கா ளத்தின் நவகாளி அருகில்
இந்தியர் தம்மை எதிர்த்து முசிலீம்
குத்திக் குவித்துக் கொடுமைகள் செய்தனர்;
பீகா ரினில்இந் தியர்முசி லீமைக்
கொன்று சிதைத்துக் கூத்தா டினரால்.

கண்டார் காந்தி கண்ணீர் வடித்தார்.
சின்னா வுடனே சேர்ந்துஓர் அறிக்கை
விடுத்தும் கலகம் விரிவதைப் பார்த்துத்
தாமே நேரில் தனித்துநவ காளியில்
கால்நடை யாய்ப்போய் மக்களைக் கண்டு

நல்நல மொழிகள் நயந்து பேசிப்
பரிவுடன் வேண்டினர்; பலரும் பணிந்தனர்.
எழுபத் தெட்டாம் வயதில் இனிதில்
ஆவணி பிறந்தது, ஆங்கில அரசினர்
இந்திய விடுதலை தந்தனர் உயர்ந்தார்.

தனிஒரு நேரு தலைமைமந் திரியா
நிறைதமிழ்ச் சண்முகம் நிதிமந் திரியா
இந்திய ஆட்சி எழிலுடன் எழுந்தது.
மவுண்டுப் பேட்டன்என் மாண்பரே நாட்டுத்
தலைவரா இருந்தனர்; தன்னலம் அற்ற

தனிப்பெருந் தலைவர் அவரே இந்திய
விடுதலை தன்னை விருப்புடன் விரைவில்
கொணர்ந்துநம் உள்ளம் கொள்ளை கொண்டவர்;
வாழ்க நீடூழி வாழ்க.
இந்தியத் தாய்அருள் எங்கும் ஓங்குகவே.



## ௧௩. மாமுனிவர் மறைவு.

இந்தி யாவினை இருநூற் றாண்டா
ஆண்ட அங்கிலர் அகன்றனர் திடீர் என.
எத்தனை யோவிதச் சூழ்ச்சிகள் இயற்றியும்,
ஒருவருக்கு ஒருவர் பகைமையை மூட்டிப்
பார்த்தும் பலிக்கா நிலையில் விலகினர்.

அதற்குக் காந்தியார் ஆற்றிய தொண்டே
முதற்கா ரணம்ஆம். முனிவர் மோகனர்
தன்னலம் அறவே தகர்த்துக் காலம்
முழுவதும் விடுதலை கருதி முயன்றனர்.
இன்னும்ஓர் காரணம் இரண்டாம் உலகப்

பெரும்போர் ஆகும்; முதற்பெரும் போரில்
வெற்றி கண்டவர் வீரர்இந் தியரே.
இப்பெரும் போரிலும் எண்இலா வீரர்
தரைப்படை கடற்படை தகுவிண் படையிலும்
சேர்ந்துபோர் செய்த செய்கை அதனால்

வெற்றியும் வந்தது, வேறுகா ரணம்இலை.
தரைப்படை தன்னிலும் தலைமையர் இந்தியர்,
கடற்படை அதனிலும் கனபுகழ் பெற்றனர்;
விண்படைப் போரினில் வேறுஎதிர் இல்லார்.
மண்உலகு அனைத்தும் மதித்துஇவர்ப் புகழ்ந்தது.

மேலும்இவ் வீரர் மேவினர் உணர்ச்சி,
தம்மவர் என்னும் தலைமையாம் பற்றினை.
அதனால் இவர்தமை அடக்கிஆ ளுதலும்
ஒருவர்மேல் ஒருவரை ஏவி அழித்தலும்
இனிஇய லாதுஎன எளிதில் உணர்ந்தனர்,

அங்கில நாட்டினர் அறிஞர் ஆனதால்
நல்லபிள் ளைகளாய் நட்பு நிலையிலே
விடுதலை தந்து விலகிச் சென்றனர்.
கல்கத் தாவினில் இருந்தார் காந்தி,
இந்து முசிலீம் இருவரும் பகைத்துக்

கலகம் செய்ததால் காந்தி பொறாமல்
பட்டினி தொடங்கலும் பார்த்தனர் தலைவர்;
ஒன்றுசேர்ந்து அவர்முன் உறுதி உரைத்தனர்
"இனியாம் பகைமை இலாதுஇருப் போம்" என.
உணவுக் கட்டுப் பாட்டினை உண்மையர்

கண்டித் தனரால்; காந்தி அடிகள்
எழுபத்து எட்டாம் ஆண்டுபோய் எழுபத்து
ஒன்பதாம் ஆண்டினை உற்றார் இணையிலார்.
தில்லி சேர்ந்தார் திண்ணியர் மோகனர்;
இந்து முசிலீம் கலகம் எழுந்தது;

மறுபடி பட்டினி மடியும் வரையும்
தொடங்கினர் மாமுனி துன்பம் தீர்க்க.
"முசிலீம் நண்பர்செய் முட்டுக் கட்டைகள்
எண்இல வேனும் இந்தியர் பொறுமையே
கொண்டிடல் வேண்டும், கொடும்சினம் அகற்றி.

பெண்களைச் சிறையாப் பிடித்துஅவர் போயினும்
இந்தியர் பொறுமை இழந்திடல் தகாது.
தீமைசெய் தவர்க்கும் திரும்ப நன்மையே
செய்வது சீரியர் செய்கடன்; நாம்அவர்
பெண்களைத் தொடுவது பெரும்பா தகம்ஆம்.

அவரிடம் பிடுங்கிய பள்ளிகள் அனைத்தையும்
அவரிட மேநாம் சேர்க்கவும் அவர்நிறை
பாக்கித் தானப் பணத்தினைக் கொடுக்கவும்
இசைந்திடும்" என்றனர்; இணங்கினர் தலைவர்.
எத்தனை யோமுறை இங்ஙனம் பட்டினி

கிடந்து நலச்செயல் பழுத்த கிழவனார்
காந்தியார் கடைசிப் பட்டினி கழிந்தார்.
உள்ளது சொல்வோர்க்கு உலகெலாம் பகைஎன
உலகில்ஓர் பழமொழி உலவுகின் றதுவால்.
இயல்பில் முசிலீம் இவரை வெறுத்தனர்.

இந்துக் களும்பலர் எதிர்த்தனர் இவரை.
"பாகித் தானில் படுகொலை ஆண்களைச்
செய்தலும் பெண்களைச் சீர்அழித் திடுதலும்
முதலிய தீமைகள் முசிலீம் செய்து
கொள்ளை யடித்துக் கொக்கரித் திடுகிறார்.

இந்தியர் யாவரும் ஏங்கித் தவித்துத்
துடிதுடிக் கின்றனர்; துன்பம் செய்யேல்
எனஇவர் இங்கே நம்மை ஏவிப்
பட்டினி கிடந்து பதற அடிக்கிறார்."
எனச்சில பண்பிலார் எதிர்த்தனர் அடிகளை.

கொல்லவும் கொடுமனத்து எண்ணினர் கொடியோர்.
இரண்டுஆண் டின்முனம் இவர்செல் இரயிலைக்
கவிழ்க்க முயன்றனர்; கல்மனர் தையில்
முதல்வா ரத்தில் முனிவர்மேல் குண்டினை
வீசினர், அதிலும் வீரர் தப்பினார்.

"மாமுனி முசிலீம் மக்கள் சார்பினர்;
இவர்தம் சார்பாய் இருந்தனர் தலைவர்.
ஆதலின் இவர்உயிர் அகற்றிடல் வேண்டும்.
முனிவர் சொற்படி முசிலீம் நல்வழி
வருவது என்பது வாய்க்காது என்றும்.

கரும்பினைப் போலக் கசக்கிக் கொன்றால்
அல்லவோ கீழ்மகன் அறிவன் அறிநெறி?"
என்றொரு பாவி இந்து ராட்டிரம்
என்னும் நாட்டாள் ஆசான் இவன்பெயர்
நாதுராம் விநாயக காட்சே நலம்இலி

இவரைக் கொல்ல எண்ணித் துணிந்தனன்.
தில்லியில் ஒவ்வொரு தினமும் மாலையில்
பேசுவார் நல்உரை பெரியார் மோகனர்.
நாள்தொறும் கூடுவர் நல்உரை கேட்க
ஆயிரக் கணக்கில் அன்புசேர் உளத்தினர்.

தைபதி னேழு வெள்ளி அத்தம்
ஒருபுறம் ஆவா ஒருபுறம் கனுஎனும்
பேத்தியர் இரு பேரும் வந்திடக்
காந்தியார் கையினில் தண்டினை ஊன்றி
நடந்து வந்தனர்; நஞ்சன் காட்சே

கண்டான், அவர்முன் கடுகிச் சென்றான்;
பணிந்தான் வணங்கினன் "பண்பீர், இன்றுநீர்
சிறிது நேரம் தாழ்த்தனிர் செம்மையீர்"
எனவே செப்பினன்; "ஆம் ஆம்" என்றுஅவர்
எதிரா வணங்கி இசைத்தார் இன்சொல்

காட்சே சுட்டான் காந்தி மார்பினில்.
மும்முறை சுட்டான் முனிவர் சாய்ந்தனர்;
உலகெலாம் புகழும் உயர்தவர் சாய்ந்தார்.
உயிர்க்கே கெடுதி உறினும் உண்மையே
பேசிய பெரியார், பெரிய கேடுகள்

செய்தவர் தமக்கும் நன்மையே செய்தவர்,
அடித்து மிதித்துஅவர் ஆருயிர் பதைக்கத்
தள்ளிய தடியர் தமக்கும் எதிரா
அரசினர் வேண்டியும் அவர்செய் தீமையை
எடுத்துச் சொல்லவும் இணங்கா வீரர்,

ஒடுக்கப் பட்டார் தமக்கும் உறையுள்
தந்துஅவர் கழிநீர் தன்னையும் எடுத்துத்
தூய்மை செய்த தூயவர், தொண்டர்,
எத்தனை பெரியவர் யாவரே ஆயினும்
குற்றம் செய்யின் கூசாது உரைத்துத்

திருத்தும் அன்புசேர் திண்ணிய நெஞ்சர்,
"கொல்லவே பயன்படும் கீழ்என் றாலும்
அன்பினா லேயும் அவரையாம் வெல்லலாம்"
என்றும் ஈடிலாக் கொள்கையர் இறந்தார்!
இறந்தது அவர்உடல், எழுந்தது அவர்புகழ்!

உலகம்உள் ளளவும்ஏன் உலகமே அழியினும்
அழியாப் புகழ்அவர் ஆற்றிய புகழே
செய்தி உலகெலாம் சென்று பறந்தது.
நொடிப்பொழு தினிலே நொந்து கதறித்
தாயினை இழந்த தனிக்கன்று என்னச்

சவகர்லால் நேரு சார்ந்தனர் தலைவர்.
உலகப் பெரியார் சிறியார் ஏழைகள்
யாவரும் கலங்கி இன்உயிர் தவித்திட
வங்கக் கவர்னர் வாய்ந்த புகழார்
இராசகோ பாலாச் சாரியார் ஏங்கிப்

பறந்து வந்து பார்த்துத் துடித்திட
ஒருநொடிப் போதில் உயர்ந்தார் உடலம்
வெந்து சாம்பலா விழுந்ததுஅச் சாம்பலும்
எலும்பும் பலபல புனித யாறுகள்
சென்று படிந்தன. சீரியர் கண்முன்

இந்தியா விடுதலை எய்திய போதிலும்
பகைமையும் பூசலும் பறந்திட ஒருமைசேர்
வாழ்வும் உலகஒற் றுமையும் வாய்த்துச்
சிறக்கும்நாள் காணச் சிந்தித் திருந்தார்.
அந்தநாள் வருமா செய்வதே அவர்அடி

நடக்கும் பண்புடை நண்பர் செய்கடன்.
பாகித் தானும் பழையஇந் தியாவாய்
இணைந்துஇவ் உலக வழிகாட்டி ஆகி
வாழிய, உலகினர் வாழ்க.
மாமுனி மாண்பு வாழிவா ழியவே.

கணேசன் அச்சகம், திருநெல்வேலிச் சந்திப்பு. படிகள், 500

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 11 | 21 | உடையவர்க்கு | உடையவட்கு |
| 23 | 11 | எனும | எனும் |
| 29 | 3 | களக்கம் | களங்கம் |
| 86 | 12 | எனறிட | என்றிட |
| 122 | 24 | ஆவன | ஆவன. |
| 138 | 16 | அருளா | அருள் |
| 139 | 3 | அங்கிலா | அங்கிலர் |